Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

119 L.—18695/10,000.

2 372.2

6661

## REFERENCE LIBRARY.

**A complete list of Rules and Regulations can be seen on application.**

*(Extract from Rules and Regulations)*

The Reference Library shall be available to literate members of the public resident in Colombo and over the age of 14 years and shall be open daily from 8 a.m. to 6 p.m., and shall be closed on Sundays (after 11 a.m.), on Wednesdays and on Wesak day, Christmas day, New year's day and Good Friday and at such other times as the Committee may deem necessary for stock-taking or other purposes, due notice of which shall be posted in the Library.

Persons desirous of using the Reference Library must on each occasion, before entering, inform the Librarian and obtain his permission and on such permission being granted sign the Reference Library Readers' Signature Book in which he shall enter his full name, age, occupation and address (both private and official) and such signature will be taken and considered to signify assent to these Rules and Regulations.

Readers will not be permitted to take down from the shelves the books they wish to consult but they will be handed to them on application to the Librarian. All books consulted, including those referred to in the next succeeding rule, must be returned to the Librarian.

Any book in the Lending Library, except works of Fiction, may be obtained for use in the Reference Library on application to the Librarian, but it must be given up if and when required for lending out.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

To the Reader of this Book
PLEASE KEEP THIS BOOK CLEAN
DO NOT MAKE MARKS ON IT.

1334

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# APPROACH
# TO
# KINDERGARTEN TEACHING.

# பாலர்கழகக் கல்விமுறை

(ஓர் புத்தப் புதிய கல்வி நூல்)



ஆக்கியோன்

திரு. V. A. யோண்பிள்ளை

இளவாலைக் கன்னியர்மட ஆசிரிய கழக

தலைமை ஆசிரியர்

VIJAYALUCKSHMI BOOK DEPOT,
248, Galle Road,
WELLAWATTE, COLOMBO-6.
Tel: 88930

[ Rights Reserved ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at
St. Joseph's Catholic Press, Jaffna 527-38

(1)
CLASS No. 2 372.2
ACC. No. 6661
RE - BD
RE - BD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்

மேலைத் தேயங்களிற் பல்லாண்டுகளின் முன்னர் ஆரம்பமாய பாலர் கழகக் கல்விமுறைகள், நம் இலங்கைத் தீவின்கண் சில்லாண்டுகளாகவே கைக்கொள்ளப் பட்டு வருகின்றன. கைக்கொள்ளப்பட்ட காலத்தும், குறித்த முறைகள் நன்கு அறியப்பட்டனவாகவும் நடைமுறைப்பட்டனவாகவு மில்லையென்னலாம்.

"கின்டர் கார்ட்டின்" (Kindergarten) என்பது ஜெர்மானிய மொழி. "பாலரின் தோட்டம்" எனும் பதார்த்தம் பயப்பது. இஃது, "சிறுமையிற் கல்வி லையிலெழுத்து" எனும் அறிஞர் கூற்றை உறுத்து ான் எழுந்த முறையாகுமென்க. ஆசிரியர் துணை ிற்ப, பிள்ளைகள் தம் இயற்கை நாட்டங்களை வெளிப் படுத்தச் செய்தல் மூலம் அவர்கடம் மனத்தின் மூவகை இயல்புகளாகிய (1) யுக்தி (2) அகங்காரம் (3) உளச் சுவை என்பனவற்றை விருத்திசெய்தலையே அடிப்படையான நோக்கமாகக் கொண்டுள்ளது. வெற்று அறிவைப் புகட்டலையே நோக்கமாகக் கொண்டதன்று.

பிள்ளைப்பராயம் 7 வயது வரைப்பட்ட காலவெல்லையதென்பது உளநூல் வல்லுனரால் வரையறுக்கப் பட்டதோர் உண்மை. இக்காலத்திற் பிள்ளை, தன் இயல்பிற் கேற்றாங்கு வளர்தல்வேண்டுமென்பது தற்காலப் பேராசிரியர் யாவரதும் ஒத்த கொள்கையாமென்க. எனவே நல்லாசிரியர் ஒருவர் பாலரின் உடல், உளவளர்ச்சி இயல்புகள், இவற்றின் தொடர்பு என்பனவற்றை அறிதல் இன்றியமையாததாகும். அறிதலோடு நின்றுபடாது அந்தக்கரண விருத்தி, சரீரவளர்ச்சி, சமூகவாழ்க்கை என்பனவற்றில் ஒத்த பான்மையாக அவர்களை வளரச்செய்தலும் ஆசிரியரது கடனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு, பாலரைப் பூரணவளர்ச்சியுறச் செய்யாது, அவர்களது புத்திமைமாத்திரம் விருத்திபெறச் செய்தலால் நேருந் தீங்குகளோ பல. இத்தீங்கின் பயனும் சீவிய முழுவதுந் தொடருவதொன்றுயன்றோ? இதனை நிவிர்த்திப்பான்வேண்டித் தற்காலப் போாசிரியர் பலரதும் சிறந்த முறைகளைப் பின்பற்றி, விளையாட்டு, பாட்டு, அபிநயம், பேச்சு; நடிப்பு, கைவேலை எனுந் தொழில்முறைகளைத் தொடர்புபட்ட சாதனங்களாகக்கொண்டு, பாலர் கழரிக்கேற்றதோர் தனிப்பட்ட முறையை இந்நூலின்கண் மிகவும் விரிவாகக் கூறியுள்ளேன். இந்நூற்கு மதிப்புரையுதவிய வித்தகப் பெரியார்கள் இஃது, ஆசிரிய கலாசாலை மாணவர்க்கும் தமிழ் ஆசிரியர் யாவருக்கும் ஓர் சிறந்த கைந்நூலாகுமென்பதை நன்கு உறுத்தியுள்ளார்கள். ஆதலின், யான் அஃதினை மடித்துரைத்தல் ஆவசியகமன்றென எண்ணுகின்றேன்.

"குற்றங்களைந்து குணமழைந்து கொள்ளுதல்
கற்றறிந்த மாந்தர் கடன்"

**V. A. யோண்பிள்ளை**
ஆக்கியோன்.

இளவாலை, ஆசிரிய கலாசாலை
20. 7. 1938.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OPINION

BY

**MISS L. K. CLARK, DIP. IN ED. (COLUMBIA)**
**PRINCIPAL, UNION TRAINING SCHOOL, UDUVIL.**

I admire greatly the earnest and sincere spirit in which Mr. Johnpillai has tried to meet a real need, felt particularly by the students in our Tamil training schools. The Department's announcement that there would be a separate paper set in Kindergarten Method at the final examination held for students in training, has made the study of Kindergarten Method imperative in the men's as well as in the women's training schools, and this when there is so very little available along this line in Tamil. After much reading and study Mr. Johnpillai has set down briefly some of the main features of methods used by modern teachers. In this book the village teacher as well as the training school student will find practical suggestions for teaching health, speech, reading, and number through games. A number of other useful hints are also given which should make this book a helpful one to those who teach the little children of our village schools.

**L. K. CLARK**

Uduvil, Chunnakam.
12-7-38.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவில் ஐக்கிய போதனு கழக அதிபர்
மிஸ். L. K. கிளாக் அம்மையாரவர்களுதவிய

## மதிப்புரை

தற்கால ஆசிரியர் பலரதும், விசேடமாக எங்கள் தமிழ் ஆசிரிய கழகங்களிற் பயிற்சிபெறும் ஆசிரிய மாணவர் யாவரதும், உண்மைத் தேவையொன்றைப் பூர்த்திசெய்யுமாறு, திரு. V. A. யோண்பிள்ளை அவர்களது ஊக்கமும், உணர்ச்சியுஞ் செறிந்த நோக்கத்தால் ஆக்கம்பெற்ற "பாலர் கழகக் கல்விமுறை" யெனும் நூலைப் படித்து யான் பெரிதும் வியப்புறுகின்றேன்.

பாலர்கல்வி முறைகளைப்பற்றிய மூலகிரந்தங்கள் மிகக் குறைவாகவுள்ள இக்காலத்தில், ஆசிரிய கழகங்களிற் பயிற்சிபெறும் இருபாலார்க்கும் முடிவுப் பரீட்சைப்போது பாலர் கழகக் கல்வி சம்பந்தமானதோர் பாடவகை, வித்தியாபகுதியாரால் நிருவகிக்கப்பட்டமை இவ்விதமுறை ஆராச்சியை உண்டுபண்ணுவதாயிற்று. திரு. யோண்பிள்ளையவர்கள் காலாந்தர கல்விநூல்களை வாசித்தும், பயின்றும் வந்ததன் பயனைத் தற்காலப் பேராசிரியர்களால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் முறைகளுட் சிறப்பான சிலவற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

கிராமப் பாடசாலை ஆசிரியர்களும், ஆசிரிய கலாசாலை மாணவரும் பாலரின் சுகசீவியம், பேச்சு, வாசிப்பு, எண் முதலிய பாடங்களையெல்லாம் விளையாட்டுமூலங் கற்பித்தற்குவேண்டிய பிரயோகவகையான முறைகள் இந்நூலின்கண் மிகவும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. எங்கள் கிராமப் பாடசாலைகளின் சிறார்க்குக் கற்பிக்கும் ஒருவருக்கு, இந்நூல் ஓர் கைத்துணையாமாறு, பயன்றரும் மற்றும் அநேக குறிப்புரைகளும் இந்நூலின்கண் இடம்பெற்றுள்ளன.

உடுவில், சுன்னாகம், L. K. CLARK
12-7-38.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி ஆசிரிய கழக அதிபர்

## திரு. S. சுவாமிநாதன், B. A. அவர்களுதவிய

# மதிப்புரை

திரு V. A. யோண்பிள்ளை அவர்களால் எழுதப்பட்டு வெளிவந்திருக்கும் "பாலர் கழகக் கல்விமுறை" என்னும் புஸ்தகம் விசேஷமாகத் தமிழ் ஆசிரிய கலாசாலைகளிற் பயிற்சி பெறும் மாணவர்கட்கும், பாலரைப் பயிற்றும் ஆசிரியர்கட்கும், பொதுவாக ஏனைய தாரிமூசிரியர்கட்கும், தமிழறிவு வாய்ந்த பெற்றோர்கட்கும் ஒரு சிறந்த கைந் நூலாகும். இற்றை வரையில் எம் தாய்ப் பாஷையில் இத்துறையில் வெளியான புஸ்தகங்கள் மிகச் சிலவே. அவையும் பாலர் பகுதிக் கல்வி முறையைப் பற்றிப் பூரணமாகவேனும், தெளிவாகவேனும், போதிய அனுபவக் குறிப்புக்கள் அப்பியாசங்களுடனேனும் வெளிவந்தில. இப்புஸ்தகமோ மேற்காட்டிய குறைகள் பெரும்பாலும் நீங்கப் பெற்றதாய் இத்துறையில் ஒரு தனிப் பெருமை வாய்ந்ததாக விளங்குகின்றது. பாலர் கல்வியைத் திருத்திய புதிய முறையில் விருத்தி செய்ய அவாவும் ஆசிரியர், பெற்றோர், தமிழபிமானிகள் யாவரும் இதை ஆதரித்து ஆக்கியோனை மேலும் இத்தொண்டில் ஊக்குவார்களென்று நம்புகிறேன்.

சி. சுவாமிநாதன்

சைவாசிரிய கலாசாலை,

யாழ்ப்பாணம்,

14-7-38.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளீடு


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | பாலர் கழகக் கல்வியும் அதன் பயனும் .... | 9 |
| 2. | பாலர் கழகக் கல்வி வரலாறு .... | 11 |
| 3. | பாலர் கழகக் கல்வியின் நோக்கம் .... | 18 |
| | i. ஆரோக்கிய சீவியம் .... | 19 |
| | ii. ஓய்வு நேர உபயோகம் .... | 24 |
| | iii. பாந்தவ்விய வாழ்க்கை .... | 25 |
| | iv. தொழில் புரியுந் திறன் .... | 28 |
| 4. | ஆசிரியரும் பிள்ளை யுள்ளமும் .... | 31 |
| 5. | பிள்ளையின் ஐம்புலப் பயிற்சி .... | 34 |
| 6. | பாலரது இயற்கை நாட்டங்கள் .... | 36 |
| 7. | பாலரைப் பயிற்றும் ஆசிரியரது இலட்சணங்கள் | 39 |
| 8. | பாலரது இயல்பறிந்து கற்பித்தல் .... | 42 |
| 9. | "மோன்ரி சோறி" முறை (Montessori Method) | 45 |
| 10. | சுயகரும முறை (Project Method) .... | 50 |
| | பாவை வீடு .... | 52 |
| 11. | விளையாட்டு முறை .... | 55 |
| | நடித்தல் முறையாகக் கற்பித்தல் .... | 57 |
| 12. | பேச்சுப் பாடம் .... | 58 |
| | i. பேச்சுப்பாடப் பயன் .... | 58 |
| | ii. எண்ணமும் அதன் சின்னமும் .... | 60 |
| | iii. தொனிப் பிறப்பு .... | 62 |
| | iv. எண்ணக் கோர்வை .... | 62 |
| | v. பேச்சுப்பாட ஆசிரியர் .... | 64 |
| | v. சில சிறப்பான முறைகள் .... | 66 |
| | vi. சில தவறான முறைகள் .... | 74 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**13.** வாசிப்புப்பாடம் .... 76

i. அட்சர முறை, சொன்முறை, ஒலி முறை, அசை முறை .... 77

ii. பொருளும் சொல்லும், புதிய சொற்களும் 80

iii. வசன முறையும், வசன வாசிப்பும் 81

**14.** எழுத்துப்பாடம் .... 84

**15.** எண்பாடம் .... 87

i. பொருட்களைக் கையாடும் முறை .... 88

ii. பொருட்களும் மானத காட்சியும் 90

iii. பாகு பாட்டு முறை .... 93

iv. கழித்தல் முறைகள் .... 95

v. பெருக்கல் வாய்பாடு .... 97

vi. எண் விளையாட்டுகள் .... 99

**16.** கைவேலைப் பாடம் .... 108

i. காகிதம் மடித்தலும் கத்தரித்தலும் 108

ii. களிமண் வேலை .... 111

**17.** வரைதற் பாடம் .... 113

**18.** தேகாப்பியாச விளையாட்டுக்கள் .... 116

**19.** அபிநயப் பாக்கள் (முறை) .... 121

**20.** பாலர் கழக நிருவாகம் .... 124

i. நேர சூசி அமைத்தல் .... 124

ii. தளபாடம் உபகரணம் பெற்ற .... 124

iii. பாடவிதானம் தயாரித்தல் .... 125

iv. பாடத் திட்டம் .... 125

**21.** பாலருக்கேற்ற பாக்கள் .... 130


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்களின் அட்டவணை.


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பண்டிதை மரிய மொன்ரிசோறி | .... | ஆரம்பம் |
| 2. | மொன்ரிசோறி உபகரணம் | .... | 47 |
| 3. | பாட்டி வீட்டு ஒட்டைப் பானை | .... | 70 |
| 4. | பொருளும் சொல்லும் | .... | 80 |
| 5. | புத்திய சொற்களின் ஆக்கம் | .... | 80 |
| 6. | சொன்மட்டை வாசிப்பு | .... | 83 |
| 7. | எண்களின் பாட ஒழுங்கு | .... | 93 |
| 8. | எண்களின் பாகுபாடு | .... | 94 |
| 9. | எண்விளையாட்டு, மீன்குளம் | .... | 100 |
| 10. | விதைமுடிப்பு, டொமினே விளையாட்டு | | 101 |
| 11. | வாத்து வெடிவைத்தல் | .... | 102 |
| 12. | வீடுசெல்லல் .... | .... | 103 |
| 13. | மணிக்கூட்டுத் தம்பம் | .... | 104 |
| 14. | பெருக்கல் விளையாட்டு | .... | 105 |
| 15. | சங்கீத வட்டம் .... | .... | 106 |
| 16. | பழம் பொறுக்குதல் .... | .... | 107 |
| 17. | வரைதற்பாட ஆரம்பவேலை | .... | 114 |
| 18. | வரைதற்பாடத் தொடர்புவேலை | .... | 115 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டிதை, மரிய மொன்ரிசோரி
(DR. MARIA MONTESSORI)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. பாலர் கழகக் கல்வியும் அதன் பயனும்

அன்று மலர்ந்த மலர்களென என்றுங் கொண்டாடத்தகும் இயல்பினையுடைய பால்மணமருப் பசுங் குழந்தைகளாகிய புதுமலர்கள் நிற்க நடக்க ஓட ஆடப் பேசப்பயிலப் பக்குவமுடைய காலத்தில் அவர்களுக்குக் கல்வி புகட்டுவதற்காயதோர் கழகம் வேண்டப்படுவது ஆவசியகமே. மங்கலமாகிய மனை வாழ்க்கையின் பயனாகிய நன்கலன்களாம் சிறார் ஒன்று குழுமிக் கற்குமிடமே கிண்டர்காடின் (Kindergarden) என்று சொல்லப்படும் பாலர் பாடசாலையாம்.

குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக உழைத்தவர்களுள் அதி முந்தியவர் **பிளேற்றோ** (Plato) என்பவர். அவர் கூறியுள்ளது யாதெனில்: "குழந்தையானது அதன் சுயநன்மைக்காகத் தன் பெற்றோரிடமிருந்து எடுக்கப்பட்டு, குழந்தைகளைப் பராமரிக்குந் திறமையும் அநுபவமும் வாய்ந்தவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்" என்பது. "எனக்கு வேறு தாயார்களைக் கொடுங்கள். நான் உங்களுக்கு மற்றோர் உலகத்தைத் தருவேனென்று வேதபாரகராகிய **அர்ச். அகுஸ்ரீனர்** (St. Augustin) ஆர்ப்பரிக்கின்றார். மற்றோர் வித்தகப் பெரியார் கழறுவது யாதெனில் ஓர் குழந்தையானது பெற்றுக்கொள்ளுகின்ற ஒவ்வொரு 10 தண்டனைகளிலும் 9 தண்டனைகளை அது தன் தாயிடமிருந்தே பெற்றுக்கொள்ளுகின்றது என்பது. **ஸ்ரின்பேர்க்** (Strindberg) எனும் மற்றோர் சுவீடதேயத்துக் கலைக் கியானி மொழிவது: குடும்பம் குழந்தைக்கோர் பூலோக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரகம் என்பது. **பெஸ்ரலோஜி** (Pestalozzi) எனும் பேராசிரியர் வரைவது யாதெனின்: "பாவிக் குழந்தையே! நீ என் செய்வாய்? உன் தந்தை தனது காரியாலயத்துடன் (Office) கட்டுண்டிருக்கிறான். உன் தாயோ நேற்றையதினம் குதூகலமாகவும், இன்று சுறல் பிறலாற் பீடிக்கப்பட்டும், நாளைக்கோ விருந்தினருடனும் நாட்கழிக்கும் நாளொரு மனநிலை பூண்டுள்ளவள். நீ வா! உன் பிறப்புரிமையாகிய விளையாட்டுகளை அயரக்கூடிய உன் இல்லிடம் பாலர் பாடசாலையே என்பதை நினை" என்பது.

ஆதலின் வாசிக நேயர்களே! குழந்தைகள் வீடல்லாத மற்ருேர் வீட்டில் மற்ருேர் தாயாகிய ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட வேண்டு மென்பது எவரும் ஒப்புக்கொள்ளத் தக்கதல்லவா? பாலர் கழகமொன்று எத்துணை ஆவசியக மென்பதற்குக் காரணங்கள் கூறவேண்டின் அவ்வித கழகங்களிற் கற்குங் குழந்தைகள் அடையும் நயன்களையே ஈண்டு சுட்டிக்காட்டத் துணிகின்றேன். அவை:

i. பாலர் கழகத்திற் பயிற்சிபெற்ற பாலன், அதன்கண் பயிற்சியடையாச் சிறுரைக் காட்டினும், தீவிரமாகவும் இலகுவாகவும் ஐயப்பாடின்றியும் எண்ணங்களைக் கிரகிக்கின்ருன். அறிவினும் ஆராய்ச்சியினும் சாலச்சிறந்தவனுகின்ருன்.

ii. சுறுசுறுப்பு, பாடசாலை வேலைப்பிரீதி, இடையரு மனக்கிளர்ச்சி யென்பன அவனுக்கு இரண்டாஞ் சுபாவமாக மாறி விடுகின்றன.

iii. ஏனைய சிருரினும் அவன் பாடசாலை ஒழுங்குகளை வெகு நுட்பமாக அநுசரிக்கின்ருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. ஆரோக்கிய சீவியம், பாக்தவ்விய வாழ்க்கை, தொழில் புரியுந் திறன் என்பனவற்றில் அவன் மிகவும் முன்னேற்றம் அடைந்து வருகின்றான்.

v. எண், எழுத்து, வாசிப்பு, சித்திரம், சங்கீதம் முதலிய பள்ளிப் பாடங்களிற்றானும் அவன் விசேட திறமைபூண்டு விளங்குகின்றான்.

பிள்ளையின் உடல் உள ஆன்ம வளர்ச்சிகளைப் பாலர் கழகக் கல்வியானது தீவிர விருத்தியடையச் செய்கின்றதென்பது அநுபவச் சான்று. மேலும் பிள்ளையின் பிற்காலத்தேவைகள் அனைத்தையும் அவனது பாடசாலைப் பயிற்சி அடக்கியிருத்தலின் அஃது அவனது முன்னேற்றத்திற்கு இயக்க ஆதாரமேயென்க.

## 2. பாலர் கழகக் கல்வி வரலாறு

பாலர் கழகக் கல்வியின் உண்மை நோக்கத்தினையும் அதன் பயனையும் அறியவிரும்பும் எவரும் பாலர் கழகக் கல்வி வரலாற்றினை அறிதற்குப் பெரிதும் தூண்டப்படுவரென்பது எனது கருத்து. சரித்திரசம்பந்தமான முறையில், இவ்வித கழகங்களின் ஆரம்பத்தையும், அவற்றை ஸ்தாபகஞ்செய்து நடாத்திய பெரியார்களையும், அவர்கடம் மனப்பான்மையையும் அறிதல் நல்லாசிரியர்களது கடனுமன்றோ? பாலர் பயிற்சி முறைகளின் உண்மையறிவு இவ்வகைஆராய்ச்சியாற் பெரிதும் வன்மை பெறுவதாகும். பாலர்களுக்கென்றே ஓர் பிரத்தியேகமான முறை எக்காரணம் பற்றி ஆக்கம்பெறுதல் வேண்டும்? இத்தகைத்தான தனிப்பட்ட முறையால் சிறாரடையும் ஆற்றல்களெவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவாய பல துறைகளையும் பாலர் கழக சரித்திர வரலாற்றை ஆராய்வார் கண்டறிதல் இயலுமென்க.

## றெபேட் ஓவேன்
## ( Robert Owen )

தற்போது நடைமுறையிலிருக்கும் பாலர்கழகக் கல்வியானது ஸ்கொத்திலாந்து தேசத்திலே இற்றைக்கு ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் முதன் முதலாகத்தோற்றலாயிற்று. **றேபேட் ஓவேன்** ( Robert Owen ) எனும் வித்தகரே இதன் ஸ்தாபகராவர். இவர் அக்காலத்திலே பஞ்சாலை யொன்றிற்குத் தலைவராக விருந்தார். குடும்பங்களின் எசமாட்டிகளாகவிருந்த பல மாதர்கள், தங்களது நாளாந்த சீவனத்தின் நிமித்தம் குறித்த பஞ்சாலையில் வேலைக்கமர்த்தப்பட்டார்கள். இதனால் இவர்களது குழந்தைகள் தங்கள் தங்கள் இல்லிடங்களிலே தனிமையாக விடப்பட்டார்கள். பல தருணங்களில் இக்குழந்தைகள் பலவித ஆபத்துகட்கும் இலக்காக வேண்டியவர்களானார்கள்.

இவற்றினை நேர்முகமாகக் கண்டுணர்ந்த பஞ்சாலைத் தலைவர் குழந்தைகட்கு நேருங்கஷ்டங்களை நிவிர்த்தி செய்தலையே நோக்கமாகக்கொண்டு, ஒரு பெரிய அறையைத் தயாரித்து அதன்கண் குழந்தைகள் எல்லோரையும் ஒன்று சேர்த்து அவர்களைப் பாதுகாத்தற்பொருட்டு ஓர் பெண்ணையும் வேலைக்கமர்த்தினார். இவ்வாறு செய்தவிடத்தும் பாலர்கள் சந்தோஷமாகப் பொழுது போக்குதல் செய்யாமையை அவதானித்தார் அப்பெரியார். இதன் காரணம் பாலரது இயற்கை நாட்டங்களாகிய விளையாட்டு, சங்கீதம், காட்சி, நாடக நடிப்பு இவற்றிற் கேற்ற பல பொருட்கள்படங்கள் என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன இல்லாமையே யென்பதை உணர்ந்தார். காலதாமதமின்றி உடனேதானே பாலருக்கேற்ற பலவித விளையாட்டுப் பொருட்களும், கண்காட்சிக் கழகிய படங்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. மேலும் செவிக்கின்பம் பயக்கும் சிறு கீர்த்தனங்கள் பழக்கப் பட்டன.

இவ்வாறு செய்யப்பட்டபோதும் பாலர் வீண்பொழுது போக்குதலை யறிந்த வித்தகப்பெரியார், வாசிப்பு, எண், எழுத்து முதலாம் பாடங்களைப் பயிற்றுதல் நலமென நிச்சயித்து, முந்திய விளையாட்டுப் பொழுது போக்குகளை யெல்லாம் படிப்படியாக நிறுத்தஞ்செய்து குறித்த பாடங்களையே பயிற்றுதற்கு ஒழுங்குகள் செய்தார். எனவே, பராமரிப்பு முறையாக வொழுங்த சாலைகள் யாவும் முந்திய நோக்கங் குன்றுவனவாயின. பிந்திய நோக்கமாகிய படித்தலே இடம்பெறுவதாயிற்று. இப்பாடசாலையின் பிரதம ஆசிரியராக **புச்சனன்** (Buchannan) என்பவர், பஞ்சாலைத் தலைவராகிய ரொபேட் ஓவென் அவர்களால் நியமிக்கப்பட்டனர். அக்காலத்தில் கல்விப்பகுதியில் மேலதிகாரம்படைத்திருந்த **லோட்பிறவ்காம்** (Lord Brougham) என்பவர் ஓர் முறை இப்பாடசாலையைத் தரிசிக்கும்படியான தருணம் ஏற்பட்டது. அங்கு அவர் காணக்கூடியதாகவிருந்த சகல காரியங்களும பாலர் பயிற்சி வகைகளும் விசேடித்த முறைகளும் அவரது மனத்தைக் கொள்ளை கொள்வனவாயின. உடனேதானே பாலர் கழகக் கல்வி முறையை விருத்திசெய்யும் விழைவாலுந்தப்பெற்ற அவர், ஓர் சங்கத்தை ஆக்கினதுமன்றி லண்டன் பட்டண அயலில் பாலரைப்பயிற்றும் மாதிரிப் பாடசாலையொன்றும் ஆரம்பித்து நடத்த ஒழுங்குசெய்தார். மேற்படி புச்சானன் என்பவரே தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றனர். இப் பாடசாலையால், பாலர் மிக்க

பயனடைதல் சாத்தியமாதலேக்கண்ட பெரியார்கள் வேறும் பலவிடங்களிற் பல பாடசாலேகளேத் தொடங்கினர்.

## உவில்டர் ஸ்பின்ஸ்
## ( Wilder Spins )

மற்ருேர் பாடசாலே ஸ்பீற்றர் வீல்டஸ் என்ற இடத்திற் தொடங்கப்பெற்றது. இப்பாடசாலேக்குத் தலேவராக நியமனம்பெற்றவர் **உவில்டர் ஸ்பின்ஸ்** ( Wilder Spins ) எனும்வாலிப வித்தகராவர். பாலர் கழகக் கல்வியானது இவரது காலத்திலே புத்துயிர்பெறுவதாயிற்றெனலாம். இவர் தானகவே ஓர் புதிய முறையைக் கண்டுபிடித்து அதனே மிகவும் வளர்த்து யாவரும் அறியும்படியாக வெளியிட்டனர். பிரித்தானியாவின் பல பாகங்கட்கு மிவர்சென்று தமது சிறந்த அபிப்பிராயங்களேயெல்லாம் எவருமறியும்படியாக ஆங்காங்கு பல சொற்பொழிவுகள் செய்து இடங்டோறும் பாலர் பாடசாலேகளே ஏற்படுத்தச் செய்தனர். இவ்வாறு ஏற்பட்ட பாடசாலேகட்கெல்லாம் அடிக்கடி சென்று ஆங்குள்ள ஆசிரியரும் மாணவரும் பயன்பெறுமாறு தாமாகவே சில மாதிரிப் பாடங் கொடுத்தும், புதிய முறைகளே எடுத்துரைத்தும் நாட்கழிப்பாராயினர். இப் பெரியார் தமது வருவாயைப் பொருட்படுத்தாது பாலர் கல்விப் பயிற்சியை வளர்த்தலேயே நோக்கமாகக் கொண்டு நடாத்திய வாழ்க்கை மெச்சப்படத்தக்க தன்ருே? இவரால் ஆக்கம்பெற்ற பாடசாலேகள் முந்நூற்றிற்கு ( 300 ) மேற்பட்டனவெனக் கூறப்படுகிறது.

19-ம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் சாகிய நிலேமையால் ஏற்பட்ட பாலர் பயிற்சிக் கழகங்கள் 20-ம் நூற்ருண்டின் தொடக்கத்தில் பராமரிப்புக் கழகங்கள் ( Nursary School ) எனப்படும் போஷணேப் பாடசாலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் பல தோன்றுவதற்குக் காலாயிருந்தன. உவில்டர் ஸ்பின்ஸ் எனும் வித்தகப் பெரியாரால் ஆரம்பிக்கப்பட்ட வித்தியாசாலைகள் அக்காலக் கல்வியுலகால் வியப்புடன் ஆதரிக்கப்பட்டு வந்தகாலத்தும் தற்காலக் கல்விப் பயிற்சியினும் மிகவுங் குறைந்த நிலையிலேயேயிருந்தன. அக்காலம் கல்விப் பயிற்சிபெற்ற பாலர் பாடவும், தேகாப்பியாசஞ் செய்யவும், பொழுதுபோக்கான விளையாட்டுகளிற் பங்குபற்றவும், பாடங்களைப் பொருட் குறிப்பாக விளங்கவுமே விடப்பட்டனர். பாடசாலைக் கட்டடந்தானும் ஒரு பெரும் மண்டபமாகவேயிருந்தது. அதன் ஒரு அந்தத்தில் எல்லா மாணவரும் சேர்ந்திருக்கக்கூடிய படிக்கட்டாசனம் ( gallary ) இருந்தது. இக்காலத்தில் பாலர்கள் ஓர் பிரத்தியேகமான முறைப்படி பயிற்றப்படாமல், மேல்வகுப்பு மாணவர்க்குரிய சாதாரண முறையிற் கற்பிக்கப்பட்டு வந்தனர். பாடங்கள் பெரும்பாலும் மாணவ தலைவர்களாலேயே நடத்தப்பட்டு வருவனவாயின.

## விறேபெல்
## ( Froebel )

1870-ம் ஆண்டு வரையில் பாடசாலைகள் யாவும் சங்கமூலமாக நடைபெறத் தொடங்கியபோது காலகதியில் வகுப்பறைகளடங்கிய பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டு வந்தன. பாடசாலை ஒழுங்குமுறையிலும் கல்வி முறையிலும் அதிக மாற்றம் ஏற்படுவதாயிற்று. பாலரின் சுபாவ குணங்களையும் போசிக்கும் ஆற்றலையும் நன்கு விளங்கினோர் அக்காலத்தில் எவருமில்லை யென்னலாம்.

பேராசிரியர் விறேபெல் ( Froebel ) என்பவர் காலத்தில், குறித்தமுறைக ளெல்லாம் மிகவும் திருத்தமும் மாற்றமுமடையத் தொடங்கின. இவரது முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் "விரேபெலியன்" எனும் பெயரால் அழைக்கப் பட்டன. இம் முறைகள் 1854-ம் ஆண்டு இங்கிலாந்து தேசத்தில் ஆரம்பிக்கப்பட்டன. சாள்ஸ் டிக்கின்ஸ் (Charles Dickens) எனும் நூலாசிரியர் இவரது புதிய முறைகளைப்பற்றிய முழு விபரங்களையும் பத்திரிகை கள் மூலம் வெளிவிட்டுவந்தனர்

19-ம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில், விரே பெலின் சிறந்த முறைகள் இங்கிலாந்துதேசம் முழுவ தும் பரவலாயிற்று. இதன் பயனக 20-ம் நூற்றாண் டின் ஆரம்ப காலத்தில் (Kindergarden) பாலர் தோட்டக் கல்வியின் உண்மையான நோக்கமும் அதன் கண் உபயோகிக்கப்பட வேண்டிய சிறந்த முறைகளும் கையாடப்படலாயின. தற்காலத்துள்ளவாறு சுயாதீ னத்தையும், மனக்கிளர்ச்சியையும் அளிக்கக்கூடிய சிறந்த முறையில் நடாத்தப்படும் பல பாடசாலைகள் இடம்பெற்றன. அவற்றின் வளர்ச்சியும் மெச்சப்படத் தக்கமுறையில் ஏற்றம் பெறுவதாயிற்று.

## விரேபெலியன் முறைகள்

விரேபெல் எனப்படும் இவர் காலத்திலேயே குழந்தையானது சிறியதோர் வெற்றமைப்பல்ல என்ற வுணர்ச்சி தோன்றியது. அதன் விருப்பு வெறுப்பு களும், கற்கும் விதமும், கற்கும் அளவும் வயதேறி யவரினும் பார்க்க வித்தியாசமானது. வகுப்பறை ஒழுங் கும் அவர்கள்மட்டில் முழுவதும் வித்தியாசமானது. அவர்களது செயல்கள் யாவற்றினும் அவர்களது ஊக்க மிகுதியும், சைச்சுறுசுறுப்பும் எவராலும் அங் கீகரிக்கப்பட்டன. இதுவரை ஆர்வமின்றி அமைதி யாகவிருந்த பாடசாலைகள் இவரது காலத்தில் சிறந்த தொழிற் சாலைகளாகவும், விளையாட் டிடங்களாகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலரது இல்லங்களாகவும் மாறிவிட்டன. கட்டுப்பாட்டுக்கு அமையவேண்டிய நேரங்கள் ஒழிந்த ஏனைய வேளைகளில் இஷ்ட சல்லாபங்களும், ஆரவாரங்களும் இடம் பெறலாயின.

மேலும், பாலருக்குரிய இயற்கை ஆற்றல்களும் முயற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டன. வகுப்பறையிலோ அதன் புறத்தோ மாணவர் சிரித்தலும் பேசுதலும் விளையாடுதலும் ஆசிரியரால் அங்கீகரிக்கப்பட்டன மாத்திரமன்று, மிகவும் ஊக்கப்படுத்தப்பட்டும் வந்தன. எண், வாசிப்பு, எழுத்து என்ற பள்ளிப் பாடங்களிற் கவனஞ் செலுத்துவது படிப்படியாக அருகிப்போக (1) சாகிய ஒழுக்கம் (2) சுயகுணம் (3) நற்பழக்க வழக்கம் (4) கை, நா, நாட்டம் என்பனவற்றை வன்மைபெறச் செய்தல் ஆதியவற்றிற் கூடிய கவனம் செலுத்தப்பட்டுவந்தது. இவ்வாறே விரேபெலின் விளையாட்டு மூலங்கற்கும் முறையே நாகரீகவுலகம் முழுவதாலுங் கைக்கொள்ளப்பட்டுப் பாலர் பயிற்சிக் கழகங்கள் யாவற்றிலும் இடம் பெறுவதாயிற்று.

## பண்டிதை மொன்ரிசோறி
## ( Dr. Montessory )

இத்தாலி தேசத்தைச் சேர்ந்த பண்டிதை மொன்ரிசோறி அம்மையார், 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாலர் கழகக் கல்வி முறையிற் புதியதோர் கிளர்ச்சியை உண்டுபண்ணுவாராயினர். இவரது பிந்திய முறைகள் முந்திய முறைகள் யாவற்றினையும் பூர்த்தி பண்ணுவதொன்ருயிற்று. இத்தாலி தேசத்து மாத்திரமன்று, 1912-ம் ஆண்டு வரையில் இங்கிலாந்து தேசத்தும் இவரது புதிய முறைகள் பரவவே மிகவும் விரைவில் இவரது புகழும் நிலவுவதாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வம்மையாரின் புதிய முறையோடு சம்பந்தப் பட்ட உபகரணங்களே மிகச் சிறந்தன. பாலரிடை கையாடப்பட்ட (1) சுயாதீன ஒழுங்கும் (2) தனி முறைப் பயிற்சியும் புத்துணர்ச்சியைக் கொடுத்தன. உவில்டர் ஸ்பின்ஸ் காலத்தில், பாடசாலை நேரத்தில் பாலர் படிக்கட்டாசனத்தில் இருந்து பகிரங்க கூட்ட மாகவோ அன்றேல் சிறிய சிறிய கூட்டங்களாகவோ அமைக்கப்பட்டு பாட அட்டவணைகளிற் குறிப்பிடப் பட்டிருக்கும் விஷயங்களைச் சூழ்ந்து நின்று கிளிப்பிள் ளைப் பாடம்போல விருப்பின்றிக் கற்றுக்கொண்டு பொ ழுதுபோக்கி வந்தனர். இவர் காலத்து முறைகளோ முந்திய வித்தகர்களது முறைகளினின்றும் தோற்றிப் புத்துருவர் பெற்றுப் பூரண பயன் பயக்கும் பெற்றி வாய்ந்தது. இம்முறைபற்றிய விரிவை இந்நூலின் மற் றோரிடத்துக் காண்க.

❦ ❦ ❦

## 3. பாலர் கழகக் கல்வியின் நோக்கம்

பாலர் கழகங்கள் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டும், அக்கழகங்களின் கண்ணே கற்பிக்கப்படுகின்ற பாலரது பயிற்சியின் நோக்கம் நன்கு வரையறுக்கப் பட்டாலன்றி இவ்வித கழகங்களால் நாட்டிற்குநயன் வருவதேயின்று. பாலருக்கு அட்சரப்பயிற்சி, வாசிப்பு, எழுத்து, எண், சங்கீதம் முதலிய பாடங்களைக் கற் பித்தலே நோக்கமெனப் பலரும் எண்ணியுள்ளார். இவ்வித நோக்க எண்ணம் நீக்கப்படுதல் வேண்டும். ஏனெனில் பாலர் களரியின் உண்மை நோக்கங்கள் இவையென வித்தையிற் பெரியார் பலரும் வகுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுரைத்த வற்றை ஈண்டு குறிப்பிடுகின்றேன். அவை பின்வருவழி :—

1. ஆரோக்கிய சீவியம்.
2. ஓய்வு நேர உபயோகம்.
3. பாந்தவ்விய வாழ்க்கைமுறை.
4. தொழில் புரியுந்திறன்.

மேற் சுட்டப்பட்ட நோக்கங்கள் செவ்வனே நிறைவேற் றப்படுங்கால் நமது நாட்டுச் சிறார் அடையும் பயன் களோ மிகப் பலவாகும். நாட்டின் வருங்கால நிலை யும், சகோதர வாழ்வும், தொழிலபிவிர்த்தியும், நாகரீக மும் ஏனைய நாடுகளுக்குப் பின்னில்லாதவாறு பெருகுவ தாகும். சுட்டிக்காட்டிய இந்நான்கு நோக்கங்களும் நிறைவேற்றப்படவே பாலருக்கு வாசிப்பு, எழுத்து, எண் முதலாம் பாட அறிவுகளும் உடன் வருவனவா கும். எவ்வாறெனின், இவற்றினைப் படித்தல் என்ற உணர்ச்சியின்றியே (1) விளையாட்டாகவும் (2) பொ ழுதுபோக்காகவும் (3) தொழில் புரியுந் திறத்தானும் பாலர் மிகவும் இலகுவிற் பள்ளிப் பாடங்களைக் கற்றுக் கொள்வர்.

## ஆரோக்கிய சீவியம்

பிள்ளையின் கல்வியில் அதி முக்கியமானதொன்று ஆரோக்கிய சீவியமே. ஆரோக்கிய சீவியத்திற்கு வழிநடத்தாத பாடசாலைகள் பாலரைப் பாழ்படுத்து கின்றன வென்றே கூறவேண்டும். தற்காலக் கல்வி முறையும் ஆட்சி முறையும் தேசத்தின் சுகவாழ்வையே பெரிதும் காபந்து செய்யும்முறையில் அமைந்துள்ளன வென்பதை நுணுகி ஆராய்வாரெவரும் இலகுவிற் கண் டுகொள்வர். பிள்ளையின் ஆரோக்கிய வாழ்வில் அடங் குபவை பின் வருவன :—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. ஒரே வயதுப் பாலரின் சடவிகற்பம்.

ii. ஒவ்வோர் பாலரினதும் சடபெலம்.

iii. திருந்தக்கூடிய அங்கப் பிழைகள்.

iv. உடல் உளமுயற்சிகள் இரண்டும் சமத்துவமாக இருத்தல்.

v. இன்பமான உளச்சுவை.

vi. கூட்டுறவு வாழ்க்கை.

பிள்ளை வளர்ந்துகொண்டே இருக்கும். ஒரே வயதுப் பிள்ளைகளின் வளர்ச்சியில் வித்தியாசங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு பிள்ளையினதும் தேகநிலையை அறியவும் அதன் தேகத்திலிருக்கும் குறைபாடுகளைக் கண்டு பிடிக்கவும் வேண்டிய அறிவுகளை ஆசிரியர் பெற்றிருத்தல் வேண்டும். தசைநார்கள் மேலான சம நிலையை அடையச் செய்யுமுன் அவற்றுள் முக்கியமானவற்றை ஒன்றித்திருக்கச்செய்தல் மிகவும் அவசியமானது. எவ்விதத்தானும் பயிற்சிக்குமுன் வளர்ச்சியே வேண்டப்படுவது. பழக்கம் சிறிய நிலைகளிலிருந்தே உண்டாகின்ற தென்பது அநுபவம்.

தொற்றுநோய்கள், ஆகாத உண்டிவகை, கடின பிரயாசம், அசுத்தக் காற்று முதலிய தீமைகளில் நின்றும் பிள்ளைகள் காப்பாற்றப்படல் வேண்டும். பிள்ளை பூரண சுவாதீனத்தோடும் ஓடி யாடி விளையாடக்கூடிய தருணம், இடம் என்பனவற்றை ஆசிரியர் திட்டப்படுத்துதலும் வேண்டும். வகுப்பறையில் தகுந்த அளவுகளுள்ள எழுத்துப் பீடங்களும், இருக்கைகளும் போதிய அளவாக அமைக்கப்படுதல் வேண்டும். இவ்வாறே சித்திரம் வரைதற்கும் மற்றும் எழுத்து வேலைகளுக்குமாகப் பிள்ளை தனது தசைநார்களை உபயோகிக்கக் கூடிய வகையில் தக்க கருவிகள் கையாடப்படல் வேண்

டும். சடசம்பந்தம், மானசிகம், நல்லொழுக்கம், மனவெழுச்சி முதலானவையோடமைந்த சீவியவகைகள் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையன. சடசம்பந்தமான ஊக்கத்திற்கும் மானசிக ஊக்கத்திற்குமிடையிற் திட்டமான சமநிலை ஏற்படவேண்டும். இயற்கையான அந்நியோந்நிய வாழ்க்கை வழியே, பிள்ளையானது ஆரோக்கிய முறைகளை அதாவது தேகத்தைச் சுத்தமாகப் பேணுதல், பற்களைச் சிறப்பாக வைத்திருத்தல் முதலியவற்றைக் கடைப்பிடித்து ஒழுகச் செய்தல் வேண்டும்.

தங்களது வீட்டிலிருந்து முதன் முதலாகப் பாடசாலைக்கு வந்து சேரும் பாலர்களில் காணப்படும் குறைபாடுகளோ மிகப் பல. சிலர் ஒரே வயதுடையராயினும் தேகக்கட்டுக்கோப்பில் விகற்பமுடையராக இருக்கின்றனர் என முன் கண்டோம். பாண்டு வியாதியால் மாண்டுபோய் வண்டியும் தொந்தியுமாய், சொண்டு சொக்கையென்பன பிரமாணமின்றி நீண்டும் நிமிர்ந்தும் சோகைபிடித்தவராக வருபவர் சிலர். தங்கள் சிறு ஆசனங்களைத்தானும் இடம் விட்டுப் பெயர்க்க இயலாத பெலனற்றோர் இன்னுஞ் சிலர். கை கால் கழுவாதும், தலையைச் சீவிக் கட்டாதும், பல் நகம் என்பன சுத்திசெய்யாதும், ஊத்தை உடலினராயும், கந்தை உடையினராயும் வருவோர் வேறு சிலர். திருந்தக் கூடாத முடம் ஒற்றைக்கண் குருடு முதலிய அங்கக் குறையினர் ஒருசிலர். திருந்தக்கூடிய கொன்னை வாய் சொண்டைக் கிழித்துப் பேசுவோர் நாரிச் சரிவுடன் நடமாடுவோர் மற்றுஞ் சிலர்.

இவர்களெல்லாம் இவ்வாறு இருத்தற்காய காரணங்களையும், அவற்றைத் திருத்துவதற்காய உபாயங்களையும் பாடசாலை ஆசிரியர் கவனித்தல் வேண்டும். ஒரே வயதிருந்தும் சடவிகற்ப காரணம் பெரும்பாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டு வியாதியால் ஏற்படுவது. இதனை பாடசாலை வைத்தியர்களது ஆலோசனையோடு தக்க மருந்து கொடுத்து நீக்கலாகும். பாலர் தமது ஆசனங்களைத் தானும் இடம் பெயர்க்க இயலாதிருத்தற்கு நோயும், வறிய பாலரின் போஷணைக் குறைவுமே காரணமாகும். இதனைப் பிள்ளையின் பெற்றருடன் ஒத்துழைத்தல் மூலம் தக்க சிகிச்சைகள் செய்வித்தும் இடைநேரங்களில் சிற்றுண்டி பானம் என்பன கொடுத்தும் நிவிர்த்திக்கலாம். சிற்றுணவு அருந்துகையில் கை கழுவுதல், வாயலம்பல், மென்றுண்டல், எச்சிப்படுத்தாமை உணவை நிலத்திற் சிந்தாமல் உடன் மாணவர்க்கு பங்கிடு செய்தல் முதலிய நற்பழக்கங்களையும் உடன் பழக்குதல்வேண்டும். பாலர் ஒருவருக்கொருவர் தலை சீவியும் பேன்பார்த்தும் ஊத்தை தேய்த்தும் நீர் வார்த்தும் கூட்டுறவு வாழ்க்கை நடத்தப் பழக்குதல்வேண்டும். கொன்னைபடப் பேசுவோர்க்கு வெறுப்புக் காட்டாது பொறுமையுடன் திருத்தமுறப் பேசும்வரை அனுதாபத்தோடு இடங் கொடுத்தல் வேண்டும். வாயைக் கிழித்தும் சொண்டைச் சுழித்தும் பேசும்பாலரை நிலைக் கண்ணாடிமுன் விட்டுச் சரியான முறைப்படி பேசப் பழக்குதல்வேண்டும். நாரிச் சரிவுடையோரை சிரமப் பயிற்சிப் பாடங்களில் கிரமமாகக் கண்காணித்தல் வேண்டும். தலையாட்டம் பிடித்தோரை பின்புறம் நின்று நேர்படப் பிடித்தாவது திருத்தத் தெண்டித்தலும் வேண்டும்.

## பாலரின் சுகாதார சம்பந்தமாக ஆசிரியர் செயற்பாலன

1. சுத்த சுவாசத்திற்கேற்ற ஒழுங்குகள் செய்தல்.
2. விளையாட்டிற் கேற்ற போதிய இடவசதி உபகரண வசதியாதியன செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆட்டங்கள் அல்லது செயல்களும் இடையிடையே ஓய்வும் மாறி மாறி வருதற்கான ஏற்பாடுகள் செய்தல்.

4. பாடசாலைத் தளம் எப்போதும் புனிதமாகவும் ஈரலிப்பின்றியும் இருக்கச் செய்தல்.

5. பாலரது உயரத்துக்கேற்ற தளபாடங்கள் முதலியனவற்றை உபயோகித்தல்.

6. இருக்கும்போதும் நிற்கும்போதும் நடமாடும்போதும் தேகத்தை நிமிர்ந்த நிலையில் வைக்கச்செய்தல்.

7. பாலருக்கு நண்பகற் போசனம் தேவை என்பதை உணர்ந்து அதற்கான ஒழுங்குகளைப் பெற்றோரோடு அன்றேல் அரசாட்சியாரோடு ஏற்றவாறு ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல்.

8. ஒவ்வொருவரும் தத்தம் பான பாத்திரங்களைச் சுத்தமாக வைத்திருக்கச் செய்தல்.

9. போசனத்தின் முன்னும் பின்னும் மலசல விமோசனத்தின் பின்னும் கைகால்களைக் கழுவச் செய்தல்.

10. மலசல கூடங்களை ஏற்றவாறு உபயோகிக்கச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வுநேர உபயோகம்

பாலர் பெரும்பாலும் ஒரு நாளின் எல்லா நேரமும் ஓய்வுக்குரியர் என்பது வித்தகப் பெரியார் யாவரதும் ஒருமித்த கொள்கையாகும். அவர்களுக்கு விளையாட்டானது பிறப்புரிமையாக உள்ளது. அதைத் தடுப்பதானது, ஒருவரது அல்லது ஒரு சமுதாயத்தினரது உரிமையை அபகரிப்பதை நிகர்க்கும் என்று வித்தகர் பலரும் பன்முறையும் அறிக்கையிட்டுள்ளார்கள். எனவே ஓய்வு நேரங்களை உபயோகப்படுத்துமுகத்தான் பாலர் இயற்றுதற்கான சில விளையாட்டு வேலைகள் கீழ்க்குறிப்பிடப்படுகின்றன அவை,

i. களி மண்ணினால் உருவங்கள் அமைத்தல்.

ii. பலவர்ணக் காகிதங்களிற் பூவெட்டி ஆக்கல், மாலைகள் கோத்தல்.

iii. உருவங்கட்கு நிறந் தீட்டல்.

iv. கடைகளமைத்துப் பொருள் விற்றல்.

v. இலக்கமிடப்பட்ட கோட்டில் விதைப்பை முதலியன எறிந்து எண்போட்டியிடல்.

vi. சிறந்த கதைகளை நடித்தல், பாடல், அபிநயங்கள் செய்தல் முதலியன.

மேற்குறித்த பலவகைத் தொழில்களிலும் ஈடுபடுவதால் பல பாட அறிவையும் அடைதலோடு நல்லொழுக்கத்தையும் மாணவர் பெற்று, நிலைபேருன இன்ப நுகர்ச்சியை அனுபவிப்பர். குறித்த இன்ப நுகர்ச்சியைக் காட்டிலும் வாழ்க்கையை நலப்படுத்தும் நிலைபேருன இன்ப நுகர்ச்சி சிறந்ததாதலால் ஆசிரியர் இவற்றின்கண் மிகவுங் கரிசனை எடுத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வுநேர உபயோகம் வேண்டுமேற் பாலர் பாடசாலையிற் போதிய விளையாட்டுப் பொருட்கள் இருத்தல் வேண்டும். பல பாடசாலைகளிற் போதிய விளையாட்டுப் பொருட்கள் இருந்தும் அவைகள் உபயோகப் படுத்தப்படுவதாக இல்லை. பாலர் நாடோறும் அவற்றை ஓய்வு நேரங்களில் உபயோகப்படுத்தல் வேண்டும். இவ்வாறு செய்யின் மாத்திரமே அவற்றின் பயன் நோக்கிக் குறித்த விளையாட்டுப் பொருட்களைப் பாலர் பேணிவைத்திருக்கப் பெரிதும் முயல்வர்.

## பாந்தவ்விய வாழ்க்கை

பிள்ளையானது வளர்ச்சிப் பருவ நிலையை அடையாத தினாலும் அந்நியோந்நிய வாழ்வின் அநுபவம் பெற்றிராமையினாலுந் தன்னடக்கம், முயற்சி, ஆற்றல், நற்பழக்கம் ஆதியனவற்றிற் குறைவுள்ளதாக இருக்கின்றது. இப்பழக்கங்கள் உண்டாவதற்கான நிலைமைகளைப் பாடசாலை அமைத்தல் வேண்டும். பிள்ளை ஓரளவிற்குத் தன்னைப் பேணக்கூடியதாகவுந் தனது பருவத்திற்குரிய முயற்சிகளிற் குதூகலத்துடனும் முழு விருப்புடனும் ஈடுபடக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

இயல்பில் ஒரு பிள்ளையானது மற்றவர்களைப்பற்றியாவது, அன்றேல் அவரது நோக்கங்களைப்பற்றியாவது சிந்தித்தல் இல்லையாகும். அது என்றுந் தன் காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாக விருக்கும். எனினும் பாலர் மற்றோரின் ஆதரவை வேண்டி நிற்கும் இயல்பினையுடையர். ஏதுந் தேவைநோக்கி அழுதல், தமது மனம் விழைவனவற்றைத் தமதாக்கத் தெண்டித்தல் ஆதிய இயலூக்கங்கள் அவர்கள்மாட்டுத் தற்காப்பின்பொருட்டு அமைந்துள்ளன. இவைகளை உணரும் நல்லாசிரியர், பாலர்கள் விளையாட்டி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் வேறு கிருத்தியங்களிலும் பிறரை நேசிக்கக் கூடிய நிலையை அடையும்படி செய்தல் வேண்டும்.

சில விளையாட்டுகளைப் பாலர் தம்முள் ஒத்துழைப்பு முறையாகச் செய்தல், விளையாட்டுகளுக்கு வேண்டிய பிரமாணங்களைத் தாமே யமைத்தல், ஒரு சிறுவன் சொல்வது சரியாயின் அதனை ஏனையோர் அங்கீகரித்தல், குறித்த பிரமாணங்களின்படி ஒழுகுதல் முதலியனவற்றைப் பாலரிடையே பயிற்சிக்குக் கொண்டுவருதல் வேண்டும்.

இவ்வித பயிற்சிகளாற் பிள்ளையின் சுயநல விருப்பு அதாவது, தன்நலம் பாராட்டுந் தன்மைகள் படிப்படியாக அருகத் தொடங்கும். காலாந்தரத்தில் தனக்காக மாத்திரமும், முழுவிருப்புடனும் உழைத்த முயற்சிகள் பிறர்க்காக உழைக்கும் முயற்சிகளாக மாறுதல் அடையும். எனவே சனசமூகத்திற்கு நலன் தரக்கூடிய விதிகளை அது விரும்பும்படியான தருணங்களை உண்டாக்குதல் வேண்டும்.

## பழக்கவழக்க ஒழுங்குகள்

ஒழுக்கம் வித்தையினுஞ் சிறந்ததொன்று. பல வித்தைகளை நன்றாக அறிந்து கொள்வதிலுஞ் சிறந்த நல்லொழுக்கத்தைப் பெறுவதே பாராட்டப் படத்தக்கது. இவ்வாறு ஒழுக்கத்தைச் சீர்ப்படுத்த விழையும் நல்லாசிரியர் சிறாரது இயற்கை இயல்புகளை நன்குணர்ந்து அவற்றை ஆதாயமாகக் கொண்டு அவர்களது ஒழுக்கத்தைச் சீர்ப்படுத்துதல் வேண்டும். தமது பேச்சாலுந் தாம் செய்யும் செய்கைகளாலும் வரும் ஒழுக்கங்களைச் சிறந்த வண்ணம் அமைத்துப் பிள்ளையானது உலகத்தோடொட்ட ஒழுகுதற்கு இவ்வாறு நடந்துகொள்ளுதல் வேண்டுமெனக் கற்பித்தல் ஆசிரியரது கடனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாசிரியர் ஒருவர், பிள்ளைகட்கு வாசிப்பு, எழுத்து எண் என்பன போன்ற பல பாட அறிவை யான் கற்பிக்கின்றேன். இத்துடன் எனது தொண்டு முடிகின்றது என்று எண்ணுது தமது தொழில் முறைக்கோர் விரிவான வரையறுப்புச் செய்துகொள்ளல் வேண்டும். ஆசிரியத் தொண்டு வெற்று வித்தையைப் புகட்டுவதோடு நிற்பதன்று. ஆசிரியர் பெற்ருரோடு சேர்ந்து பிள்ளையின் பழக்க வழக்க ஒழுங்குகளை ஓர் ஒழுங்கான முறைக்குக் கொண்டுவருதல் வேண்டும். பாலர் பகுதி மாணவர் கற்றுக்கொள்ளவேண்டிய சில பழக்க வழக்க ஒழுங்குகளைக் கீழ்க் குறிப்பிடுவாம். அவை :—

i. பாலர் தம் உடன் மாணவருடனும் ஆசிரியர்களுடனும் ஏற்றவாறு ஒழுகப் பயிலல் வேண்டும்.

ii. பாடசாலைக்குப் போகும்போதும் வரும்போதும் எவர்க்கும் இடையூறு வராதபடி நடந்துகொள்ளல் வேண்டும்.

iii. காலந்தவருது பாடசாலைக்குச் சமுகங்கொடுத்தல் வேண்டும்.

iv. தமது பொறுப்பை யுணர்ந்து தாமே யெண்ணிக் கருமம் முடிக்கப் பழகல் வேண்டும்.

v. சுயநலம் கருதாது பிறர் சிந்தனை யுடையராக விருத்தல் வேண்டும்.

vi. நேர்மை, வாய்மை என்பன வாழ்க்கைக்கு இன்றியமையாதன வென்பதை மதிக்கவும் அநுசரிக்கவும் பயிற்றல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில் புரியுந் திறன்

நாலு வயது தொடக்கம் எட்டு வயது வரைகவுள்ள பாலர் (1) தம்மைப் பாதுகாக்கவும் (2) தம் பராயத்துக்குரிய கருமங்களை இன்பத்தோடு புரியவும் வேண்டிய வல்லபங்களையும் பழக்கங்களையும் பயின்று இருப்பதே அவர்கட்குரிய தொழில்புரியுந் திறனாகும். தொழில் சம்பந்தமாகப் பிள்ளையின் உள்ள நாட்டம் இயல்பாக எவற்றில் எவ்வாறு செல்லும் என்பதை ஆராய்தல் வேண்டும். இவ்வித நாட்டங்கள் பெரும்பாலும் இருவகை விருப்புகளிற் செல்வன. அவை :—

(1) வர்ண விருப்பு

(2) வடிவ விருப்பு.

**1. வர்ண விருப்பு :—** பிள்ளைகளின் தொழிற் பாடச் சித்தி பெரும்பாலும் பலவித வர்ணங்களுடனேயே ஆரம்பிக்கின்றது. ஏனெனிற் குழந்தைகட்கு மூந்த முந்தப் பலவித நிறங்கள்தான் ஆர்வத்துக்கு காரணமாக உள்ளன. சில வர்ணங்கள் மிகவும் உறுத்துதலான பிரகாசமுடையன. இவ்வித வர்ணங்களையுடைய பொருட்களையே, உதாரணமாகச் சிவப்பு நிறமுடைய பொம்மைகளிலும் ஆடைகளிலும் பாலரின் மனம் அதி வேகமாகச் சென்று ஈடுபடுகின்றது.

வர்ணங்கள் ஏழு வகைப்படுவன. இந்திரதனு என்று சொல்லப்படுகின்ற வானவில்லிலுள்ள வர்ணங்களைக் கவனிப்பின் அவைகள் தோடம்பழ நிறம், மஞ்சள், பச்சை, நீலம், அவுரி, ஊதா என்று சொல்லப்படும் ஏழு வகையான கெட்டி நிறங்களாக அமைந்திருப்பதைக் காணலாம். சிலரது காட்சிக்குச் சில வர்ணங்கள் செம்மையாகப் புலப்படுவதில்லை. சிலர் நிறக் குருடராகவும் இருக்கின்றனர். கெட்டி நிறங்களிலும் பல சின்ன நிறங்கள் உள்ளன. அவற்றினையும் மாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் அறியச் செய்தல் நன்று. இயற்கைப் பொருள்களைக் கையாடியுஞ் சில வர்ணங்களையும் அவற்றின் பெயரையுஞ் சொல்லச் செய்யலாம். உதாரணமாக கெட்டி நிறமாகிய பச்சை நிறத்தில் (1) மாந்துளிர்ப் பச்சை (2) இலைப் பச்சை (3) கிளிப் பச்சை முதலிய பாகுபாடுகளைக் கண்டறியச் செய்க.

மேலும், சிறு பிள்ளைகள் பலவித வர்ணங்களையும் பார்த்து அறிதல் வேண்டும். நிற வித்தியாசங்களைப் பகுத்தறியும் சக்தியும் ஏற்படவேண்டும். இதற்குப் பின்வரும் உபாயங்களைக் கையாடலாம்.

i. பலவகை நிறங்கள் உள்ள காகிதங்களைச் சிறு சிறு துண்டுகளாகக் கத்தரித்து அவற்றைக் கலந்து பின் ஒவ்வொரு பிள்ளையிடமும் பகுத்துக் கொடுத்து விளையாட்டு முறையாக நிறப் பாகுபாட்டின்படி பிரித்து வைக்கும்படி முயற்சிப்படுத்தலாம்.

ii. பல வர்ணமுள்ள நூல் வகைகளையுங் கலந்து அவற்றினை நிறங்கட் கேற்றவாறு வகுத்து ஒழுங்கு செய்யும்படி பிள்ளைகளை வேலை கொள்ளலாம்.

iii. பல நிறமுள்ள மணிகளை அந்தந்த நிறமுள்ள நூல்களிற் குறித்த ஒழுங்குமுறை அமையக் கோர்க்கும்படி பாலரைத் தூண்டிவிடலாம். இவ்வித வேலையில் எண்படித்தலும் ஒருங்கு அமையும்படி ஆசிரியர் கவனித்தல்வேண்டும்.

**2. வடிவ விருப்பு :—** பாலர் வெகு விரைவிலும் இலகுவாகவும் வர்ணங்களை அறிந்துகொள்ளுகிறார்கள். ஆனல் அவர்கள் அவ்வளவு சுலபமாக வடிவங்களை உணர்ந்து கொள்வதில்லை. முதன் முதல் வஸ்துக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் வர்ணங்களிற் சென்ற அவர்களது நாட்டம் படிப்படியாக வடிவங்களிற் செல்லும். இவ்வாறு செல்லுங்கால் பலவகைத்தான வடிவங்கள் அவர்களது மனதிற்குப் புலப்படுவதாகும். குழந்தைகள் சுயேச்சையாக விளையாடும்போது சிற்றில் கட்டியும், சிறு தேர் புனைந்தும் விளையாடுகின்ற செயல்கள் வடிவ விருப்பின் தன்மையால் விளைவன. தான் விளையாடும் வீட்டிலுள்ள பொருட்களைக் கவனித்து அவற்றைப் போன்ற வஸ்துக்களை மண்ணினாற் செய்துகொள்வதில் அதன் மனஞ் செல்லும். இவ்வாறு செய்வதால் அதன் ஆக்குஞ் சக்தியை அதிவிரைவில் விருத்தி செய்வதாகும். உதாரணமாகச் சில பாலர் களிமண்ணினால் அம்மி, அடுப்பு, உரல், உலக்கை, மோதகம், மோதிரம், மாங்காய், தேங்காய் முதலியவற்றை ஆக்கிவிளையாடுவதைப் பலகாலுங் கண்டு வருகின்றோம். இவ்வித வேலை செய்யும்போது பாலர் எண்படித்தலில் ஈடுபடக் கூடியமுறையில் அவர்களை ஆசிரியர் வழிநடத்துதல் வேண்டும். சில பலகைத் துண்டுகளை உபயோகப் படுத்தியும் மாணவர் வடிவங்களை ஆக்கப்பயிற்றுதல் வேண்டும். மேற்கூறிய பல்வகைத்தாய தொழில் சம்மந்தமான விளையாட்டுக்களாற்றான் பாலர்கள் தாமாகவே தங்கள் அறிவை விருத்தி செய்துகொள்ளுகின்றார்கள். பொருட்களின் நிறம், உருவம், உயரம், தன்மை, உபயோக முதலியவற்றைக் குழந்தைகள் விளையாட்டு மூலமாகவே தெரிந்துகொள்ளச் செய்தல் சிறந்த முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. ஆசிரியரும் பிள்ளையுள்ளமும்

உடல் நிலை எவ்வகைத்தென அறியாத வைத்தியன் சிகிச்சைசெய்வதால் வியாதிஸ்தன் அடையக்கூடிய பயன் யாதொன்றும் இல்லை. அஃதேபோல் பிள்ளையுள்ளத்தை ஆராயாத ஆசிரியரது கற்பித்தலானும் மாணவர் நயனடைதல் சாத்தியப்படுவது ஒன்றன்று. பாலரைப் பயிற்றும் ஆசிரியர் அப்பாலரது (1) உள்ளத்தன்மையையும் (2) அதன் வளர்ச்சியையும் (3) சேஷ்டைகளையும் நன்கு ஆராய்தல் வேண்டும்.

நமது உள்ளத்தினுள்ளே நிகழும் இயல்புகளையெல்லாம் அறிவிக்கும் சாஸ்திரமே மானத தத்துவ சாஸ்திரமென்று சொல்லப்படுவது. ஆசிரியர்கட்கு இச்சாத்திர சைதந்நியம் (ஞானம்) இன்றியமையாதது. இச்சாஸ்திரம் தெரிவிக்கும் உண்மைகளையெல்லாம் உள்ளத்தமைத்து அவற்றிற்கு ஏற்பவே தன் தொழில் முறையை நடாத்துதல் வேண்டும். எந்தெந்தத் தொழிலைச் செய்பவனும் அவ்வத் தொழிலுடன் சம்பந்தப்பட்ட சாஸ்திரங்களைச் சார்ந்தபடியே தத்தம் தொழில் முறைகளை வகைப்படுத்திக் கொள்ளுதலும் வேண்டப்படும்.

ஆசிரியர் பிள்ளைப் பருவத்தின் இயல்புகளையுஞ் சிறாரது மனோ நிலைமையையும் அறிந்து உள அமைதிக்கேற்றாங்கு அதனைச் செலுத்தி அறிவை இவ்வாறு வளரச் செய்தல் இயலுமென்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுதலும் வேண்டும். உளநூல் கூறுவன யாவற்றையுங் கற்றல் சாத்தியப்படாவிடினும், ஆசிரியத் தொண்டிற்கு ஏற்றவற்றையேனுங் கற்றுத் தேறுதல் வேண்டும். கற்பித்தற்கேற்ற முறைகளைச் சீர்ப்படுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக் கொள்ளவேண்டிய அம்சங்கள் மிகச் சிலவேயுள்ளன. பூர்வ அநுபவங்களை ஒட்டி நமது ஞானம் எவ்வாறு முதிர்ச்சி அடைகின்றதென்பது இவற்றுள் முக்கியமான அம்சமாகும்.

சிறார் குறித்ததோர் விஷயத்தைக் கற்கும்போது அவர்களது உள்ளத்தில் எவ்வகைத்தான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றனவென்பதை ஆசிரியர் நன்றாக ஆராய்தல் வேண்டும். இதுவிஷயத்தில் ஒவ்வொரு ஆசிரியருந் தத்தம் மனநிலையை முந்த முந்த ஆராய்ச்சி செய்துகொள்வது நன்று. இளம் பிராயத்து (1) தத்தம் மனநிலை எவ்வாறு இருந்தது. அக்காலத்து (2) எவ்வெவற்றில் மனநாட்டஞ் சென்றது. (3) அவற்றினை எவ்வாறு நிகழ்த்தியுள்ளோம் என்பனவற்றை ஞாபகத்திற்குக் கொண்டுவருதல் வேண்டும். இதனைச் சிந்தியாத பலர் முதிய பராயத்தில் தத்தம் மனதில் உதிக்கும் விருப்பங்களே பிள்ளையுள்ளத்தும் உதிப்பவையென எண்ணி ஏமாந்து போகின்றனர். பேதைப் பருவம், குழந்தைப் பருவம், பாலபருவம், எனப்படும் பருவங்களிற் சடம் நாளுக்குநாள் வளர்வது போலவே மன இச்சையும் அதன் வேகமுந் தினந்தோறும் விருத்தியாகின்றன. ஒரு பருவத்தின் கண்ணிருந்த இச்சையானது இன்னோர் பருவத்துத் திரிந்து மற்றென்றாக மாறிவிடுகின்றது. எனவே ஒவ்வொருவருந் தத்தம் சிறுபிராயத்துத் தன்மைகளை நினைந்து குழந்தைகளை அன்போடு நடத்துதல்வேண்டும். பிள்ளைகட்கு எந்தெந்த வகையில் மனக்கிளர்ச்சியும் ஊக்கமும் உண்டாகின்றனவென்பதை ஆராய்ந்து நன்றாக அறிந்திருக்க வேண்டும். தொகுத்துக் கூறின் பிள்ளையின் உள்ள இயல்புகளை (நாட்டங்களை) அநுசரித்தே அவர்களது அறிவை விருத்திசெய்யவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு செய்ய விரும்பும் நல்லாசிரியர் பின் வரும் விதிமுறைகளைக் கடைப்பிடித் தொழுகுதல் அதிக பயன்தருஞ் செயலாகும். அவை :—

1. கற்பிக்கப்படும் விஷயத்தில் விருப்பத்தையும் ஆர்வத்தையும் உண்டாக்குதல்.
2. விருப்பங் காரணமாக கற்றலில் ஊக்கத்தைப் பிறப்பித்தல்.
3. கற்றலிற் கொண்ட ஊக்கத்தை நிறைவேற்றற் காய முயற்சிகளை அவ்வப்போது ஏற்பாடு செய்தல்.
4. ஏற்பாடு செய்யப்படும் முயற்சிகள் சிறிரது சுய முயற்சிகளாக மாறும்படி செய்தல்.

பிள்ளைகளின் சுபாவகுணங்களை எவ்வாறு கை யாடுதலால் குறித்த நான்குவகைச் செயல்களையும் உண்டுபண்ணலாம் என்பவற்றைப்பற்றி ஆலோசித் தல் நன்று. பிள்ளைகளைப் பயமுறுத்திக் கற்பிக்கலா மென்று எண்ணுதல் தவறு. பயம் உள்ளத்தைப் பிடித்துள்ள நிலையிற் பிள்ளையுள்ளம் எதனையும் பற்ற மாட்டாது. அன்புள்ள ஆசிரியரிடமே பிள்ளை எத னையும் அறிந்துகொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பிள்ளையின் ஐம்புலப் பயிற்சி

பிள்ளையின் மனமாகிய வீட்டுள் அறிவாகிய பயனை வருவித்தற்கு ஐம்பொறிகளும் ஐம்பெரும் வாசல்களாக அமைந்துள்ளன. இவற்றிற் கண், செவியென்னும் இரண்டுமே மிகவும் முக்கியம் பெற்ற வாசல்களாவன. தற்காலக் கல்விமுறையில் (1) மெய் (2) கண் (3) செவி என்ற மூன்று பொறிகளுமே அதிகமாக உபயோகப்படுதலால் ஆரம்பத்தில் அவற்றின் புலன்களைப் பெரிதும் பயிற்றுதல் வேண்டும். இதனுல் மற்றும் பொறிகளாகிய நா, நாசி என்பன, அத்துணை அவசிய மற்றவையெனக் கருதுதல் வேண்டா. ஏனெனில் முறையே, சுவை, நாற்றம் என்பனவற்றையறிதற்கு இவைகளும் வேண்டப்படுவனவே. இவற்றின் பயிற்சியைப் பாலர் தங்கள் வீட்டிலேயே பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தலைச் சற்றே ஊன்றி யோசிப்பார் அறியத்தக்கதாகும்.

பொறிகளின் வழியே ஓயாது அநேகம் விஷயங்கள் பிள்ளையின் மனத்துட் சென்றுகொண்டிருந்த போதினும் மனம் அதி ஊக்கமாக உழைத்து, அவற்றைப் பொருட்படுத்திக் கொண்டாலன்றி வெற்றுப் பொறிகளும் பொறிவழியாகும் புலன்களும் மாத்திரமே அறிவாகமாட்டா. எனவே பிள்ளையின் அறிவை விருத்தியாக்குவதற்கு பின்வரும் இரண்டு அம்சங்களுமே மிகவும் அவசியமானவை யென்பது தெளிவாகும். அவை எவையெனில்,

(1) தக்க பயிற்சிபெற்ற பொறிகளின் வழியே விஷயங்களைப்பற்றிய ஞானம் மனத்துட் பிரவேசிக்கச் செய்தல்.

(2) இவ்வாறு பிரவேசித்த உண்மைகளை மனமானது ஊக்கமாக ஏற்றுக்கொண்டு அவற்றை அடிக்கடி சிந்திக்கச் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறிகளின் வழிவரும் விஷயங்களே மனத்தை விருத்திசெய்யும் உணவுப் பொருட்களாகின்றன. ஒரு பொருளைக் கண்ணிற் கண்டவுடன் குழந்தையானது (1) அதனைத் தொடுகின்றது. (2) அழுத்திப் பார்க்கின்றது. (3) மோந்து பார்க்கின்றது. (4) நாவில் வைத்துச் சுவைக்கின்றது. ஏதாவது ஒரு மலர் கிடைக்கப் பெற்றால் மோந்து பார்ப்பதோடு நில்லாது அதனைச் சிதைத்தும் பார்க்கின்றது. இவ்வாறே பொருட்களைப் பலவகையாக ஆராய்வதிற் குழந்தைக்கு இயற்கை வேட்கையும் உற்சாகமும் உண்டாகின்றன. இதுபற்றியே குழந்தைகட்குப் பலவிதமான விளையாட்டுச் சாமான்களையும் உபகரித்தல், பண்டைதொட்டு இன்று வரையுள்ள வழக்காறாயிருக்கின்றது. குழந்தைகளைக் காண்போமாயிற் பெரும்பாலும் ஏதாவது உண்பண்டம், பொம்மை, பாத்திரம் முதலியவற்றைக் கொடுப்பது நமது நாட்டின் பழைய வழக்கமாகும். அவர்களது பொறியுணர்வு இவற்றால் விருத்தியாகின்றதென்பதை உத்தேசித்தே முற்கூறியபடி நமது முன்னோராகிய பெரியோர் இவ்வழக்கத்தைக் கைக்கொண்டு வந்தார்கள். சில குழந்தைகள் எதனை எடுத்தாலும் அதனைக் கிழித்தெறியும். இவ்வாறு கிழிப்பதன் மூலமுங் குழந்தையானது சில பொருட்களின் தன்மைகளைத் தானகவே மட்டிட்டுக்கொள்ளுகின்றது. பின்னர் நாளடைவில் எந்தப் பொருளையும் நோக்கமின்றிக் கிழிக்கக்கூடாதென்ற ஞானத்தைச் சிறிது சிறிதாகக் கண்டுகொள்ளும் ஆற்றலைப் பெறுகின்றது.

இவ்வாறே பொறிகளின் வழியே உட்பிரவேசிக்கும் உண்மைகளை மனமானது முதலிற் றனக்காக்கிக் கொள்ளுகின்றது. ஆக்கப்படும் அவற்றினைப் பிள்ளையின் புத்தியானது அர்த்தஞ் செய்துகொள்ளுகிறது. ஈற்றில் அதுவே அறிவாகின்றது.

# 6. பாலரது இயற்கை நாட்டங்கள்

1. **சுறுசுறுப்பிற் பிரீதி**:—எந்தப் பாலர்க்கும் இயல்பாகவே மன மொழி, மெய்கள் அதிக சுறுப்பமைந்தவை. இவ்வுணர்ச்சியின் தன்மையை, மிருகங்களிடை நோக்கின் கன்றுகளானவை தாயுதரத்தி னின்று வெளிப்போந்த சிறிது வேளையால் எழுந்து துள்ளிக் குதித்து ஓடியாடி விளையாடக் காணலாம். இஃதொப்பவே பாலரும் நடைபழகிய சிறிது காலத்தில் ஓடியாடி விளையாட ஆசிக்கின்றனர். அவர்களுக்கு வாளா விருப்பதிலும் வேலைசெய்வதில் அதிக பிரீதியாதலின் ஆசிரியரிடுந் தொழிலைக் குதூகலத்துடன் விரைவிற் செய்து முடிக்கின்றனர். அவர்களுக்குத் தகுந்த வேலை கொடுக்கப்படாவிடின் வகுப்பிற் கவலையீனமும், சோம்பலும், சண்டை சச்சரவும் உண்டாகும். இதற்கு எதிராக மிதமிஞ்சிய வேலை இடப்படும்போது உற்சாகங் குன்றுதலுமுண்டு. ஏனெனிற் சிறாரது மனம் ஓரே விடயத்தில் நெடுநேரம் நிலையாக நிற்கும் இயல்பு அற்றது. முறைவிகற்பத்தால் நீடித்தலுண்டு. அலுப்புண்டாகுந் தருணத்தில் இன்பமாக விளையாடவாவது, சங்கீதம் பாடவாவது செய்து இச் சுபாவத்தைச் சீர்ப்படுத்தின், கவனிப்பையும் உற்சாகத்தையும் கற்றலில் விருப்பையும் உண்டுபண்ணி நல்வழிப்படுத்தி நலம் பெறச் செய்யலாம்.

2. **நூதன விருப்பு**:—சிறு பராயத்திற் பாலருக்குப் புலப்படுவன அனைத்தும் நவமாகவும் பிரீதிக்குரியனவுமாக விருக்கின்றன. அவர்கள் தம்பெற்றாரை நோக்கி "மாமா வீட்டை வருவானேன்?" "மாமி இனிப்புத் தருவானேன்?" இது என்ன? அது யார்? என்ற தன்மையாகப் பல்வேறு வினாக்களைப் பொறித்துத் தமது மனதிற் கிசைந்த விடையொன்றை அவாவிநிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றனர். சிறார் தம்மிடத்து யாதாவது பொம்மை முதலிய விளையாட்டுப் பொருட்கள் கிடைத்ததும் ஆராயுங் குணத்தால் உள்ளீடு யாதென அறிதற் பொருட்டுப் பிய்த்தெறிதல் வழக்கம். பிள்ளையானது பெற்றோர் உற்றாரிடம் இஷ்டமாக விரவுவதுபோலவே தம்மிடமும் வந்து அச்சமின்றிச் சம்பாஷிக்கவும், தன் மனக் கருத்தை வெளியிடவும் அறியாதவற்றைக் கேட்டு ஐயந்தீர்க்கவும் ஆசிரியர் ஏற்ற வழிவகைகளைக் கையாடுதல்வேண்டும்.

3. **கண்டுபாவிக்கும் சக்தி**:— பிறர் செய்வதே போன்று தாமுஞ் செய்யவேண்டுமென்கின்ற ஆசையானது பாலர்களிடம் இயல்பாகவே அமைந்துள்ளது. அவர்கள் தம் கண்ணாற் கண்டவற்றைக் கையாற் செய்ய எத்தனிக்கின்றனர். ஓர் கமக்காரன் கழனியின்கண் உழுவதைக் காண நேரிடின் தானும் அவ்வாறே உழுபடையொப்பச் சிறு தடிகளைக் கட்டித் தன்னையொத்த பாலரை எருதாகப் பூட்டி உழுகின்றான். இச் சுபாவத்தின் மிகுதியை அவன் இஷ்ட விளையாட்டுச் செய்யும்போது காணலாகும். இச்சுபாவமானது சிறாரது கவன மிகுதிக்கும் ஞாபக வலிமைக்கும் பழக்க வழக்கத்திற்குந்தக விருத்தியுறுவதாகும்.

4. **வெல்லு முயற்சி விழைவு**:—பாலர் பெரும்பாலும் ஒருவரை யொருவர் வெல்லவேண்டுமென்ற ஆசைமிக்கூரப்பெற்றவர்கள். வகுப்புச் சிறாரைச் சிரத்தையுடன் படிக்கச் செய்தற்கு இவ்விருப்பு மிகவும் ஒத்தாசையானது. இதனை வகுப்பாசிரியர் தமது விவேகத்தால் ஒழுங்குபடுத்த வேண்டுமேயன்றி முற்றாக அகற்றுதல் யுக்தியான செயலாகமாட்டாது. இஃது பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு வளர்ச்சியைக் கொடுப்பதொன்றாகும். இவ்வித முயற்சியானது நல்வழிப்படுத்தப் படாதவிடத்துப் பொறாமை, சுயநல விருப்பு, இறு

மாப்பு, ஒத்துழைப்பின்மை முதலிய பல கெடுதிகள் நுழைதற்குக் காலாகும். நற்செயல்களைக் கவனிக்கச் செய்து இவ்விஷயங்களில் அவர்களைப் போட்டியிட்டு வெல்லும்படி தூண்டுவது சன்மார்க்கப் பயிற்சிக்கு மிகவும் அநுகூலத்தைத் தருவதாகும்.

**5. இரச ஞானப் பயிற்சி :—** பாலர் அழுவதைக் காணும் அன்னையானவள், பாடல்கள் மூலம் தாலாட்டியும், சங்கீதக் கருவிகள் கொண்டு பண்கள் இசைத்தும் அவர்களது அழுகையை மாற்றி இன்புறச்செய்கின்றனள். பாலர் பன்னிறப் பறவைகளையும் வர்ணப் படங்களையும், நூதன பொருட்களையுங் கண்ணுற்று மகிழ்ச்சி யெய்துவர். எனவே பாலர் பாடசாலையானது அவர்களுக்கு மகிழ்வையும், படிப்பனவையும் உண்டு பண்ணக்கூடிய வர்ணாலங்காரஞ் செய்யப்பெற்ற பல படங்களாலும் விசித்திரமாகப் பண்ணப்பெற்ற சித்திரக் கொத்துவேலைக் கைத்தொழிற் பொருட்களாலும் அலங்கரிக்கப்பெற்றுத் திகழ்தல் வேண்டும். ஆதலின் பாலர் களரி ஓர் காட்சிச்சாலையாதல் மிகவும் பொருத்தமானதே.

**6. சுயாதீன விருப்பு :—** இவ்வுலகின் கண்ணே சகலரும் சுயாதீனத்தை அடையவே விரும்புகின்றனர். அதனை அடையவே சிரமப்படுகின்றனர். இதனையுணர்ந்தே உளநூலறிவு வாய்க்கப்பெற்ற ஆசிரிய வித்தகப் பெரியார்கள் பாலர்களுக்குச் சுயாதீனம் அளிக்கப்படல் வேண்டுமெனச் சாதிக்கின்றனர். நாம் எக்காரணங்கள் பற்றியும் பாலரது இன்ப விளையாட்டுகளைத் தடுத்துப் பெட்டியிருப்புப் பாம்புபோல் நடத்துதல் தருமமாகாது. பாலர் சுயாதீனமாகத் தங்கருமத்தைப் பார்க்கத்தக்க வசதிகளைப் பாடசாலையில் ஏற்படுத்துதல் வேண்டப்படும். வங்கத்துதித்த செங்கதிர்ச் செல்வராகிய வித்தகப் பெரியார் தாகூர் அவர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளது சாந்திநிகேதனம் எனப்படும் வித்தியாசாலைக்கண் ஆசிரியர் வினவும் வினவிற்குப் பாலர் அவரது தோளின்மீதிருந்தும் மரக்கிளைகள்மீதிவர்ந்தும் விடையிறுத்தல் இன்றுங் காணத்தக்கதே.

## 7. பாலரைப் பயிற்றும் ஆசிரியரது இலட்சணங்கள்.

பல ஆண்டுகளாகப் பாலரைப் பயிற்றும் ஆசிரியர்கள் யாதொரு பத்திரமும் யோக்கியதையும் அற்றவர்களாகவே இருந்துவந்தார்க ளென்பது யான் இங்கு சுட்டிக் காட்டவேண்டிய தொன்றன்று. அக்காலத்திற் பாலரைப் பயிற்றும் முறையும் அதற்கேற்பவே அமைந்துள்ளது. உதாரணமாக, வாசிப்புப் பயிற்றுங்கால் ஆரம்பத்தில் அட்சரங்களையும் பின்னர் சொற்களையும் அப்பால் வசனங்களையுமே படிமுறையாகக் கற்பித்து வந்தனர். இதனை இவ்வாறு செய்தற்கு முறையறிவுள்ள ஆசிரியர்கள் யாது காரணம்பற்றி வேண்டப்படுவர். பிற்காலத்திற் பாலர் கழகங்களும் பாலர் கழக முறைகளும் நாடெங்கும் பரவவே முறையறிவுள்ள ஆசிரியர்களே வேண்டப்படுவாராயினர்.

பாலரின் பாங்கறிந்து பயிற்றும் ஆற்றல் தலைப்படா ஆசிரியர்களால் யாதொரு நயனும் ஏற்படாதென்பது உணர்ந்தே வித்தியாபகுதியாரும் ஆசிரிய கலாசாலைகளிற் பாலரைப் பயிற்றும் முறைகளைப் போதனை முறையினும் சாதனைவகையினுங் கொண்டு வருதற்காய ஒழுங்குகளைச் செய்துள்ளனர். பாலரைப் பயிற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் (1) பாலரது இயல்புகளையும் (2) அவரது இயல்பறிந்து கற்பிக்கும் முறைகளையுங் கையாடுங்கால் இடைப்படுவன சில தடைகளே. அத்தடைகளை நீக்கி விடுதலே பாலர் பாடசாலை ஆசிரியரது வேலையாகு மென்பதை அவர் நன்கு உணர்தல் வேண்டும்.

ஓர் செடியின் தோற்றத்திற்கு வேண்டிய சக்தியை ஓர் வித்திலேயே அமைத்து வைத்தாரன்றோ ஈசன். அவ்வாறே ஓர் பிள்ளையின் அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய வன்மையையும் அதனிடத்திலேயே அமைத்துள்ளார் அவர். கமக்காரன் அச்செடிக்கு எருவிட்டுப் பாத்திகோலிக் களைநீக்கி நீர்ப்பாய்ச்சலாதியாந் தொண்டாற்ற அச்செடி தானே செழித்து வளருகின்றது. அங்ஙனமே பாலரது உயிர், உளம், உடல், ஆன்ம வளர்ச்சிகளுக்குத் தடங்கல் ஏற்படுங்கால் அவற்றினை நீக்கிவிடுதலே ஆசிரியரது கடனாகு மென்க. ஈண்டு சுட்டிய பாலர் இயல்புக்கேற்பப் பயிற்றவும், தடைகள் குறுக்கிடுங்கால் தக்கமுறையில் அவற்றை நீக்கஞ்செய்யவும் வல்லாராகிய நல்லாசிரியர் இவரென்பதும் பயிற்றும் முறை யிஃதென்பதும் தடைநீக்கும் உபாயங்கள் எவையென்பதும் நன்கறிந்து கற்பிக்குமாற்றல் யாருக்குரியது? பாலர்மட்டில் இத்தொண்டு பெண்பாலார்க்கே உரியதென்பதை யான் தக்க ஆதாரங்கள் கொண்டு காட்டுதல் கூடும்.

பாலரைப் பெற்றவள் பெண். பாலெனும் அமுதூட்டி வளர்த்தவள் பெண். தாலாட்டி ஓராட்டித் தூங்கச் செய்தவள் பெண். பாலர்கள் புரிந்த இன்னல்கள் யாவற்றையும் பூமகளேபோற் பொறுத்தவள் பெண். பாலராற் பெரிதும் விரும்பப்படுபவளும் பெண்ணே. பெண்பாலாருள்ளும் பிள்ளைகளை ஈன்று புறந்தந்த பண்புடைய பெண்ணே பாலரைப் பயிற்றுதற்குப் பெரிதுந் தகுதிவாய்ந்தவளென்க. (விவாகமா

கிய பெண்களை வேலைநிறுத்தஞ் செய்ய விழைவார்க்கு இந்நிலை விளக்குமாறென்னை?)

பாலரைப் பயிற்றும் முறையறிவும் பயிற்சியும் பெற்ற பெண்கள் போதிய தொகையினராகவில்லை. இதனைக் காத்திருத்தலும் விழலாகும். எனவே நல்ல அநுபவத்துடன் அன்பு அமைதி சாந்தம் பொறுமை யெனும் நற்குணங்கள் வாய்க்கப்பெற்ற, பயிற்றப்பட்ட எவரிடமும் பாலரைப் பயிற்றும் பொறுப்பைக் கொடுப்பதே செய்யத்தக்கது. ஆசிரிய கலாசாலைகளில் இருவருட, மூவருடப் பயிற்சி பெற்றலால் ஓர் அளவு அநுபவஞானம் இளம் பராயத்திலேயே ஏற்படுகின்றது. இளம் ஆசிரியர்களாயினுங் குறித்த கால அநுபவ ஞானம் படைத்தவர்கள் பெண்களேயாயின் போற்றப் படத்தக்க தொண்டுசெய்வார்களென்பதற்கு ஐயமில்லை.

பாலரைப் பயிற்றும் ஆசிரியர் பலவித இரச ஞானப் பயிற்சி பெற்றிருத்தலும் வேண்டப்படும். ஏனெனிற் பாலர் சங்கீதம், சித்திரம், நூதனவேலைப் பாடுகள் என்பனவற்றிற் பயிற்சிபெற வேண்டியவர்கள். இவர்களைப் பயிற்றும் ஆசிரியரும் இத்துறைகளிற் பயிற்சி பெற்றிராவிடின் யாது செய்தல்கூடும்? பாலர் உவப்புறும் வண்ணம் அவர்கள் அறியவேண்டியவற்றை (1) அபிநயப் பாட்டுகள் மூலமும் (2) விளையாட்டுகள் மூலமும் (3) நடித்தல் நாடகம் என்பன மூலமும் அறிவித்தலே சீரிய முறையாமென்க.

## பாலர் பாடசாலை ஆசிரியரது கடன்

i. மாணவர் அடையவேண்டிய பயிற்சியை இயன்றவரை அவர்களது வாழ்க்கையோடு சம்பந்தப்படுத்திக் கற்பித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. உடல் நலனும், உள வளர்ச்சியும், ஒழுக்கப் பற்றும் ஏககாலத்து விருத்தியடையக் கற்பித்தல்.

iii. உளச் சுவை ( Emotion ) தோன்றுமாறு கற்பித்தல்.

iv. சமுதாய வாழ்க்கைக்கு வழிநடத்தக்கூடிய பயிற்சிகளைக் கையாடி நற்பழக்க வழக்கங்களை உறுதிப்பாடு செய்தல்.

v. பாலர் அநுபவத்தின்வழியாகத் தமக்கு வேண்டிய வல்லபங்களையும் பழக்கங்களையும் அடைதற்கேற்ற சந்தர்ப்பங்களை உண்டாக்கல்.

vi. சந்தர்ப்பங்களை ஆக்கலோடு நில்லாது, தொழில் புரியுந் திறனையும் அடையச்செய்தல்.

## 8. பாலரின் இயல்பறிந்து கற்பித்தல்

நிலங்களின் தன்மையை அறிந்து கமக்காரன் அந் நிலங்கட்கேற்பப் பயிரை நாட்டுதல்போல, பிள்ளைகளாகிய நிலங்களின் தன்மையை அறிந்து கமக்காரனாகிய ஆசிரியர் அறிவாகிய பயிரை இட்டு வளர்த்தல் வேண்டும். "விறீபெல்" என்பவர் மரநிழலையுந் தோட்டத்தையுமே பாடசாலையாகக் கொண்டு பிள்ளைகளாகிய நிலங்களில் அறிவாகிய பயிரை வளர்த்தனரெனக் கூறப்படுகின்றது. அவரது பாடசாலையில் இயற்கைப் பொருட்களேயன்றிக் கண்ணாடி முதலிய செயற்கைப் பொருட்களொன்றுங் கிடையா. பிள்ளைகளின் இயல்பை யறிந்து பாடங்களைத் தெரிதலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரது இயல்புக்கேற்ற முறைகளைக் கையாட லுமே சிறந்த செயல்களாமென்க.

பாலரைப் பயிற்றும் ஆசிரியர் அவர்களது பெற்றோரைத் துணைக்கோடல் வேண்டப்படும். பெற்றோர் ஆசிரியர் மாட்டுள்ள நன்மதிப்பொன்றினை மாத்திரமே முன்னிட்டு யாதும் யோசனையின்றி ஐந்து அல்லது ஆறு வயதானதும் தங்கள் அரும்பெரும் பொருளாய பிள்ளையை ஆசிரியரிடம் ஒப்படைக்கின்றனர். அதன் சுற்றாடல் வீடும், வீட்டின் அயலுமாகவே யிருந்தன. இதனால் வீட்டுப் பழக்க வழக்கங்கள் ஒரு சிலவற்றையே பிள்ளை அறியத்தக்கதாக இருந்தது. தன்னைச் சூழ்ந்துள்ள பெற்றோர் சோதரர் இனசனர் ஒத்த வயதினர் முதலியோருடன் என்றும் உவகையுடன் கூடிவாழும் இன்பவாழ்க்கையினையன்றி வேறு வாழ்க்கையை அறியாதது. எனவே பாடசாலை வாழ்க்கை அதற்குமுழுவதும் புத்தப் புதியதொன்றாகும். இவ்வாறு பாடசாலையானது மற்றோர் உலகமாகத் தோன்றாது அதன் வீடுபோன்றிருக்கச் செய்தல் நல்லாசிரியரது கடனாகும்.

கவலை இதுவென அறியாப் பராயமுடைய இக் குழந்தை ஆசிரியரிடம் இது என்ன? அது எங்கே? உது எதற்கு? எனப் பலவாருக உசாவுகின்றது. இதனால் எதனையும் அறியவேண்டுமெனும் பேரவா அதற்குண்டென்பது தேற்றம்.

அத்தகைய தருணங்களிற் பெற்ற அன்னையொப்ப ஆசிரியர் நடந்து கொண்டாலன்றி அதற்குப் பாடசாலை வீடாமாறு யாங்ஙனம்? சுரும்பூத மலரலர்வது போன்று ஆசிரியரது முகமலர்ச்சியும் இன்சொல்லுமொன்ருகிய விடைகள் கிடைத்தக்காலன்றிப் பாலர் அகம்மலர்தல் எங்ஙனம் நிகழும்? அகமலர்ச்சி பெற்றதும் தமது சிறு அகக்கிடக்கைகள் அனைத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரறியுமாறு தமது குதலை மொழிகளாற் கூறி உவப்பரன்றோ?

பாடசாலைப் பழக்க வழக்கங்கள் தனது அநுபவத்துள்ள வீட்டுப் பழக்க வழக்கங்களோடு முரண்படுந் தருணத்து, பிள்ளைக்கு அச்சமே யேற்படுகின்றது. அச்சத்தின் காரணமாகப் பாடசாலையில் வெறுப்புண்டாகும். வெறுப்புண்டாகவே பாலர்கழகக் கல்வியின் நோக்கமுஞ் சிதைந்து போகுமென்றே கூறவேண்டும். முற்குறிப்பிட்டாங்கு பாடசாலை வீடாக மாறவேண்டும். ஆசிரியர் பெற்றோராகவும் அவரது பற்று, பெற்றோரது அன்பாகவும் மாறவேண்டும். மேலும் பிள்ளையானது பலவித தொழில்களிலும் ஈடுபடு மியல்பினை யுடையது. வாளாவிருத்தலென்பதை அறியாதது. எனினும் அது எத்தொழிலினும் அதிக நேரம் ஊக்கம் செலுத்தும் தன்மையதன்று. ஏனெனில், பிள்ளையின் புறக் கரணங்கள் அற்ப வலியினையுடையன. அதன் அகக் கரணங்களும் அத்தகையனவே. பிறர் புரியுந் தொழிலை உற்று நோக்கித் தானும் அங்ஙனமே புரிய முயலுகின்றது. இதனாற் பிள்ளையிடத்து அநுகரணபுத்தி யுண்டென அனுமானிக்க இடமுண்டு. பலவர்ண ஆடைகளையும் பொம்மைகளையுங் கண்ணுற்று மனத்திடை மகிழ்ச்சி கொள்ளுகின்றது. வீரிட்டலறிக் குளறுங் குழந்தைதானும் நாவிட்டுரைக்கும் தாயின் தாலாட்டைக் கேட்டவுடன் இன்புற்று அமைதியாதல் அநுபவத்திற் கண்டதன்றோ. இதனாற் சிறார்க்குச் சங்கீதம் இன்பத்தைக் கொடுக்கின்றதென்பதும் அது சங்கிதச் சுவையுள்ள தென்பதும் பெறப்படும். இவ்வாறே பிள்ளையானது புரியும் நூதனத் தொழில்களும் அதனது நூதன விருப்பையும் புத்திக்கூர்மையையுங் காட்டுவன என்பதைக் காட்டுதல் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. மொன்றிசோறி முறை

## ( Montisory Method )

மொன்றிசோறியென வழங்கப்படும் இச் சிறந்த முறையானது பாலரைப் பயிற்றுவதற்கு மிகவும் வாய்ப்புடைத் தொன்றென்பது வித்தகர் பலரும் ஒத்துக்கொண்டதோர் உண்மையாகும். இந்த முறைக் கல்வியை ஆரம்பித்த டக்ரர் மரிய மொன்றிசோறி என்பவ ரோமாபுரியிலுள்ள பல்கலைக் கழக மொன்றில் உத்தியோக கடமைபுரிந்து வந்தார். கி. பி. 1900-ம் ஆண்டு வரையில் இவர் மந்தமாணவரின் கல்விப் பயிற்சியிற் பெரிதும் விருப்புக்கொண்டு 19-ம் நூற்றாண்டில் மந்தமாணவர் கல்வியில் ஈடுபட்டிருந்த “ இத்தாட் ” “ செருவின் ” என்னுமிரு பிரான்சிய வைத்தியர்களின் முறைகளைக் கற்று ஆராய்ச்சி செய்து வந்தார். இதன் பயனாக மந்தமாணவரைக் கற்பிக்கும் முறைகள் சாதாரண பாலரைக் கற்பிக்கும் முறைகளினுந் திருத்தமானவையென அறிந்தார். இம்மாது சிரோன்மணி 1906-ம் ஆண்டில் ரோமாபுரியிற்றானே சில வீடுகளை வாடகைக்கு அமர்த்திப் பல பாலர்களையும் ஒன்றுசேர்த்துக் கற்பிக்கும் பெருந்தொண்டில் ஈடுபடுவாராயினர். மூன்று வயது தொடக்கம் ஏழு வயது முடியவுள்ள பிள்ளைகள் ஓர் கூட்டமாகச் சேர்க்கப்பட்டு ஓர் அறையிற் கற்க வைக்கப்பட்டனர். இவ்வித பாடசாலை முதன் முதல் 1907-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இது பாடசாலையென்னும் பெயரால் வழங்கப்படாது பிள்ளைகளின் வீடாகவே அறியப்பட்டது. மொன்றிசோறி அம்மையார் தமது புதியமுறைக்கண் ஆதரித்த கொள்கைகளுட் சிறந்தவை பின்வருவன இரண்டுமே. அவை :—

(1) பிள்ளையானது வளர்ச்சியடையும் சடத்தையும்

(2) விருத்தியுறும் ஆன்மாவையும் உடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலின் இவை இரண்டும் யாதொரு பேதமுமின்றி ஒருங்கு விருத்தியுறுமாறு கல்விமுறை அமைக்கப்பட வேண்டுமன்றோ. இவ் இருவகை வளர்ச்சிக்கண்ணும் தெளிதற்கியலாது கரந்திருக்குந் தத்துவங்களைத் தடை செய்யாது அவை, ஒன்று மற்றொன்றாகத் தோற்றும் உண்மைகளை ஆராய்வு செய்துவருதல்வேண்டும். இவ் வம்மையாராற் பாலரின் கல்வி விருத்திக்காகச் செய்யப்பட்டவைகள் பின்வருவன. அவை :—

i. பிள்ளைகள் இஷ்டப்படி உலாவக்கூடிய சுற்றுடல்களை ஒழுங்குபண்ணுதல்.

ii. வேண்டிய நேரத்து விரும்பிய இடத்திற்குப் பாலரே கொண்டு செல்லக்கூடிய இருக்கைகள் தயாரித்தல்.

iii. புறம்பாக அமைக்கப்பெற்ற பாலர் பாடசாலையின் அண்மையிற் பூந்தோட்டமொன்று ஆக்குதல்.


iv. பாலருக்குப் போதிய சட இஷ்டங் கொடுத்து நடத்துதல்.

v. பிள்ளைகள் தாங்கள் புரியவேண்டிய வேலையை வேலையின் இன்பத்திற்காகவே செய்யும் ஆற்றலைப் பெறச் செய்தல். இவ்வாறு செய்யின் மனோ இஷ்டங் கொடுத்தற்காக வெகுமதி வழங்கலும் தண்டனை கொடுத்தலும் வேண்டாவாகும்.

vi. பிள்ளைகளின் இயற்கை நாட்டங்களை அவதானித்து அவற்றிற்கேற்பவே கற்பித்தற்குவேண்டிய உபகரணங்களை ஆக்கி அவற்றினை அவர்களே கையாடும்படி செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொன்ரிசோறி உபகரணம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்க உபகரணங்களே பாலரின் பலவித முயற்சிகட்குந் தூண்டுதலாகவும் அவர்கள் தம் முயற்சிகளை வழுவின்றித் திருத்தமுறச் செய்தற்கு வழிகாட்டிகளாகவும் உள்ளனவென்பது அவ்வம்மையாரின் பெருங்கொள்கை. குறித்த உபகரணங்களை உபயோகித்தலினாலேயே பாலர் பலவித புலப்பயிற்சிகளையும் பெற்றுக்கொண்டனர். இத்துடன் படிமுறையான உபகரணங்களின் பிரயோகத்தால் எண், எழுத்து, வாசிப்பு முதலிய பாடங்களையும் படிக்கச் செய்யலாம் என்பது இவரது மற்றோர் கொள்கையாமென்க.

மேலும் பால பாடசாலை ஆசிரியர் தமது வேலையின் பெரும்பாகம் பாலர்களை மரியாதையுடனும் ஆர்வத்துடனும் ஓர் சிறந்த மானத தத்துவ சாஸ்திரியையொப்ப அன்னாரது வேலையை அவதானிப்பதேயென்று அவ்வம்மையார் வற்புறுத்திக் கூறுகின்றார். வேண்டியவிடத்து இடையிடையே பொருட்களைக் கையாடுவதினாற் பாஷைபற்றிய பாடத்தில் தேவையெனக் காணும் உதவிகள் ஆசிரியராற் கொடுக்கப்பட்டன. ஆசிரியர் தாமே தமது சுய எண்ணங்கொண்டு எதனையும் எவருக்குங் கற்பிக்கும் வழக்காறு இவரது முறைக்கண் கிடையாது. எனினும் பாலர் தமது சுய ஆற்றல்கொண்டு படிக்குந் தருணங்களில் அவர்களது அபிலாஷை காரணமாக உதவி வழங்கப்படும். பாலர் தமக்கு விளங்காத விடயங்களைத் திரும்பப் படித்தல் அலுப்பெனக் காணுங்கால் அவ்விடயங்கள் பின்போடப்பட்டு அவர்களால் அவற்றின் தேவை உணரப்படும்போது கற்பிக்கப்பட்டு வந்தன.

மொன்றிசோறி முறையிற் கையாடப்பட்டு வந்த சிறப்பான படிப்புகளுள் மேலுஞ் சில பின்வருவன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை :—

i. பிள்ளைகட்குத் தனிமுறையில் தன்னிஷ்டம் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது.

ii. சமூகப் பயிற்சிகளே சிறப்பாகக் கற்பிக்கப்படுகின்றன.

iii. பாலர் தம்முள் ஒருவர் ஒருவர்க்குச் சுயேச்சையான உதவிபுரியத் தூண்டப்படுகின்றனர்.

iv. திருந்தம் பாடசாலை ஆரம்பத்திற் சுத்தம், ஒழுங்கு, நடைப் புனிதம், சமூக சமாதானம் முதலியவற்றை விருத்தி செய்தற்கேற்ற அப்பியாசங்கள் பயிற்றப்படுகின்றன.

v. இயற்கைப்பாட அறிவுபற்றிப் பாடசாலைத் தோட்டத்திற்கு அழைக்கப்பட்டு இயற்கை விசேடங்களை அவர்களே கவனிக்கும்படி விடப்படுகின்றனர்.

vi. களிமண்ணினாற் செங்கற்களும் பாத்திரங்களுஞ் செய்து தொழிற்றிறன் பெறுகின்றனர்.

இவ்வித சிறப்பான படிப்புகளாலும் வேலைகளாலும் பிள்ளையானது வருங்காலத்தைப்பற்றி ஏலவே சிந்திக்க வழிநடத்தப்படுகின்றது. இப்புதிய முறையைத் தொடக்கியதால் மொன்ரிசோரி அம்மையார் பாலரின் வேலையை நியாயமும் நியதியுமான முறையாக அமைக்கவும் பாலருக்குத் தன்னிஷ்டங் கொடுக்கவும் கல்வியுலகத்திற்கு முன்னோடியானர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. சுயகரும முறை

## (Project Method)

கற்கும் ஒருவர் வாழ்க்கை நயனை யடைதலே கல்வியின் நோக்கங்களு ளொன்றெனக் கருதப்படுகின்றது. எனவே வாழ்க்கைக் கருமங்களைக்கொண்டு கல்விப்பயன் யாவையும் அடைதற்குச் சாதனமாயுள்ள சுயகருமமுறை (Project Method) ஓர் சிறந்த முறையே யாகும். இச் சிறந்த முறையானது அமெரிக்க வித்தகர் யோண் டியூஇ (John Dewey) எனப்படும் பெரியாரால் எடுத்தாளப்பட்ட தொன்று.

தமது பாடசாலை வாழ்க்கையில் முதலாம் வருடத்தில் முதன் முதல் பாடசாலைக்கு வந்து சேரும் பிள்ளைகட்கு இம்முறையைக் கையாடுவதால் அதிக பயன் விழையுமென்பதற்கு ஐயமேயின்று. மாணவரது வீட்டோடும் அதன் சார்பான செயல்களோடும் சம்பந்தப்பட்ட விஷயங்களே சிறுர் கற்கவேண்டிய ஆரம்ப பாட விஷயங்களாவன. அதாவது வீடானது சிறுரின் உலகமாக மாறவேண்டும். அவ்வாறு மாறுங்கால் விளையாட்டின்பந் தொனித்துக்கொண் டிருத்தலும் வேண்டும். சிறுரது பாந்தவ்விய சிறு வாழ்க்கைக்கண் வளர்ந்தவர்கள் இயற்றுஞ் செயல்களைக் கண்டு பாவித்துப் பிரதிச் செயல்புரிய எத்தனித்தலே அவர்களது இயற்கை நாட்டமாகும்.

மேலும் பாலரைப் பயிற்றுவதற்கு, சுயகரும முறையாகிய இம்முறை எவ்வளவிற் கெப்பயன் தருமென்பது பின்வரும் முறை யளக்கத்தால் நன்கு விளங்குவதாகும். பாலர் கற்றுக்கொள்ள வேண்டுமென ஆசிரியர் விழையும் விஷயமானது அவர்கள் தாமாகவே செய்து முடிக்கக் கருதும் ஓர் வேலை (கருமம்) யாக இருத்தல் வேண்டும். குறித்த வேலை அல்லது கருமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேடித்த நான்கு இலட்சணங்களைக் கொண்டதாக இருத்தலும் வேண்டும்.

i. பாலரது உணர்ச்சிக்கும் ஜீவனத்திற்கும் சுற்றுடலுக்கும் வேண்டப்படுவ தொன்ருக வேண்டும்.

ii. அவர்களது அநுபவத்திற்கு எட்டியதும், அறியப்பட அல்லது ஆராயப்பட வேண்டியதாததலும் வேண்டும்.

iii. பாலர் அநுபவிக்க விரும்பும் செயல்களுள் ஒன்ருதல்வேண்டும்.

iv. அவர்கள் அடையவேண்டிய தோர் திறமையாக இருத்தலும் வேண்டும்.

பாலரால் இயற்றப்படும் குறித்த ஒரு வேலை அல்லது கருமம் ஒரு நான்கு இலட்சணங்களைக் கொண்டிருப்பது போலவே அநுகூலமாகச் செய்யப்படுதற்கண்ணும் மற்ருெரு நான்கு படிகளின் கீழ்ப்பட்டதாதலும் வேண்டப்படும். அவை எவையெனின் :—

i. கருத்திற் கொள்ளல் (Purposing)

ii. வழிவகை வரையறுப்பு (Planning)

iii. நிறைவேற்றுதல் (Executing)

iv. சீர்தூக்கல் (Judging)

சுயகரும முறைவழிப்பட்ட வேலைகள் அல்லது கருமங்களுட் சமூக வாழ்க்கையோடு சம்பந்தமுடையனவே சிறந்தன ஆவன. பாலர்களரியிலேதானே இவ்வித பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவேண்டும். உதாரணமாகத் தான் ஒரு சில பயிற்சிகளை இதன் கீழ்க் குறிப்பிடுவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவை வீடு
## (Doll House)

பாலர் கீழ்ப்பிரிவிலே ஓர் அழகிய பாவை வீடு இருந்தது. அது ஒரு சில வருடங்களாக உபயோகிக்கப்படவில்லை. இதனாலே அது முழுவதுஞ் சிதைவுற்றிருந்தது. அதை மறுபடியுந் திருத்தி அமைப்பிக்க வேண்டுமெனும் ஆவல் ஆசிரியை அம்மாளுக்கேற்பட்டது. குறித்த அம்மாள் "சுய கரும முறை" அறிவு நிரம்பவும் வாய்க்கப்பெற்றவர். பாலரைக் கொண்டே அவ்வேலையை விளையாட்டாகவும் நோக்கங்கொண்ட செயலாகவும் செய்விக்கவேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டு ஓர் உபாயத்தைக் கையாட ஏவப்பட்டார்.

ஒருநாட் சிறிதும் பெரிதுமான ஆண், பெண், குழந்தைகளைக் குறிக்கும் உருவங்களமைந்த சில பொம்மைகளை வகுப்பிற்குக் கொண்டுவந்தார். விவேகமுள்ள அந்த ஆசிரியை பாலரைப் பார்த்து "இந்தத் திருவாளர் பொம்மையும், பொம்மையம்மாளும், குழந்தைகளும் இருக்க வீடில்லாது வருந்துகிறார்கள். ஐயோ பாவம்! சென்ற இராத்திரி சமைக்கவும் இல்லையாம், நித்திரைகொள்ளவும் இல்லையாம்" என்று மிக அநுதாபங்காட்டிப் பேசினார்.

பொம்மைக் குடும்பத்தைப் பார்த்ததும், ஆசிரியை கூறிய செய்திகளைக் கேட்டதும் பாலர் முகத்தில் அவர்களை அறியாமலே துக்கக் குறிகள் தோன்றின. பாவைக் குடும்பம் பிள்ளைகளுடைய சிறிய இருதயங்களைக் கொள்ளை கொண்டுவிட்டதால் அவர்கள் ஆச்சரிய வசத்தராய், பல கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தனர். பாவைக் குடும்பத்திற்கு ஏதாவது உதவி புரிய வேண்டுமென்ற பேராவல் பாலரது மனதிற் பொங்கியது. இவர்கள் வசிப்பதற்கு வீடொன்று உண்டோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்று ஆசிரியை கேளாமற் கேட்ட கேள்வி பாலரை மிக்க யோசனையில் ஆழ்த்தியது.

ஒருவர் அவர்கட்கு எதுவிதமும் ஓர் இல்லிடம் அமைத்துக் கொடுப்பதற்கு யோசனை கூறினர். ஆனல் வீடுகட்டி முடிக்கும் வரைக்கும் பாவைக் குடும்பம் எங்கேயிருப்பது? என்னுங் கேள்வியைப் பொறித்தார் மற்றொருவர். எவரும் இவ்வினவிற்கு விடைபகர்வதாகக் காணவில்லை. பள்ளிக்கூடத்திலுள்ள பாவை வீட்டில் அவர்களை இருத்திஞல் நல்லதென்று தாஞகக் கூறாது பாலருடன் சேர்ந்து ஆலோசனைபண்ணிச் சில பிள்ளைகளை அந்த வீட்டைப் பார்வையிட்டு வரும்படி அனுப்பினர் ஆசிரியர்.

அவ்வீட்டின் முன்புறத்தில் "வாடகைக்கு விடப்படும்" என்று எழுதித் தொங்கவிடப்பட்ட விளம்பரத்தைப் பிள்ளைகள் கண்டு அதிசயித்தனர். முதலில் அதை வாசித்து விளங்கிக்கொள்ள இயலாததினல் அட்டையில் வரையப்பட்டிருப்பது என்ன என்று அறிய ஆசைப்பட்டனர். வீட்டைச் சோதித்துப் பார்த்தபொழுது அவ்வீட்டிலிருந்தவர்கள் தங்களது தட்டுமுட்டுக்களையும் எடுத்துக்கொண்டு அதனைக் காலி செய்திருப்பதாக அறிந்தார்கள். சில பிள்ளைகள் காலி வீடுகளில் அப்படிப்பட்ட விளம்பரங்களைப் பல இடத்துங் கண்டதாகச் சொன்னுர்கள். எனினுங் குறித்த விளம்பரத்தை எடுத்துக் கொண்டுபோய், தங்கள் ஆசிரியையிடம் வாசித்துக் காட்டும்படி கேட்டார்கள். தாங்களும் அவர் வாசித்துக் காட்டினபடியே பல முறையும் வாசித்து இன்புற்றுர்கள். ஈற்றிற் பொம்மை குடும்பத்தை அதிலே குடியிருத்த முழுவிருப்பமுங் கொண்டு அவ்வாறே செய்தார்கள்.

அடுத்தபடியாக ஆசிரியர், வீட்டுக்குரிய தளபாடங்களை எவ்வாறு தேடிக்கொடுக்கலாம்? என்று பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை வினவினர். அவற்றினைத் தாங்களே செய்து முடிப்பதாகப் பிள்ளைகள் ஒரேவாக்காகக் கூறினர்கள். சிலர் கட்டிலொன்று செய்வதில் ஈடுபட்டனர். ஒரு சிலர் நெருப்புக் குச்சுகள் கொண்டு நாற்காலிகள் செய்ய முயற்சிப்பட்டனர். பெண்பிள்ளைகள் சிலர் சிறு துண்டுச் சேலைகள் கொண்டு திரைப் புடைவைகள் செய்ய ஆரம்பித்தனர். வேறுஞ் சில சிறுமிகள் குழந்தைகட்கு உடுப்புத்தைக்கத் தொடங்கினர். எஞ்சியோர் வீட்டிலுள்ள பழுதுகளைத் திருத்தி அமைக்க முன்வந்தனர்.

வேலைகள் முடிந்ததும் பிள்ளைகளிடையே இஷ்ட சல்லாபந் தொடங்கியது. திருவாளர் பொம்மையுடைய குடும்பத்தைப்பற்றிய பேச்சே பாடசாலை நேரம் முழுவதும் பெரும் பேச்சாக இருந்தது.

இவ்வாறே குறித்த பாலர் களரியிலே வருடம் முழுவதும் சுயகரும முறைகொண்டு "பாலர் கடை" "தபாற் கந்தோர்" "புகையிரத ஸ்தானம்" முதலிய வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட செயல்கள் மூலம் பிள்ளைகள் பலவித கல்வியையுங் கற்று வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. விளையாட்டு முறை

பாலர் உவப்புறும் வண்ணம் அவர்கள் அறியவேண்டுவன எவற்றிளையும் விளையாட்டுகள் மூலங் கற்பித்தல் சிரிய முறையென்க. "விளையாட்டானது பிள்ளைக்குப் பிறப்புரிமையாக உள்ளது. அதைத் தடுப்பதானது, ஒருவரது அல்லது ஒரு சமுதாயத்தினரது உரிமையை அபகரிப்பதை நிகர்க்கும்" என்பது அறிஞர் பலரதுங் கூற்ருகும். சிற்றில் கட்டியும், சிறுபறை கொட்டியும், சிறு தேராடியும், சிற்றுண்டி ஆக்கியும் விளையாட்டயருங்கால், கற்பிக்கப்படக் கூடிய பாடங்களோ மிகப் பல. இத்தருணங்களிற் பாலர் தாம் இன்னது படிக்கின்ருேம் என்ற எண்ணமின்றியே வாசிப்பு, எழுத்து, எண், கைவேலை, சித்திரம் முதலாம் பல பாட அறிவைப் பெற்றுக்கொள்ளச் செய்யலாம்.

மேலும் பாலர் பெரும்பாலும் சும்மாவிருக்குஞ் சுபாவமுடையவர் அல்லர். சுராக்கு மனமுடைய அவர்கள் எப்போதும் ஏதோ ஒன்றில் ஈடுபடும் விருப்புடையர். அவ்விருப்பும் ஓயாத விளையாட்டோடேயே சம்பந்தப்பட்டிருத்தலும் இயல்பாகும். குழந்தைகள் வெளியிடங்களில் விளையாட்டயரும் நேரம் வீண்பொழுது அன்று என்பது உளநூலார் கொள்கையாகும். ஏனெனில், விளையாடுந் தோறும் அவர்களது மனமானது சலனப்பட்டுத் தீவிர வளர்ச்சியை அடைகின்றது. எனவே பாடங்களைப் படிக்கும் நேரங்கள்தான் முக்கியமான காலம் என்று எண்ணுவது தவருகும். விளையாட்டுநேரங்களில் அவர்கள் தம் சுபாவ உணர்ச்சியோடு அநேக காரியங்களைக் கற்று உணர்ந்து உளவிருத்தியடைவதோடு சட வளர்ச்சியையும் பெற்றுக் கொள்ளுகிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுமுறை ஆசிரியராகவிருந்த வித்தகர் கோல்ட்வெல் குக் (Caldvel Cook) என்பவர் கற்குஞ் சிறார்க்குக் கஷ்டமாகத் தோன்றிய கல்விப் பயிற்சியை, கவர்ச்சிக்கும் ஆர்வத்திற்கும் இலக்காக்கியதினால் இலகுவாக்கிக் கற்றலானது சீவியத்தின் இன்ப நுகர்ச்சிகளுளொன்றாக இருத்தல்கூடுமெனும் பெருங் கொள்கையை கல்வியுலகத்தின்கண் வலியுறுத்தியுள்ளார்.

சாதாரண பாடசாலைகடோறும் விளையாட்டு முறைகள் கையாடப்பட்ட போதிலும் இம்முறையின் உண்மையான நோக்கமும் பயனும் அவற்றிற் சித்திப்பதாகவில்லை. ஏனெனில் விளையாட்டு முறையைப் படிப்பித்தற்கு ஏற்றதோர் முறையாகக் கொள்ளாது, வெற்று விளையாட்டுகளாக மாத்திரம் முறைகேடாகக் கையாடிப் பாடசாலையை ஓர் நாடகசாலையாகவும் பொழுதுபோக் கிடமாகவும் மாற்றிவிட்டமையாகும். வித்தகர் குக் என்பாரின் உளக்கிடக்கை இதுவன்று. விளையாட்டு முறையின் பயனைப் பிள்ளைகள் பலவித வெற்று விளையாட்டுகளை மாத்திரம் பழகிக்கொள்வது கற்றலாகமாட்டாது. பிள்ளையானது தான் கற்றுக்கொள்ள வேண்டிய பள்ளிப்பாடங்களை யெல்லாம் (1) மிக்க ஆர்வத்துடனும் (2) மிகுந்த விழைவுடனும் (3) கூடிய சுயேச்சையுடனும் விளையாட்டு வழிச் செய்து கொள்ளும் வேலையென்பது அவரது கொள்கையாகும்.

விளையாட்டு முறையானது படிப்பித்தற் கேற்ற மிகச் சிறந்ததோர் சாதனம் என்பதற்குப் பல நியாயங்கள் உள்ளன. அவற்றிற் சிலவற்றை ஈண்டு சுட்டுவாம். அவை :—

i. பிள்ளையின் இயற்கை நாட்டங்களுக்கு ஏற்றதோர் முறையாகின்றது.

ii. பிள்ளையானது முழு ஆர்வத்துடனும் விழைவுடனும் செய்யும் வேலையாதலாற் படித்தல் எப்பொழுதும் அநுகூலமாக முடிவதொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. பிள்ளை கற்பவை எல்லாம் அதன் வாழ்க்கையோடு நேரான முறையாகவும் பயன்தரு வகையினும் சம்பந்தப்பட்டு விடுகின்றன.

iv. பாடசாலைக் கல்வி விருத்திக்கண்ணும், ஒழுக்கத்தின்மேலும், பிள்ளையின் சுய முயற்சியும் தற்பொறுப்பும் அதிகப்பட ஆசிரியரது வேலை இலகுவாக்கப்படுகின்றது.

v. மற்றும் முறைகளைப் போலாது, இம் முறையானது தன்னிலேதானே ஓர்கதியாக அமைந்துள்ளது.

vi. பிள்ளை தான் கற்கும் எதனையும் ஓர் நோக்கங் கொண்ட செயலாகச் செய்து முடித்தற்கு இம்முறை பெரிதும் உதவியாகின்றது.

## நடித்தல் முறையாகக் கற்பித்தல்

விளையாட்டு முறையோடு சம்பந்தப்பட்ட நடித்தல் முறையென்பது மற்றொன்று. வின்லே யோண்சன் (Miss. Findlay Johnson) எனப்படும் அம்மையாரால் இம்முறை பெரிதும் அநுகூலமான வகையில் நாட்டப் பட்டுள்ளது. நடித்தலின் நோக்கமாகப் பிள்ளையானது எதனையுஞ் செய்யத் துணிகின்றது. சுயேச்சையாகச் செய்கின்றது. எத்தனையோ செய்யுட்பாகங்களையும் வசன பாகங்களையும் மிகவும் இலகுவில் மனனஞ்செய்து கொள்ளுகின்றது. செய்யுட்களைத் தானே ஆக்கவும் நாடகங்களை எழுதவும், உபந்நியாசங்களைச் செய்யவும் நாட்டம் ஏற்படுகின்றது. வகுப்பு ஆண்டு நடாத்துகையும், கற்றற் பொறுப்பும் பிள்ளையின் சொந்த அலுவல்களாக மாறிவிடுகின்றன. காலாந்தரத்தில் நாட்டின் பெருமகனாக வருதற் கேற்ற ஆற்றல்களைப் பிள்ளையானது விரைவிற் பெற்றுக் கொள்ளுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை படிக்கவேண்டிய எந்தப் பாடத்தையும் நாடக ரூபமாகப் படிப்பித்தல் இயலுமெனினும் வாசிப்புப்பாடக் கதைகள், பேச்சுப்பாட சம்பந்தமான சரித்திரங்கள், கதைகள், சுகாதார இயக்கங்கள் என்பனவற்றை எப்பொழுதும் நடித்தல் முறையிற் கற்பித்தல் அதிக பயன் தருவதாகும். அப்பியாச வேலைகள் யாவும் பெரும்பாலும் நாடக ரூபமாகக் கற்பிக்கப்படலாம். இவ்வாறு செய்யும்போது பாலர்களே கருமஞ் செய்வோராகவும் ஆசிரியர் வழிகாட்டியாகவும் ஆகின்றார்கள். நாடகமுறையில் ஓர் பாத்திரத்தின் இடத்தைப் பெறும் பாலன் தன்னை மற்றொருவராகப் பாவித்து நடிக்கின்றான். அவ்வாறு நடிக்குந்தோறும் அவனது மனதிற் படியும் எண்ணங்கள் ஒருபோதும் அவனை விட்டு நீங்கமாட்டா.

நாடக பாத்திரங்களைத் தெரிவு செய்யும்போது ஆசிரியர் தமது விவேகத்தைக் கையாடியே கருமம் பார்க்கவேண்டும். தமது யுத்தியான ஏற்பாடுகளால் வகுப்பிலுள்ள யாவரும் தருணா தருணங்களிற் குறித்த நாடகங்களிற் பங்குபற்ற இடம் ஏற்படுத்தல் வேண்டும். நாடகபாத்திரங்களைத் தெரியும் உரிமை வகுப்பு மாணவர்க்கே கொடுக்கப்படுங்கால், பெரும்பாலும் அததற்கேற்ற பாத்திரங்கள் இடம்பெறுதலையும், வகுப்பில் ஒத்துழைப்பு அதிகப்படுதலையும் அநுபவத்திற் காண்கின்றோம். புதிதாக ஒன்றினைக் கண்டுபிடித்தலும் கண்டுபிடித்தனவற்றைச் சாதனை வழிப்படுத்துதலும் நாடக முறைப் பயனாகவே லபிப்பன. மேலும் நாடக ரூபமாக நடித்துக்காட்டப் பயிற்றல் பிள்ளைகள் சன்மார்க்கத்தில் வளர்ச்சி பெறுவதற்கும் ஏற்றதோர் வழியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. பேச்சுப்பாடம்

ஒருவனை ஏனைய சிருட்டிகளினின்றும் பிரித்துக் காட்டுவது பாஷையே. மனதின்கண் (1) கருத்து நிகழ்வதற்கும் (2) நிகழுங் கருத்தைப் பிறர்க்கு எடுத்துரைப்பதற்கும் ஓர் கருவியாகவுள்ளதும் பாஷையே. சிறுரது அநுபவத்திற் கப்பாலுள்ள எண்ணங்களையுஞ் செய்திகளையுஞ் சிந்திக்கச் செய்வதும், ஒருவனை அவனது சாகியத்தாருள் வல்லுருவம் படைத்திருக்கச் செய்வதும் பாஷையாமன்றோ? இத்தகைய பெருமைவாய்ந்த பாஷையானது பாடசாலைக் கல்வி சம்பந்தமாக (i) வாசிப்பு (ii) எழுத்து (iii) பேச்சு எனப்படும் முப்பிரிவுகளை யுடையதாகும்.

### பேச்சுப்பாடப் பயன்

பிள்ளையானது கற்றுக்கொள்ளவேண்டிய பாடசாலைப் பாடங்களுள் முதலிடம் பெறவேண்டியது பேச்சுப்பாடமே. பாடசாலைச் சிறுர் விடும் மூச்செல்லாம் பேச்சாகவே யிருக்கவேண்டு மென்பது, அநுபவம் வாய்ந்த எந்த ஆசிரியரும் ஒப்புக்கொள்ளற் கிடமாயதோர் உண்மையாகும். முதலிடம் பெறவேண்டியது மாத்திரமன்று, பாடசாலை முழுநேரமும் எப்பாடத்தினும் பேச்சு நடைபெறவேண்டியது. அன்றேற், பிள்ளையானது தனது மனக்கருத்தை வெளிவிடச் சந்தர்ப்பம் நேராது போவதாகும். பாடசாலை நேரம் மாத்திரமன்று, பாடசாலைக் கல்வி முடியும் வரையிற் பிள்ளையானது கற்றுத் தேறவேண்டிய கல்வி இதுவேயாகும். அதுவும் இயன்றவரை இளம்பராயத்திலேயே ஆரம்பிக்கப்படுதலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணமும் அதன் சின்னமும்


ஒருவனது எண்ணத்தின் சின்னமாக வெளிவருவது வார்த்தை அல்லது சொல் எனப்படுவது. வார்த்தையின் பயனாக உண்டாவது மானத வடிவமாம். மானத வடிவமானது பின்வரும் மூன்று வடிவங்களைக் கொண்டதாக விருக்கின்றது. அவை :—

i. பொருள் வடிவம்

ii. ஒலிவடிவம்

iii. வரிவடிவம்

திரு. மாக்ஸ்முல்லர் ( Macmuller ) என்பவர் சொல்லையும் பொருளையும் பிரித்துக் கூறவோ அன்றேல் எண்ணவோ மனமொருப்படாத ஒருவர். அவர் இக் கருத்தை மிகவும் அழுத்திச் "சொல்—எண்ணம்" ( word—thought ) என்றே துணிந்து கூறுவர். பின்வரும் படம் இவ்வுண்மையை நன்கு விளக்குவதாகும்.




இப்படத்திற் காட்டப்பட்டபடி எண்ணமோ, பேச்சோ, அன்றேல் வார்த்தையோ (ஒலி) இம்மூன்றில் எதுவொன்றும் ஒன்றினையொன்று முந்தித் தோன்றுவதென, வித்தகர் மாக்ஸ்முல்லர் ஒத்துக்கொள்வதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. குறித்த மூன்று அமிசங்களும் ஏககாலத்திலேயே நிகழ்வன என்பது அப்பெரியாரது கருத்தாகுமென அறிக.

ஒரு குழந்தையானது தன் பெற்றோரும் மற்றோரும் பேசுவதைக்கவனிக்கும்போது வார்த்தைகளின் உச்சாரணம் அதன் பிரக்ஞையிற் செல்லுகின்றது. அக் குழந்தை கண்கள் வழியாக ஒவ்வொரு சொல்லும் எங்கெந்தப் பொருளை அல்லது எவ்வித செய்கையை அறிவிக்கின்றதென்பதைத் தெரிந்துகொள்ளுகின்றது. காண்டல், கேட்டலென்ற இவ்விரு புலன்கள் வழியாகவும், பிரக்ஞையிற் செல்லுங் கருத்துக்கள் வார்த்தைகளின் (1) ஒலி வடிவம் (2) பொருள் வடிவமெனும் இரு அமிசங்களையுந் தெரிவிக்கக் குழந்தையானது சொல்லுடன் அதனைக் குறிக்கப்படும் பொருளையு மிணைத்துத் தன் தாயைப் பார்த்து "**அம்மா**" என அழைக்கின்றது. செய்கை முறையில் "**வா**" என வந்து "**போ**" எனப் போகின்றது.

குழந்தையானது பேச்சுக் கற்றுக்கொள்ளவேண்டின் அதன் இவ்விரு புலன்களும் வெகு கூர்மையாக இருக்கவேண்டிய ஆவசியகம் ஏற்படுகின்றது.

கேள்விப் புலனில்லாமற் பிறவிச் செவிடராகப் பிறந்த பிள்ளைகள், பதங்களின் தொனியை மட்டிடுதல் இல்லையாகும். பதங்கள் உச்சரிக்கப்படுந்தோறும் உச்சாரணஞ்செய்ய எத்தனிக்கும்போதுதான் குழந்தையானது மழலைச் சொற்களைக் கிளர்த்தத் தொடங்குகின்றது. பின்னர், சொற்களின் சரியான உச்சாரணத்தைக் கேட்டுக் கேட்டு, மழலைச் சொற்களிலுள்ள குற்றங்களை அப்பியாசத்தால் திருத்திக்கொண்டு செம்மையாகப் பேச ஆரம்பிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொனிப்பிறப்பு
## ( Voice Production )

சிறு பராயமுதற் குழந்தைகளின் குரலை ஒழுங்காகத் திருத்துதல் வேண்டும். சிறு பிள்ளைகள் பெரும்பாலும் நாசித் தொனியாகவே பேசுவார்கள். அல்லது பேசுவதில் அதிக அவதிப்பட்டுத் தெளிவின்றிக் கொச்சையாகப் பேசுவார்கள். பாலப் பராயம் நீங்கிய பின்னுஞ் சிலரிடத்து இவ்வித குணங்கள் நிலைத்திருப்பதைக் காணலாம். சிறு பராயந்தொட்டே திருத்தமாகவும், தெளிவாகவும், பேசப்பழகிவரின் இவ்வித குறைகள் நிகழமாட்டா.

ஒலிகளின் பிறப்பிடங்களை யறிந்து ஆரம்பத்திலேயே தங்களது குறைகளைச் சீர்ப்படுத்திக்கொண்டாற் பிள்ளைகள் பேசும்பொழுதும், பாடும்பொழுதும், படிக்கும்பொழுதுஞ் செவிக்கின்பந் தோற்றும். இவ்வாறு பழகிக்கொள்வது தேக ஆரோக்கியத்தையும் நல்குவதாகும். ஒலிகளின் பிறப்பிடங்களை யறிந்து உதடு, நா, பல், அண்ணம் முதலிய அங்கபாகங்களைச் செம்மையாகப் பாவித்து, எழுத்தின் ஓசையானது நன்ருகப் பிறக்கும்படி பேசும் பழக்கம் இல்லாதவர்கள் பேசத்தொடங்கிச் சிறிது நேரங் கழிவதன்முன் குரல் கம்மித், தொடர்ந்து பேசவியலாது கஷ்டப்படுகின்றனர். பாடசாலைகளிற் சம்பாஷணை, பேச்சு நாடகம், செய்யுட்பாகங்களை மனனஞ்செய்து ஒப்பித்தல் முதலிய அப்பியாசங்கள் மூலம் பிள்ளைகளின் குரல்களைத் திருத்துதல் வேண்டும்.

## எண்ணக் கோர்வையும் சொல்லிட்டமும்

மனதின்கண் நிகழ்வதாயதோர் தொடர்பான எண்ணத்தின் பயனுக நிகழ்வது **“ வாக்கியம் ”** எனப்படும் பொருள் முற்றிநிற்குஞ் சொற்ளெடராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) வாக்கியம் (தொடர் சின்னம்)

(2) வார்த்தை (தனிச் சின்னம்)

ஒருவனிடம், கூடவோ அன்றேற் குறையவோ பரந்த நோக்கு ஏற்படுங்காலத்து மாத்திரமே **"பேச்சு"** என்பது இடம்பெறுகின்றது. பரந்த நோக்கு ஏற்படாத குழந்தைகள் ஆரம்பத்தில் "அப்பம்" "தா" "அப்பா" "எனக்கு" என்று தனிச் சொற்களையே தங்களது மனக்கருத்தின் குறியாக வெளியிடுதலை அவதானிக்குக. எண்ணத் தவறு ஏற்படுங்கால், பிழையான வசனங்களைக் கிளர்த்துதல் பெரும்பாலும் ஒருவரது பேச்சிலேயோ, அன்றேல் எழுத்திலேயோ காணப்படுதலைப் பலகாலுங் கேட்டுங் கண்டும் வருகின்றோம்.

மேலும், வெவ்வேறு எண்ணங்கள் பல்வேறு சொல் ரூபங் கொள்ளும் வழக்கு, பாஷைகட்கெல்லாம் பொதுவானதோர் இலக்கணமாம். சாதாரண வாழ்க்கையையுடைய ஓர் கிராமவாசியின் பேச்சு 500 சொற்களுள் அமையும். மகா கவியாகிய கம்பர் நடாத்திய அன்றேற் கூறிய வாழ்க்கையுலகம் 5 இலட்சத்திற்கு மேற்பட்ட சொற்கூட்டத்தையுடைய தென்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. பரந்த நோக்கம், சொல்லீட்டத்தின் இருப்பிடமென்று கூறப்படுகின்றது. "சொற்பொழிவு" "சொற்பெருக்கு" என்பனவற்றிலுள்ள சொல்லடுக்குகளின் அர்த்தத்தை ஆராய்வார் இதனை இலகுவின் ஒப்புக்கொள்வர்.

சொல்லீட்டக் குறைவாலேயே பல மாணவர்கள் மந்தராகக் காணப்படுதற்குக் காரணம் ஏற்படுகின்றதென்று கல்வி ஆராய்ச்சியாளர் பலருங் கூறுகின்றனர். ஏனெனிற் சொல்லீட்டக் குறைவாற் பின்வரும் பிழைகள் பெரும்பாலும் இடம்பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை :—

i. மனதின்கண் கருத்துத் தக்கவாறு நிகழ்தல் இல்லை.

ii. மனக்கருத்து நிகழ்ந்தும், அக்கருத்தை எடுத்துக்கூறும் ஆற்றலின்மை.

iii. பிறர் கூறுவன எவற்றையுந் தமதாக்கிக் கொள்ளும் வன்மையின்மை என்பன.

இருவர் அதிகநேரம் ஒரு குறித்த விஷயத்தைப் பற்றிச் சம்பாஷித்த பின்னர் "யான் சொன்னது அது." "அப்படியன்று. இப்படி." எனக் கதாப்பிரசங்கஞ் செய்தல், சமாளித்தல் என்பன சொல்லீட்டப் பஞ்சத்தால் நிகழ்வனவாம். எனவே பாடசாலை மாணவரோ, மற்றெவரோ அறிவுபடைக்க விரும்பின் தேட வேண்டிய தேட்டம் சொல்லீட்டமென்பதை மறத்தல் வேண்டா.

## பேச்சுப்பாட ஆசிரியர்

எந்த ஆசிரியர், எப்பாஷையில், ஆசிரியராக அமைந்துள்ளாரோ அவர் அப்பாஷையிற் பாண்டித்தியம்படைத் திருக்கவேண்டுமென்பது அறிஞர் கூற்று. சனசமூகம் விரும்புவதும் கணிப்பதும் அத்தகைய ஆசிரியரையே. ஏனெனிற் றமது மனக்கருத்துக்களையெல்லாம், அள்ளியிறைக்கும் வள்ளலையொப்பச் சனசமூகத்திற்கு வெளிப்படுத்த வல்லவர் இவரே. மாணவரது கவனத்திற்கும் ஆர்வத்திற்கும் இலக்காகுவதோடு பிரசித்த பரீட்சைகளில் மாணவரின் சித்திக்குங் காரணராகுவாருமிவரே. (மாட்டுவாலின் ஈயெனவாழ்தல் இழிவாகும்.) எனவே பேச்சுப்பாட ஆசிரியர் பின்வருவனவற்றைப்பற்றிய பூரண அறிவு வாய்க்கப் பெற்றவராதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை :—

i. நவரசங்கள், மெய்ப்பாடுகள் என்பனபற்றிய விரிவான அறிவு.

ii. மெய்ப்பாடு என்பது யாது? என்பதும் அதன் வகைகளும்.

iii. பொருளதிகாரம் "மெய்ப்பாட்டியல்" பற்றிய பரந்த அறிவு.

iv. உதாரணக் கதைகள் கூறுந்திறன். உதாரணமாகக், "கலிவர் பிரயாணம்" "அலடின்" சரிதை, "வெள்ளைக்காகம்" என்பனபற்றிய நிரம்பிய அறிவு.

v. "Voice Production" என்று சொல்லப்படுகின்ற தொனிப்பிறப்பு ஞானம்.

iv. இதம்பெறப் பேசுதலுங் கட்டுரைத்துப் பேசுதலும்.

பேச்சுப்பாட ஆசிரியர் சொற்பிறப்புச் சம்பந்தமான உறுப்புகளோடு தொடர்புற்ற சிரமப்பயிற்சி அப்பியாசங்கள், உதாரணமாக, வாய் அங்காத்தலின் அளவு (மடித்த சுட்டுவிரல் பற்களுக்கிடைப்பட்டபோது உண்டாகும் இடையளவு.) ப, ம, ற, ன, ழ, ள, வ முதலியவற்றை அடுக்கி உச்சாரணஞ்செய்யச் செய்து, இதழ் குவித்தல் அங்காத்தல் முதலிய அப்பியாசங்களைப் பயிற்றுதல் வேண்டும். இத்துடன் பிள்ளையின் சௌகரிய நிலையும் உச்சுவாச, நிச்சுவாச முறைகளுங் கவனிக்கப்படுதல் வேண்டும். ஆசிரியர் பேசுந்தோறும் அவரது பேச்சு (1) தெளிவுடையதாகவும் (2) நுட்பமானதாகவும் (3) விவேகமானதாகவும் இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவருடன் பேசும்போதெல்லாம் இதம்பெறப் பேசுதலும் பேச்சுப்பாட ஆசிரியருக்கு அழகாகும். இத்திறன் இல்லாதார் ஆக்கப்பொருளாகவேனும் இதனைத் தேடிக்கொள்ளுதல் நல்லது. உதாரணமாக, “தம்பி, இங்கு வாரும். கையிலிருப்பதைத் தாரும். அக்கா சொல்வதைக் கேளும். இந்தப் படத்தைப் பாரும்.” என இவ்வாறு இதம்பெறப் பேசுதலிற் கஷ்டம் யாதோ? மேலும், அணுவை மலையாக்கி, தூணைத் துரும்பாக்கி, ஆனையைப் பூனையாக்கி சமயோசித பேச்சுப் பேசுவதில் திறமைவாய்ந்த ஆசிரியர் பேச்சுப்பாடம் பயிற்ற மிகுதியுந் தகுதியுடையவராவர்.

## சில சிறப்பான முறைகள்

பாடசாலை நேரம் முழுவதும் சிறப்பாகப் பேச்சுப்பாட நேரத்திலும் இப்பாடவகை நடைபெறவேண்டுமென்பது பிரமாணமாகும். குறித்த நேரங்களில் மாத்திரம் இதனைக் கட்டுப்பாட்டு முறையில் மட்டுப்படுத்திக் கற்பித்தல் முறையையாகாது. சிறுரின் அச்சம், கூச்சம் என்பன நீங்கித் துணிவேற்படுமாறு தக்க முறைகள் கையாடப்படுதல் வேண்டும். பின்வருவன பேச்சுப்பாடத்தைப் படிப்பித்தலிற் சிறந்த முறைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அவை :—

1. சம்பாஷணைமுறைப் பேச்சு
2. கதாமுறைப் பேச்சு
3. நாடகமுறைப் பேச்சு
4. உருவங்களமைத்து நடத்தும் பேச்சு
5. விளையாட்டுமுறைப் பேச்சு
6. உத்தேசித்து விடைகணக்கூறும் பேச்சு (Guessing game)
7. மனனபாடப் பேச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1. சம்பாஷணைமுறைப் பேச்சு :**—சம்பாஷணை என்பது இஷ்ட சல்லாபமாகும். இஷ்ட சல்லாபத்தைப்போற் பாலருக்கு இன்பத்தைத் தரக்கூடியது வேறொன்று மில்லை. தினமுங் குறைந்தது 20 நிமிஷமேனும் பாலர் தம்முள் இஷ்ட சல்லாபஞ் செய்ய விடப்படல்வேண்டும். இத்தருணத்தில் ஆசிரியர் சமுகமில்லாதிருத்தல் மிகவும் நன்று. வேண்டின் பிள்ளைகள் தங்கள் பேச்சில் அதிக கெட்டித்தனங் காட்டுவதாக அவர்கள் விளங்கிக்கொள்ளும்படி உற்றுக் கேட்டுக்கொண்டிருக்கலாம். பிள்ளைகள் தங்களைப்பற்றியுந், தங்கள் வீடுகளைப்பற்றியும், தங்களது நாளாந்த செயல்களைப்பற்றியும், பாடசாலைத் தோட்டத்தைப்பற்றியும், தாங்கள் விரும்பும் எந்த விஷயத்தைப்பற்றியும் பேசவிடவேண்டும்.

மேலும் ஆரம்பத்திற் படிப்பித்தற் கேற்ற சிறந்த முறை சம்பாஷணை முறையேயென்பது அநுபவத்திற் கண்டது. சொற்களையும் சொற்கள் இவற்றைக் குறிக்கின்றன வென்பதையும் பிள்ளைகளறியவேண்டும். வீட்டிற் பெற்றோருடன் பேசுவதுபோலவே பாலர், பாடசாலையிலும் ஆசிரியருடன் கலந்துரையாட இடங்கொடுபடல்வேண்டும். இவ்வாறு செய்யும்போது பாலர் ஏலவே அறிந்துகொண்ட சொற்களையும், அவர்கள் அறியவேண்டிய புதிய சொற்களையும், படிமுறைப் படுத்திக்கொள்வது ஆசிரியருக்கு இலகுவாகும். இவ்வகைத்தான சம்பாஷணை நேரங்களில் ஒவ்வொரு குழந்தையுந் தனித்தனி பேசவேண்டுமேயன்றி எல்லோரும் ஒருமித்துப் பேசுதலும் விடையிறுத்தலும் நல்லதல்ல. ஏனெனில், தனித் தனி பேசும்போது மாத்திரமே அவர்களது உச்சரிப்புத் திருத்தமடையும். அச்சங் கூச்சமென்பன தெளியும். சுயநம்பிக்கையும் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. கதாமுறைப் பேச்சு :—** இம்முறையைக் கையாடுஞ் சாமார்த்தியம் எல்லா ஆசிரியர்களிடத்தும் ஒரேதன்மைத்தாக இல்லை. கதை கூறும் ஆசிரியர் பாட்டிகள் கதைகூறுமாறு சலியாதும் வீரம், அவலம், அச்சம் முதலிய நவரசங்களோடு மெய்ப்பாடு தோன்றவும், பல பிறவிகளெடுத்துத் தரத்திற்குத்தக வெவ்வேறு பாஷைநடையிலும், கதைகளோடு சம்பந்தப்பட்ட படங்கள் உருவங்கள் முதலியவற்றை உபகரணங்களாகக் கொண்டுங் குறித்த கதையை விளக்கும் ஆற்றலுடையவராக விருத்தல்வேண்டும். கதைகள் பெரும்பாலுஞ் சிறியனவாகவும் பாலரின் சுற்றுடலோடும் வாழ்க்கையோடும் சம்பந்தப்பட்டனவாகவு மிருத்தல் மிகவும் நன்றாகும். உதாரணமாகப் பின்வருங் கதையை எடுத்துக்காட்டலாம்.

### பாட்டிவீட்டு ஓட்டைப்பானையில் அகப்பட்ட எலி

ஒரு ஊரிலே, பல்லெல்லாம் விழுந்து தலைமயிர் முழுவதும் நரைந்து, முதுகு கூனிய **பார்வதி** என்னும் பாட்டி ஒருவர் இருந்தார். அந்தப் பாட்டி வீட்டிலே ஒரு ஓட்டைப் பானையும் இருந்தது. பாட்டி, கடையிலே கொஞ்சங் கடலை வாங்கி, அந்த ஓட்டைப் பானையினுள்ளே போட்டு, சட்டி ஒன்றால் மூடியிருந்தார்.

வீட்டின் வளையிலிருந்த ஒரு எலி இதனைப் பார்த்துக்கொண்டிருந்தது. பாட்டி அப்பாற் போனதும் எலியனுபிள்ளை வளையை விட்டிறங்கிப் பானைக்குக் கிட்ட வந்து எட்டி எட்டிப் பார்த்தது. ஓட்டை ஒன்று இருக்கக்கண்டு உள்ளே புகுந்துகொண்டது. தனது ஆசை தீரும்வரையிலே கடலையைக் கொறித்துக் கொறித்துத் தின்றது. அதன் வயிறோ முட்டிபோல வீங்கிவிட்டது. பானையின் ஓட்டை சிறிதாக விருந்தபடியால் வீங்கிய வயிற்றுடன் வெளியேற இயலாது எலியனுபிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ கீக்கீ ” என்று கீச்சிடத் தொடங்கியது. பார்வதிப் பாட்டிக்குப், **பாக்கியம்** என்றொரு பேரப்பிள்ளை யிருந்தாள். பாக்கியம் மிகவும் புத்திசாலி. “ பூனை எலியைப் பிடிக்கும் ” என்பது அவளுக்கு நன்ருகத் தெரியும். உடனே ஓடிப்போனுள். தங்கள் வீட்டிலிருந்த பூனையைப் “ பூஸ், பூஸ் ” என்று கூப்பிட்டாள். அது “ மாயோ மாயோ ” என்று சத்தமிட்டுக்கொண்டே விரைவாக வந்தது. பூனையுடன் சென்ற பாக்கியம் பானையின் மூடியை எடுத்துவிடவே எலியனுபிள்ளை பானையின் வாய்வழியாக வெளியே பாய்ந்தது. பக்கத்தில் நின்ற பூனை “ தக் ” எனப் பாய்ந்து ஒரேபாய்ச்சலில் எலியைப் பிடித்துக் கடித்துக் கொன்று தின்றது.


பானையிற் கடலையை உண்டதும் போதும்
பூனையின் வாயாற் கடியுண்டதும் போதும்.

பாலருக்கு இவ்வித கதைகளைக் கூறுவதும் அவர்கள் அவற்றைக் கேட்பதும் மாத்திரம் போதியதன்று. கதைகளைக் கேட்பதால் அவர்கள் மனத்திற் ருேன்றுங் கருத்துக்களையும் வெளியிடப் பயிற்றுதல் வேண்டும். சாதாரணமாகக் கதையை மீட்டுக்கூறச் செய்தலே நடைமுறையிலுள்ளது. இது போதியதன்று.

எங்கள் சாதனுகழகப் பாலர் பகுதியிலே பேச்சுப் பயிற்சி பெற்றுவரும் ஒரு பிள்ளை, தான் கேட்டு இன்புற்ற மேற்படி கதையின் பயனுகத் தான்பெற்ற மனக் கருத்தைப் பின்வருஞ் சித்திரங்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளது. அவற்றை 70-ம், 71-ம் பக்கங்களில் காண்க.

இவ்வாறு செய்வித்தற்கேற்ற கதைகள் நமது நாட்டிலே அநேகம் உள்ளன. அவற்றினை ஆராய்ந்து திரட்டிக்கொள்ளுதல் நல்லாசிரியரது கடனுகும். பேச்சுப் பயிற்சிபெறுதல் மாத்திரமன்று சித்திரப்பயிற்சி பெறுதலும் தொடர்புறு பாடமுறையிற் பாலர் கற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3



4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுக்கொள்வதற்கு இம்முறை மிகவுஞ் சாதகமாகவுள்ளது. இக்கதை சார்பான ஓர் சிறு செய்யுளும் அபிநயப்பாட்டுமுறையிற் கற்பிக்கப்படும்போது வரும்பயன் எத்திறப்பட்டதாகும் என்பதைச் சுட்டிக்காட்டவும் வேண்டுமா? குறித்த செய்யுளை இந்நூலின் மற்றோரிடத்துக் காண்க.

**3. நாடகமுறைப் பேசசு** :—பாலர் தாம் கற்றுக்கொள்ளுங் கதையையோ அன்றேல் வேறெதனையோ நாடகமுறையாகக் கற்றுக்கொள்ளச் செய்தல் சிறந்தமுறையேயாகும். ஏனெனிற் பாலரின் இயல்போடொத்த முறை இது வென்பது முன்னர் மிகவுந் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. விஷயத் தெரிவுக்குத் தக்கதாக வேண்டிய நாடக பாத்திரங்களைப் பாலரின் இயல்புக் கேற்கத் தெரிந்து பேசச்செய்தல் வேண்டும்.

**4. உருவங்களமைத்து நடத்தும் பேச்சு**:-கைவேலைப்பாட நேரத்திலே, பாலர் களிமண்ணைக் கொண்டும், காகிதங்களைக்கொண்டும் வேறுஞ் சில பொருட்களைக்கொண்டுஞ் சில உருவங்களை ஆக்குகிறார்கள். இவ்வாறு ஆக்கப்படும் உருவங்களைப்பற்றிப் பாலர் பேசுதலும் அவ்வுருவங்களைக் கதைகளாக அமைத்துக் காட்டுதலும் அமைக்கப்பட்ட உருவங்களாற் குறிக்கப்படுங் கதையைக் கூறுதலும்வேண்டும்.

**5. விளையாட்டுமுறைப் பேச்சு**:-விளையாட்டுகளில் ஈடுபடுதல் பாலரின் இயல்பு. இவ்வியல்பினை யுணர்ந்த நமது பண்டைத் தமிழ் மக்களும் அம்புலிகாட்டியும், பம்பரம் ஆட்டியும் பேசச் செய்த விளையாட்டுகளோ மிகப்பல. பேச்சுப்பாட வகையில் எடுத்தாளப்படக்கூடிய விளையாட்டுகள் எவையென்பதை ஆசிரியர் ஏலவே திட்டப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். உதாரணமாக, உப்புச்சுமத்தல் என்னும் சிறார் விளையாட்டு மிகவுஞ் சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்று. "உப்பு வேண்டுமா உப்பு? வண்ணுவீட்டுக்குப் பாதை எது? நாய் இருக்கிறதா? குரைக்குமா? பூனையிருக்கிறதா? அது சீறுமா?" என்று இவ்வாறு பாலர் விளையாடும்போது நாயாக, பூனையாக நடிப்பதும், பல புதிய சொற்களைப் பேசுவதும் அவர்களது பேச்சுப் பயிற்சியை மிகவும் விரைவில் வன்மை பெறச் செய்வதாகும்.

**6. உத்தேசித்து விவரணங்கூறும் பேச்சு:-** சில பட்சிகளின் பெயர்கள், மிருகங்களின் பெயர்கள் அன்றேற் பிள்ளை விரும்பும் எப்பொருளின் பெயரையாவது ஒரு சீட்டில் எழுதிவைத்துக்கொண்டு அதைப்பற்றிய சில மறைவான குறிப்புகளைமாத்திரம் ஒரு பிள்ளை வெளிவிட ஏனைய பாலர் தாங்களாகவே அப்பொருளைப்பற்றிய சில விவரங்களைச் சீட்டுவைத்திருக்கும் பிள்ளையிடம் வினவலாம். உதாரணமாக அது பறக்குமா? அது உண்ணும் உணவு யாது? தோகைவிரித்தாடுமா? என்றிவ்வாறு பலவாறு வினவிக் குறித்த பொருள் யாதென்பதை நிச்சயஞ் செய்தல். இம்முறையைக் கையாடுவதாற் பாலரடையும் பயன்களோ மிகப்பல. அவை :—

i. பேசுதல் பாலரது சுயமுயற்சியாகவும் இன்ப நுகர்ச்சியாகவும் மாறுகின்றது.

ii. சுய எண்ணங்களை வெளிவிட இடமாகிறது.

iii. பலதிறப்பட்ட பேச்சிற்குச் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

iv. ஊக்கமுஞ் சுயநம்பிக்கையும் உண்டாகிறது.

v. ஊகிக்குஞ் சக்தியும் விவேக விருத்தியும் ஏற்படுகின்றன.

vi. பொருட்களைப்பற்றிய விவரண அறிவு அதிகரிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. மனனபாடப் பேச்சு :**—சிறந்த வசனபாகங்கள், பாலருக்கேற்ற கீர்த்தனங்கள் என்பனவற்றை மனனஞ்செய்யச்செய்தும், சௌகரிய நிலையில் நின்று கூறச் செய்தும் படிப்பித்தல் சாலச்சிறந்த முறையாகும். தெரியப்படும் விஷயபாகங்கள் சுவைப்பட்டனவாகவும் அபிநயங்களோடு சம்பந்தப்பட்டனவாகவும் இருத்தல் நல்லது. எந்தப்பாகமும் சொற்றெளிவும் பொருட் பொலிவும் பெற்றனவாயிருத்தல் வேண்டும்.

## சில தவறன முறைகள்

பேச்சுப் பாடம் படிப்பித்தலில் எத்தனையோ சிறந்த முறைகள் கையாடப்பட்டவிடத்தும் சிலமுறைத் தவறுகள் ஆசிரியர்களை யறியாமலேயே பாட நேரத்தில் இடம்பெற்றுவிடுகின்றன. இதனுற் பேச்சுப் பாடப் பயன் குன்றிவிடும் என்பதற் கையமில்லை. ஆகையினுலே விவேகமுள்ள ஆசிரியர் பின்வருந் தவறுகள் நிகழாவண்ணங் காத்துக்கொள்ளுதல் நல்லது.

அவை :—

i. ஆசிரியர் இடையிடையே கதாப்பிரசங்கஞ் செய்து கதைத்தொடர்பை அல்லது விஷயத் தொடர்பைப் பங்கப்படுத்தல்.

ii. கதைகளைக் கூறும்போது அரும்பத விளக்கங் கேட்டல்.

iii. புதிய சொற்களைப்பற்றிய திட்டம் ஒன்றுஞ் செய்யாமையும் அவற்றைப் பிரயோகப்படுத்தாமையும்.

iv. ஒரு பேச்சுப்பாடத்திற்கும் மறு பேச்சுப் பாடத்திற்கும் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளாமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. பாலர் கூறும் அரைகுறையான விடைகளை ஏற்றுக்கொள்ளுதலும் ஒருமித்த பேச்சிற்கிடங் கொடுத்தலும்.

vi. போதிய உபகரணங்கள் இல்லாது அந்தரப் பேச்சுப்பாடம் நடத்துதல்.

vii. பாட முடிவில் விரைவுப்பயிற்சி வினைக்களுக் கிடங்கொடாமை, அன்றேல் இடை நிரப்புதல் முதலிய சொற்பிரயோக அப்பியாச வேலை நடத்தாமை.

viii. மாணவரே முழுநேரமும் பேசவேண்டியதாக விருக்க ஆசிரியர் தாமே முழுநேரமும் அதிக மாகப் பேசுதல்.

ஆசிரியர், எதைப்பற்றிக் கூறவேண்டியவிடத் தும் அதனைப்பற்றித் தொடர்பாகக் கூறுதல்வேண்டும். ஒரேபாட நேரத்திற் பல புதிய சொற்கள் வருதற்கு இடம்வைத்தல் நல்லதல்ல. சில குறித்த புதிய சொற் கள் மாத்திரமே இடம்பெறுதல்வேண்டும். திட்டப் படுத்தப்பட்ட புதிய சொற்களும் பாடநேரத்தில் அடிக் கடி பயின்று வருதலும்வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. வாசிப்புப் பாடம்

## தமிழ் நெடுங்கணக்குப் பயிற்சி

## (அட்சரப்பயிற்சி)

**ப**ல ஆண்டுகளின் முன்னர் நமது நாட்டிலே வாசிப்புப் பாடங் கற்பிக்கும் வழக்கமானது ஆரம்பத்தில் (1) எழுத்துக்களையும், பின்னர் (2) சொற்களையும், அதன்பின்னர் (3) வசனங்களையுமே முறைப்படுத்திக் கற்பித்துக்கொண்டு வருவதாகவிருந்தது. இதனை "அட்சர முறை" கொண்டு கற்பித்தலென்பர்.

**1. அட்சரமுறை.** அட்சர முறையென்பதும் எழுத்து முறையென்பதும் ஒன்றே. இம்முறைக்கண் பிள்ளைகள் முதலில் அட்சரங்களைக் கற்றுக்கொண்டு பின்னர் பல அட்சரங்கள் சேர்ந்தாகும் சொற்களையும், சொற்றொடர் காரணமாக வரும் வாக்கியங்களையும் நிரல்படக் கற்றுவருவர்.

**2. சொன்முறை.** பிள்ளைகட்கு, நேரே பொருளைக் காட்டி, அதன் பெயரைக் கூறும்படி கேட்டு, குறித்த பெயரைக் கரும்பலகையில் எழுதிச் சொல்லைச் சொல்லாகவே முழு ரூபமுந் தோன்றும்படி எழுத்து விகற்பமின்றிக் கற்பித்தலாம். அதாவது "படம்" என்ற சொல்லை "ப, ட, ம்" என எழுத்து விகற்பந் தோன்ற வாசிக்கச் செய்யாது "படம்" என மூன்றெழுத்தும் ஒன்று சேர்ந்த ஒலிமுறையில் வாசிக்கச் செய்தலாகும். இதுவே பாலரின் இயல்புக்கேற்ற சிறந்த முறையாகும். பிள்ளைகள் காலாந்தரத்தில், தாம் வாசிக்க அறிந்த சொல்லிலிருந்து தாம் அறியாததாகிய எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளுதல் இம்முறையாற் சாத்தியப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. ஒலி முறை.** சாரிகை அசை முதலியனவற்றைச் சேராமல் எழுத்துக்களுக்குரிய ஒலியை மாத்திரம் படிப்பித்துச் சொற்களை உச்சாரணஞ் செய்யச்செய்யும் முறையாகும். இம்முறைப்படி கற்பதாற் பிள்ளைகள் பின்வரும் நயன்களை அடைகின்றனர்.

i. மிகவுஞ் சுருங்கிய காலத்தில் வாசிக்கப்பயில்வர்.

ii. வழுவற்ற உச்சாரணப்பயிற்சி ஏற்படுகின்றது.

iii. அட்சரங்களை அவதானித்தலும் உச்சாரணஞ் செய்தலும் ஏககாலத்தில் நிகழுகின்றன.

**4. அசை முறை.** ஆங்கில பாஷையில் அட்சரங்களுக்கு அசை சேர்த்து உச்சாரணஞ்செய்யும் வழக்கமின்று. அசை சேர்த்துப் படிப்பிக்கும் ஆசிரியர் சிலர் எழுத்துக்களின் உச்சரிப்பை மாறுபடக் கற்பிக்கின்றனர். உதாரணமாக, "அ" என்ற எழுத்தைக் குறிப்பித்தற்கு "ஆனா" எனப் படிப்பிக்கின்றனர். அதனை "அன்னா" எனக் கற்பிப்பின் சிலவேளை பொருத்தமாதலுங் கூடும். தமிழுடன் மிகவும் நெருங்கிய சம்பந்தமுடைய ஆரியம் அசையின்றியே கற்பிக்கப்படுகின்றது. இன்னும் தமிழின் வழிமொழியாகிய மலையாளந்தானும் அசையின்றியே கற்பிக்கப்படுகின்றது. தமிழ்மொழி எழுத்துக்களின் ஓரொலியை உச்சரிப்பதற்குப் பல ஒலி சேர்ந்த அசை ஏற்படுவதாகலின் அஃது வாசித்தலுக்கு வாய்ப்புடைத்தன்றென்க. உதாரணமாக "நாற்காலி" என்ற சொல்லை அட்சரமுறையிற் படிக்கும்போது **நா**வன்னா, **ற்**ரன்னா, **கா**வன்னா, **லீ**னா என ஏதோ கிரந்தமெல்லாஞ் சொல்லி ஈற்றில் **நாற்காலி** யென்பர். இதனை விடுத்துச் சுருங்கிய ஒலிமுறையில் "நா, ற், கா, லி" என வாசிக்கப் பயிற்றல் நன்றாகும். எனவே அட்சரமுறையிலுள்ள (1) ஒலிமுறை (2) அசைமுறை என்ற இரண்டனுள் அசைமுறைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் குற்றங்கள் பல ஏற்படுதலின் சுருங்கிய ஒலி முறையே சிறப்புடைத்தென்க.

## சொன்முறை விளக்கம்

பிள்ளைகள் அறிந்த பொருட்களையும், அவற்றின் குறியீடான சொற்களையும் ஆதாரமாகக் கொண்டு, அவர்கள் அறியாத அட்சரங்களை (1) ஒலிவடிவினும் (2) வரிவடிவினும் படிப்பித்தபின்னர் பொருட்கள் வழியாகச் சொற்களையும், சொற்கள் வழியாகப் பொருட்களையும் அறியச்செய்யும் முறையே சொன்முறை எனப் படுவது.

சொன்முறையில், மானச ரூபமெனப்படும் மனோ பாவனையொன்று மாத்திரமன்று, எழுத்து முறையில் ஒலிவடிவம் மாத்திரம் சம்பந்தப்பட, இம்முறையிற் பொருளைச் சம்பந்தப்படுத்துதலும் ஒருங்கு ஏற்படுகின்றது. மேலும் இம்முறையால் ஏற்படும் பயன்களோ மிகப் பல. அவை :—

i. அறிந்த சொற்கள்மூலம் அறியாத சொற்களைப் பயின்றுகொள்வர்.

ii. உச்சரித்தற்கு இலகுவான சொற்கள் மூலம் கஷ்டமான எழுத்துக்களைப் பயில்வர்.

iii. பொருளையும், அப்பொருளைக் குறிக்குஞ் சொல்லையும், சொல்லுடன் கூடிய எழுத்துக்களையும் ஏக காலத்திற் பயில்வர்.

iv. எழுத்துக்களின் சரியான உச்சாரணத்தை இலகுவிற் பயின்றுகொள்வர்.

v. சுருங்கிய காலத்திற் பெரும்பயன் அடைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இவ்வாறு பல சொற்களையும் வாசிக்கப் பயின்று கொண்டதன்மேல், சொன்முறை வழிச்சென்று உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டினையும், மெய்யெழுத்துக்களுட் பலவற்றினையும் படிப்பித்த பின்னர், எஞ்சிய மெய் எழுத்துக்களையும், உயிர்மெய் எழுத்துக்களையும் எழுத்து முறைகொண்டு கற்பித்தலும் ஆகும். ஏனெனில், சொன்முறையாக எல்லா எழுத்துக்களையும் கற்பிக்க முயலுங்கால், தமிழ் எழுத்துக்களின் தொகை அதிக மாதலின் நீடியகாலக் கழிவு ஏற்பட இடமாகும். அன்றியும், தமிழ் எழுத்துக்கள் எல்லாவற்றினையும் சொற்களுடன் சம்பந்தப்படுத்திக் கற்பித்தலுங் கஷ்டமாகும்.

குழந்தைகளுக்குக் கவர்ச்சி ஏற்படும்படியான வகையிற் கல்வியைக் கற்பிக்கவேண்டும். பொருட்கள், படங்கள் முதலியனவற்றை உபயோகித்து, விளையாட்டு முறையாகக் கற்பித்தலே சாலச் சிறந்தது. வாசிப்புப் பாடத்தில், புதிய சொற்களைக் கற்பிக்கும்போது, அவர்கள் அவற்றினை நன்கு பதித்துக்கொள்ளுவதற்காக அப்பியாச வேலைகட்கு அச்சுப் புத்தகங்களையே உபயோகியாது, ஆசிரியராலேயே தயாரிக்கப்பட்டுள்ள படஅட்டைகளைக் கையாடிப் படிக்கச் செய்தல் மிகவுஞ் சிறந்த முறையாகும். ஏனெனில், விளையாட்டே சிறுவரது அறிவு வளர்ச்சியின் சீவாதாரமாக விருக்கின்றது.

பார்ப்பது, கேட்பது, கையாளுவது, படிப்பது ஆகிய பலதுறைப்பட்ட மார்க்கங்களிற், கல்வியை ஏற்றுக்கொள்ளச் செய்வதே தக்க முறையாகும். இவற்றிற்கேற்ற சில உதாரண விளையாட்டுகள் இங்கே குறிப்பிடப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## I. பொருளும் சொல்லும்



இப்படத்திற் காட்டப்பட்டுள்ளபடி, முதலாம் வட்டத்தில் (1) சட்டி (2) முட்டி (3) பெட்டி (4) ஈட்டி முதலிய நான்கு பொருட்களின் படங்களும், இரண்டாம் வட்டத்தில், அப்பொருட்களின் பெயர்களைச் சுட்டும் நான்கு வார்த்தைகளும் அமைந்துள்ளன. குறித்த வட்டங்கள் இரண்டும், மத்தியில் அமைந்துள்ள மூளையாணிகளில் நின்று சுழலக்கூடியன. "சட்டி" என்ற படம் மேற்பக்கமாக விடப்படும்போது, பிள்ளைகள், முறை முறையாகச் சென்று படத்தாற் குறிக்கப்படும் பொருளின் பெயரைக் கூறியபின், அப்பொருளின் பெயரைச் சுட்டும் சட்டியென்ற சொல்லை மேற்புறமாக வரும்படி செய்யவேண்டும். இவ்வாறே ஆசிரியர் விரும்பிய எப்பொருளின் படங்களையும், சொற்களையும் அட்டைகளிலமைத்து வாசிக்கச்செய்யலாம்.

## II. புதிய சொற்களை ஆக்குதல்




இப்படத்திற் காட்டப்பட்டுள்ளபடி (1) கதிரை (2) படலை (3) சட்டை என்ற மூன்று எழுத்துக்களா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாய மூன்று வார்த்தைகள், தனி எழுத்துக்களைக் கொண்டு ஆக்கப்படவேண்டியன. ஒரு வட்டத்தில், குறித்த சொற்களாற் சுட்டப்படும் பொருட்களின் படங்கள் அமைந்துள்ளன. ஏனைய மூன்று வட்டங்களிலும், குறித்த சொற்களை ஆக்குதற்கு வேண்டிய எழுத்துக்கள் அமைந்துள்ளன. வட்டங்கள் யாவும் மையத்தமைந்துள்ள சுள்ளாணிகளிற் சுற்றப்படக்கூடியன. கதிரையின் படம் மேலே வரும்படி சுழற்றப்பட்டவுடனே ஒரு பிள்ளை, மற்ற மூன்று வட்டங்களையும் க, தி, ரை என்ற எழுத்துக்கள்மேல் வரிசைக்கு வரும்படி சுழற்றி அமைக்கவேண்டும். இவ்வாறே அமைக்கப்பட்ட சொற்களுக் கேற்ற படங்களையும் அமைத்துக் காட்டும்படி பிள்ளைகள் ஏவப்படலாம்.

## வசன வாசிப்புப் பயிற்றல்

ஆரம்பத்தில், பாலருக்கு ஆர்வத்தை உண்டுபண்ணக்கூடியனவும், இலகுவானவைகளுமான, படம், பட்டம், தடம், தட்டம், வடம், வட்டம் முதலிய சொற்களையோ அன்றேல் உயிர் எழுத்து முதலாகவுள்ள அப்பு, ஆச்சி, இலை, ஈட்டி, உரல், ஊசி முதலிய சொற்களையோ வாசிக்கப் பயிற்றியபின்னர் பாலரை, நேரே வசன வாசிப்புப் பயிற்சிக்கு வழிநடத்துதல் நன்றாகும்.

**வசனமுறை.** ஆரம்பத்தில், தனி வார்த்தைகளைக் கற்றுக்கொண்ட பிள்ளை, பின்னர் பொருள் மறைவற்ற தொடர் மொழிகளைப் பயின்றுகொள்ளல் நன்று. உதாரணமாக அம்மா வா, சோறு தா, மாடு பிடி, குறி சுடு என்பனபோன்ற வாக்கியங்கள் ஆரம்ப வாசிப்புக் கேற்றவை.

பாலர் கீழ்ப்பிரிவு, மேற்பிரிவெனும் இரு பிரிவுகளிலுமுள்ள பாலர், ஆரம்பத்தில், கரும்பலகையிலேயே வாசிப்புப் பயிற்சி பெறுதல் நன்று. இதனாற் பல நன்மைகள் ஏற்படுவன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை:—

i. புத்தக வரிவடிவினும் கரும்பலகை வரிவடிவு பெரிதாகலின் வாசித்தல் இலகுவாகும்.

ii. யாவரையும் ஒரேமுறையிற் கற்பித்தல் ஆசிரியருக்கு இலகுவாகும்.

iii. அட்சர விகற்பம், சொல் விகற்பம் என்பனவற்றை நிறச் சுண்ணக்கட்டிகள் கொண்டு காட்டுதல்கூடும்.

iv. கரும்பலகை வாசிப்புமூலம் புத்தக வாசிப்புக்கு வழி நடத்துதல் இலகுவாகும்.

v. கரும்பலகை வாசிப்பின்மூலம், தாம் கற்றுக் கொண்டவற்றை அப்பியாசப் புத்தகங்களில் எழுதி ஓர் வாசிப்புப் புத்தகமாக்குதலும், அவற்றையே புத்தக வாசிப்பாகக் கொள்ளுதலும் இலகுவாகும். (இவ்வாறு செய்யப்படின் அச்சுப் புத்தக வாசிப்பு இத்தரங்களில் வேண்டாதொழியும்.)

பாலர் ஏலவே கற்றுக்கொண்ட சொற்களைக் குறிக்கும் சொன்மட்டைகள் ஆக்கப்படுதல் வேண்டும். போதிய தொகையான சொன்மட்டைகள் சேகரிக்கப் பட்டபின்னர் குறித்த சொன்மட்டைகளை உபயோகித்துச் சிறு சிறு வசனங்களை ஆக்கும்படி மாணவரை ஏவலாம். வேண்டுமாயின் சொற்களுக்கிடையே சொற்களுக்குப்பதில், சொற்களாற் குறிக்கப்படும் படங்களும் உபயோகிக்கப்படலாம். உதாரணமாக தம்பி என்ற சொல்லும், பின்னர் பந்து என்ற சொல்லிற் குப் பதில் பந்தின் படமும், ஈற்றில் " அடிக்கிறான் " என்ற சொல்லும் சேர்ந்தவிடத்து, **தம்பி பந்து அடிக்கிறான்** என வாசிக்கச் செய்தல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்மட்டைகளைச் சேர்த்து வசனங்களை ஆக்கச் செய்யும்போது அவற்றைப் பின்வருமாறு எழுத்துப் பீடங்களில் ஒழுங்காக நிரைத்து வாசிக்கச் செய்தல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | பசு | புல்லு | மேயும் | |
| (ii) | பசு | கன்று | ஈனும் | |
| (iii) | பசு | பால் | சுரக்கும் | |
| (iv) | பசுவின் | பால் | இனிமை | உள்ளது |
| (v) | பசுவின் | பால் | சுகம் | தரும் |

மேற்படி வசனங்களை, சொன்மட்டைகள் கொண்டு ஆக்கவும் வாசிக்கவுஞ் செய்தபின்னர், கரும்பலகை வாசிப்பிற்கு வழிநடத்துதல் முறையாகும். கரும்பலகை வாசிப்பின் பின்னரே புத்தக வாசிப்பிற்குக் கொண்டு செல்லல் வேண்டும். முழுக்கருத்தமைந்த சொற்றொடர்களையே வாசிக்கச் செய்தலும், கருத்தை விளங்கிக் கொள்ளச் செய்தலும் வேண்டும். வசன வாசிப்புப் பயிலும்போது, அட்சரங்களைத் தனிப்பட்ட முறையிற் கற்பிக்கவேண்டிய அவசியமின்று. சில எழுத்துக்களை நன்ருக அறியாத காலத்தும், கருத்தைத் தெரிந்து கொள்ளும் முறையில் வாசிக்கச் செய்தலே போதுமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. எழுத்துப் பாடம்

மக்கள் தம் மனத்திடை தோன்றுகின்ற கருத்துக்களைப் பேச்சுமூலம் பிறர் அறியுமாறு செய்தல் சர்வ சாதாரணமானதோர் செயலாகும். எடுத்துப் பேசச் சந்தர்ப்பம் வாய்க்காதபோது, அதனை எழுதித் தெரிவித்தல் மற்றோர் வகைச் செயலாமென்க. எனவே, எழுதுதலின் சீரிய நோக்கம் நமது மனக்கருத்தைப் பிறருக்கு நன்றாகத் தெரிவிப்பதேயாகும். ஆதலின், மனக்கருத்தைத் தெரிவித்தற்கு எழுதுதலும், நன்றாகத் தெரிவிப்பதற்குப் பிழையற எழுதப் பழகுதலும் அவசியமாகின்றன.

எழுத்து எழுதுதல் என்பது சித்திரம் வரைதலை ஒத்ததோர் செயல். சித்திரம் வரைபவன் ஒருவன் எவ்வாறு குறித்ததோர் பொருளை நன்றாக உற்றுப் பார்த்தும், அவதானித்தும், கண்கண்டதைக் கையால் வரைகின்றானே அவ்வாறே, கண்ணாற் கண்ட வரிவடிவாகிய எழுத்தைப் பாலர்கள் சித்திரம் வரைவது போல எழுதக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். எனவே, பாலர்கள் மிகவுஞ் சுலபமான சித்திரங்களைக் கரும்பலகையிலோ, அன்றேற் கற்பலகையிலோ தீர்க்கமாக வரையப்பழகிய பின்புதான் அவர்கள் எழுத்துக்களைப் பிரதிபண்ணத் தொடங்குதல்வேண்டும்.

குழந்தைகளின் சிறு விரல்களின் பேசிகள் பலப்படாமையால் அவை நிதானமற்றவையாகின்றன. தங்கள் சிறு விரல்களால், தாங்கள் நினைத்தவாறு எழுதுதல் அவர்களுக்கு மிகவுங் கஷ்டமான செயலாகும். இதனால், ஆரம்பத்திற் கையை வீசிப் பெரும்படியான சித்திரங்களைக் கரும்பலகையிற் போடப்பழகி, கரங்களுக்கும், விசேடமாக விரல்களுக்கும் போதிய பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் பழக்கமும் வந்த பின்னரே எழுத ஆரம்பிப்பது சிறந்த முறையாகும். எழுந்தமானமாக ஆரம்பத்திலேதானே விரல்களால் நிலத்தில் எழுதச் செய்வதாற் கைவிரல்களில் வலி எடுப்பப் பாலர், உடலை வளைத்தலும், நாவை நீட்டலும், தலையை ஒருபக்கஞ் சாய்த்துக்கொள்ளுதலும் ஆகிய இவற்றில் ஈடுபடத் தொடங்கிவிடுவார்கள்.

எழுத்துக்களை எழுதக் கற்பிக்கும்போது (1) சித்திரம் வரைதல் (2) குச்சு அடுக்குதல் (3) விதைகள் வைத்தல் (4) பருப்புகள் ஒட்டுதல் முதலிய விளையாட்டுகளில் அதிகமாகப் பழகிவந்த உருவங்களோடு இயைபுள்ள எழுத்துக்களை ஆரம்பத்திற் கற்பித்தலே நல்லாசிரியர் செய்யத்தக்க செயல்முறை ஆகும். இதன் பின்னரே அதிகம் வளைவுகொண்ட எழுத்துக்களைக் கிரமப்படி எழுதப் பழக்குதல் வேண்டும். உதாரணமாக: ப, ட, ய, ம, ச, க, எ, அ, இ என்ற வரிசைக் கிரமத்தை அநுசரித்துப் படிப்பிக்கத் தொடங்கலாம். இவற்றையும் எழுத்துமுறையாகக் கற்பியாது சொற்களாகவே எழுதப் பழக்குதல் நோக்கங்கொண்ட செயலாகும். உதாரணமாக, "படம்" என்ற சொல்லை மாணவர் முன்னர் வாசிக்கப் பயின்றுகொண்டனர். பின்னர் அச்சொல்லையே எழுதுவதும் அவர்களுக்கு விருப்பங்கொண்ட செயலாகும். அவ்வாறின்றி, ப, ம், ட, எனத் தனித் தனி எழுதுதல் அவர்களுக்கு விருப்பமற்ற கட்டாயச் செயலாகவே யிருக்கும்.

எழுதப் பழகும்போது நேர் ரேகைகள் அமைந்துள்ள இலகுவான எழுத்துக்களையே முதற்கண் பயிற்ற வேண்டுமெனக் கண்டுகொண்டோம். அவ்வெழுத்துக்களையும் அரக்கடதாசியில் (Sand-paper) எழுத்துக்களை அழுத்திப் பழகுதலும் செய்யத்தக்கது. குழி பறித்த எழுத்துக்களின்மேற் பன்முறை எழுதிப் பழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதலும் பயன் தருவதாகும். சுத்தமான மணலின் மேல் எழுதியாவது எழுதும் பழக்கத்தை வருவித்துக் கொள்ளலாம். பின்னர் இருகோடுகள் அமைந்துள்ள கற்பலகையில் எழுதுவதற்கு இடங்கொடுக்கலாம். இக் கோடுகளை ஆசிரியரே ஒழுங்குபடவும் நன்ருகவும் அமைத்துக் கொடுத்தல்வேண்டும். இரண்டிற்கு மேற் பட்ட கோடுகள் இடப்படுதல், உதாரணமாக ஐந்து கோடுகள் அமைத்துப் பயிற்றல், ஆரம்பத்தில், பால ருக்கு மலைவை உண்டுபண்ணுவதாகும். எதனை எழு தும்போதும் புனிதமாகவும் உறுப்பமையவும் விரை வாகவும் எழுதச்செய்தல் வேண்டும்.

எழுத்துப்பாடங் கற்பித்தலிற் பின்வரும் விதிகளை அநுசரித்தல் வேண்டும். அவை:—

i. பிள்ளைகள் ஒவ்வொருவரும் தத்தங் கற்பலகை களை எழுத்துப் பீடங்களின்மேல், கற்பலகை யின் ஓரம் பீட ஓரத்திற்கு சமதூரமாகவிருக் கும்படி கவனிக்கவேண்டும்.

ii. பிள்ளையின் இடது கரம், கற்பலகையின் இடது மட்டையிற் பொருத்திருத்தல் வேண்டும்.

iii. எழுதுகோலாக உபயோகிக்கப்படுங் கற்கூரை, பெருவிரலுக்கும் நடுவிரலுக்குமிடையே பிடித் தல் வேண்டும்.

iv. சுட்டுவிரல் கற்கூருக்கு மேற் பொருத்தலும் கற்கூரின்மேலந்தம் வலது தோளை நோக்கி யிருத்தலும் வேண்டும்.

எழுத்துப்பாட நேரத்திற் பிள்ளைகள் எப்பொழு தும் நிமிர்ந்த நிலையிலிருத்தலும், கரும்பலகையில் எழு தப்படுவதைக் கவனித்தலும் வேண்டும். ஆசிரியர், ஓர் எழுத்தை எழுதும்போது எவ்விடத்திற் ருெடங்கி எவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடத்தில் முடிவுகட்டுகின்றார் என்பதை அவதானித்த பின், பிள்ளைகளும் அவ்வாறே செய்தல்வேண்டும். முன்னர் நிலைக்கோடுகளும், பின்னர் சாய்ந்த கோடு களும் அதன்பின்னரே பல பரிமாணமுடையனவும் வெவ்வேறிடங்களிற் றொடங்கி முடிவனவுமான வளைந்த கோடுகளும் படிமுறையே படிப்பிக்கப்படலாம்.

[stamp]

# 15. எண் பாடம்

பாலர் கீழ்ப்பிரிவிலே "எண்" என்ற ஓர் பாடம் தனிமுறையிற் கற்பிக்கப்படுதல் நல்லதல்லவென்பது அநுபவம்வாய்ந்த பல பேராசிரியரது கொள்கை. ஏனெனில், ஐந்து அல்லது ஆறு வயதுப் பிள்ளைகள் அடையக்கூடிய எண்ணின் நிச்சய அறிவாகிய நிதானம் மிகவுஞ் சொற்பமே யென்பது மானத தத்துவ சாஸ்திர முடிபு. எண் சம்பந்தமான எண்ணத்தைப் பாலர் தம் வயது வரும்போது, தாமே பெற்றுக் கொள்வர் என்பது அநுபவச் சான்று. காலம் வரு முன்னரே இவைகளைத் திணிப்பது அதிக கெடுதியை உண்டாக்குமென்று "ஒலிவர் யோட்ஜ்" என்பவர் கூறுகின்றார்.

பாடசாலைக்குப் பாலர் முதன் முதல் வரும்போதே அவர்களுக்கு எண்களைப்பற்றிய எண்ணம் ஏதோ சொற்பமெனினும் இல்லாமல் இல்லை. பெரிது, சிறிது, கூட, குறைய, இரண்டு அப்பம், மூன்று இனிப்பு, ஒரு உடுப்பு என்ற சொற்ப நிதானப்பட்ட அறிவோடேயே வருகின்றனர். தங்கள் சிறிய வாழ்க்கைக் கேற்ப, வீட்டுச் சீவியத்திற் கணித்தல்செய்து பழகியுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளார்கள். அக்காவுக்கு ஐந்து சட்டை, எனக்கு இரண்டு தானு? அதுவும் கிழியற் சட்டையா? என்று தங்கள் தாய்மாரிடம் வினவுவதும் உண்டு. இவ்வாறே கிரமப் படாத எண்களைப்பற்றிய அறிவுதான் அவர்களது சுபாவ குணங்களோடு சம்மந்தப்பட்டிருப்பதால் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகட்கு எண்பாடமென்பது கிரமமாகக் கற்பிக்கப்படவேண்டிய தொன்றன்று. பேராசிரியர் பிரோபல் என்பவர் பின்வருமாறு கூறுகின்றுர்.

i. எண்ணுதற்கேற்ற கட்டைகள், குச்சுகள் முதலியவற்றைப் பாடசாலையிற் கையாடுவதால், குழந்தைக்கு எண்களைப்பற்றியதோர் எண்ணமுதிக்கும்.

ii. இவ்வெண்ணமானது ஆரம்பத்தில், குலக்காகவும், பின்னர் வர வரத் தெளிவடைந்துங் கொண்டுபோகும்.

iii. சமையாசமையங்களிற் பாலருக்கு எண்ணைப் பற்றிய எண்ணம் உதிக்கும் என்ற நம்பிக்கையோடேயே கற்பிக்கவேண்டும்.

iv. ஐந்து அல்லது ஆறு வயதுச்சிறுருக்கு எண்ணை, எண்ணுகக் கற்பியாது விளையாட்டாகவும் வேலையாகவுங் கற்பித்தல்வேண்டும்.

## எண் படிப்பித்தலிற் பொருட்களைக் கையாடும் முறை

பாடசாலைக்கு அகத்தும் புறத்துங் காணுங் காட்சிகளிலிருந்தும், நடக்குஞ் சம்பவங்களிலிருந்தும், எண் சம்பந்தமான வடிவங்கள் மனதிற் தோன்றுவது இயல்பாமன்ருே? ஆகவே, இவ்வியல்பு நோக்கிப் பொருட் சுட்டாகவே எண்களைப்பற்றிப் படிப்பித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்று. கையாடப்படும் பொருட்கள் பின்வரும் இலட்சணங்களைக்கொண்டவைகளா யிருத்தல் வேண்டும்.

அவை :—

i. பிள்ளைகளின் மனதைக் கவரக்கூடியவைகளாக விருத்தல் வேண்டும்.

ii. அவர்களது சிறிய அநுபவத்துக்கு எட்டியவைகளாயிருத்தல் வேண்டும்.

iii. அவர்கள் தாமே விருப்பப்படி எடுத்துக் கையாடக் கூடியவைகளாகவிருத்தல்வேண்டும்.

iv. நிறம், வடிவம், தொகை என்பனவற்றில் விகற்பப்பட்டிருத்தல் வேண்டும்.

சிறுவர் ஒரே விஷயத்தில் அல்லது பொருளில் தங்களுக்கு அதி விருப்பமான எதனிற்றானும், நெடுநேரங் கவனஞ் செலுத்துவது இயல்பல்லவென்பது எவரும் ஒப்புக்கொள்வதொரு உண்மையாகும். எனினும், ஆரம்ப எண்பயிற்சி பெற்றுக்கொண்ட பிள்ளைக்கு வரவர நிதானிக்கும் பயிற்சி கூர்மைப்படுவதாகும். அதனால், பலநிறப் பொருள்களினும் ஒரே நிறப் பொருளும், பலவகைப் பொருளினும் ஒரேவகைப் பொருளும் மனதிற்கு ஏற்றவையாக மாறிவிடுகின்றன. ஏனெனில், பலவித அல்லது பல நிறப் பொருட்கள் ஒரே நேரத்திற் கையாடப்படுவதாற் சிறுவர் எண்களைப்பற்றிய கவனத்தை நீக்கி பொருட்களிலேயே கவனஞ் செலுத்தும்படி நேரிடக் காரணம் ஏற்படுகிறது. எனவே எண்படிப்பித்தலிற் பின்வரும் விதிமுறைகளின்படி பொருட்களைக் கையாடுதல் நன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை :—

i. பல பொருட்கள் சேர்ந்த ஓர் குவியலிலிருந்து பாடத்தை ஆரம்பித்து, அதைப் பல பாகங்களாகப் பிரித்தும், சில பாகங்களை ஒன்று சேர்த்தும் பொருட்சுட் டெண்முறையிற் படிப்பித்தல்.

ii. ஆரம்பத்தில் ஒருவித பொருளிலும் பார்க்கப் பலவித பொருட்களைக் கையாடிப் படிப்பித்தல்.

iii. பொருட்களை மாணவரே எப்போதுங் கையாடும்படி செய்தல்.

iv. கையாடப்படும் பொருட்கள் பெரும்பாலும் பிள்ளைகளின் வெளியனுபவங்களோடு சம்பந்தப்பட்டனவாயிருத்தல்.

v. எண்களைப்பற்றிய ஒழுங்கற்ற எண்ணம், படிப்படியாக நிரைப்படுத்தப்பட்ட எண்ணத்தைப் பிறப்பிக்கக்கூடியதாக விருத்தல்.


## பொருட்களும் மானத காட்சியும்

சிறூர், எண்களைக் கிரகிக்கும்போது அவற்றைப் பொருட்களோடு சம்பந்தப்படுத்தியே கிரகிக்கின்றனர். இவ்வாறு செய்வதால் அவர்கள் எண்ணங்களின் படத்தை மனத்தில் அமைக்கின்றனர் என்பதும், பெரிய எண்களைக் கணிக்கும்போது அவற்றின்படம் மனதின்கண் பூரணமாகப் பதியாத காரணத்தால், பிழைவிடுகின்றனர் என்பதும் ஒப்புக்கொள்ளத்தக்கது.

பொருட் சுட்டெண்ணைப் படிப்பித்த காலத்தும், மானத காட்சிக்கண் படந்தோன்றும்படி அவற்றை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்படி நிரைத்துப் படிப்பியாதுவிடின் எண்களைப்பற்றிய சிறாரது மனோபடம் இவ்வாறிருக்கும்.



படம் உண்டாகும்படி முறைப்படுத்திப் படிப்பித்தாலோ அவர்களின் மனோபடம் எண்களுக்கேற்ப வித்தியாசப் படுவதாகும். உதாரணமாக மூன்று, நான்கு, ஐந்து என்னும் எண்களைப்பற்றிய மானதபடம் இவ்வாறிருக்கும்.

**மூன்றின் படம்** **நான்கின் படம்** **ஐந்தின் படம்**



நேர்வரிசையில் மணிகளை, அல்லது குற்றிகளை, அன்றேல் ஒன்றன்மீ தொன்றடுக்கப்பட்ட பல புத்தகங்களின் தொகையை எண்ணாது, ஒரே நோக்கிற் கணித்துக் கூறும்படி பாலரிடங் கேட்டால் அவர்கள் ஒன்று, இரண்டு, மூன்று என எண்ணியே கூற ஆரம்பிப்பர். ஆனால், ஐந்து என்னுந் தொகைக்குக் கீழ்ப்பட்ட எத்தொகையினையும் ஒரே நோக்கிற் கணித்துக் கூறும் வன்மை அவர்களுக்குண்டு. எனவே ஐந்திற்கு மேற்பட்ட எண்களைப் பாலர் கணித்துக் கூறவேண்டின் அவை பட முறையாகவே அமைந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவாகும்.

பத்துவரையுமுள்ள எண்களை இவ்வாறு படிப்பிக்கலாம். பத்தின் மேற்பட்ட எண்களை பத்தாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தின் பகுதிகளாலும் பாகுபாடு செய்து கற்பித்தலே செய்யத்தக்கதாகும். இவ்வாறு செய்தாலன்றிப், பாலர் பெரிய எண்களைக் கணக்கிடுதல் இயலாதகருமமாகும். குறித்த முறைப்படி கற்பிக்கப்பட்ட மாணவர் பெரிய எண்களைக் கணிக்கும்போது விரைவாகவும் பிழையறவும் கணிக்கும் ஆற்றல் பெற்றிருப்பதைச் சில பாடசாலைகளில் அநுபவமாகக் காணலாகும்.

## சில சாதாரண தவறுகள்

i. எண் பாடத்திற்கேற்ற உபகரணங்களை உபயோகியாது அந்தந்த வேளைகளிற் கைக்கெட்டிய எதனையும் மனம் வந்தவாறு உபயோகித்தல்.

ii. ஒரே பாடநேரத்திற் பலவித உபகரணங்களைக் கையாடுதல்.

iii. எண்களின் படங்களை அல்லது வடிவங்களை அடிக்கடி மாற்றுதலும் அவற்றைப் பலவகைப் பொருட்களால் அமைத்தலும். (இவ்வாறு செய்தலாற் பிள்ளைகளின் மனம் மலைவுறுதலோடு எண்களைப்பற்றிய நிச்சய அறிவும் இல்லாதுபோக ஏதுவாகும்.)


iv. பிள்ளைகளின் உயரத்துக்கேற்க, எண் சட்டம் முதலியவற்றைத் தாழவோ, அன்றேல் உயரவோ ஏற்றவாறு வையாதுவிடுதலும், உயரங் கூடியபோது ஆசிரியர் தாமே மூளைகளை அமைத்தலும்.

v. பிள்ளைகளின், முன்னறிவு எவ்வளவென்பதை அளந்தறியாது அறிந்தவற்றைப் படிப்பித்து வீண்காலம் போக்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vi. கூட்டல், கழித்தல் முதலிய விதிக் கணக்குகளைச் செய்விக்கும்போது, மாணவர் தம் விரல்களைப் பாவித் தெண்ண விடுவதும், ஒன்று, இரண்டு, மூன்று என்ற முறைப்படி எண்ண இடங்கொடுத்தலும்.


மேலும் எண்களின் படங்களை அமைத்தற்கண் எப்பொழுதும் ஒரேவித ஒழுங்கு காணப்படவேண்டும். உதாரணமாக,




இவ்வாறே படங்களை அமைத்துக் கற்பிப்பின், எண்களைப்பற்றிய எண்ணமும் ஓர் ஒழுங்குபட்ட முறையிற் சிறாரது மனதில் இலகுவாக அமைவதாகும். யோசனையுள்ள எந்த ஆசிரியரும் ஏனைய எண்களையும் படிப்பிக்குங்கால் இவ்வித படமுறைகளைத் தாமாகவே ஆக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிப் படிப்பித்தல் இயலுமென்க. குறித்த எண்களைப் பற்றிய குலக்கான எண்ணம், மேற்சுட்டிய படமுறைகளாற் கைவரப்பெற்ற பின்னர், அவ்வெண்களைப் பாகுபாடுசெய்து கற்பித்தலுஞ் செய்யத்தக்கது. எட்டு என்னும் எண்ணின் பாகுபாட்டு வடிவங்களைப் பின்வருமாறு குறிப்பித்தல்கூடும்.




இவ்வாறே ஏனைய எந்த எண்ணையும், பாலரைப் பயிற்றும் ஆசிரியர், தமது விவேகத்தைக் கையாடி வேண்டிய வடிவங்களை மாணவரைக்கொண்டே ஆக்குவித்துக் கற்பித்தல்வேண்டும். பிள்ளைகள் படங்களின் வடிவங்களை அமைக்கும்போது, அவர்கள் தாமே மூளைகளை உபயோகப்படுத்துதலும், அவ்வாறு செய்தபின்னர் தாம் இயற்றியது யாதெனக் கூறுதலும் செய்யத்தக்கது.

மேலும், கூட்டலுங் கழித்தலும் ஒரேபாட நேரத்தில் எப்போதும் ஒருமித்தமுறையிற் கற்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறே மேற்பிரிவில் இலகுவான பெருக்கலும் பிரித்தலும் ஒரே முறையிற் செய்யப்படலாம். புதிய எண்களைப் படிப்பிக்கத் தொடங்கும்போது அதற்கு முன் படித்துள்ள எண்களைப்பற்றிய எண்ணம் நன்றாக அழுத்தப்படுதலும், இந்த அறிவை ஆதாரமாகக்கொண்டே புதிய எண்ணைப்பற்றிய நிச்சய அறிவை வருவித்தலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கழித்தல் முறைகள்

கூட்டலைப் பாகுபாட்டுமுறையிற் கற்றுக்கொண்ட பிள்ளை, கழித்தலையும் அம்முறைவழியே கற்றுக்கொள்ளுதல் இலகுவாகும். எனினும், கூட்டலினும் கழித்தலைச் செய்தல் பாலருக்குக் கஷ்டமானதோர் செயலேயாகும். இக்கஷ்டத்தை விவித முறைகள்கொண்டு விளக்குவதால் நீக்குதல்கூடும். பின்வரும் மூவித முறைகள் கழித்தற் கணிதத்தைக் கற்பித்தற்கு மிகவும் வாய்ப்பானவை. அவை :—

### 1. பாகுபாட்டு முறை (Decomposition Method)

(i) **35—18;**

பத்து ஒன்று பத்து ஒன்று

$$35 = 2 + 5 = 2 + 10 + 5$$
$$18 = 1 + 8 = 1 + 8$$
$$1 + 7$$

| ப | ஒ |
|---|---|
| 3 | 5 |
| 1 | 8 |
| 1 | 7 |

(ii) **434—186**

$$434 = 400 + 30 + 4 = 300 + 120 + 14$$
$$186 = 100 + 80 + 6 = 100 + 80 + 6$$
$$200 + 40 + 8$$

| | | |
|---|---|---|
| 3 | 12 | 14 |
| ~~4~~ | ~~3~~ | ~~4~~ |
| 1 | 8 | 6 |
| 2 | 4 | 8 |

**விளக்கம்.** 2-ம் கணிதத்தில் 4 ஒன்றுகளிலிருந்து 6 ஐக் கழிக்க முடியாதாகையால் முதல் வரியிலுள்ள பத்துக்களிலிருந்து ஒரு பத்தை எடுத்து 4 ஒன்றுகளுடன் சேர்க்க 14 ஆகிறது. இப்போது 14 ஒன்றுகளிலிருந்து 6 ஒன்றுகளைக் கழித்தல்கூடும். இப்படி முறையே ஏனையவற்றையும் விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2.** சம கூட்டல் முறை (Method of Eqal Addition)

$$434 = 400 + 30 + 4; \quad 400 + 130 + 14$$

$$186 = 100 + 80 + 6; \quad 200 + 90 + 6$$

$$200 + 40 + 8$$

| | | |
|---|---|---|
| | 13 | 14 |
| 4 | 3 | 4 |
| 2 | 9 | |
| 1 | 8 | 6 |
| 2 | 4 | 8 |

**விளக்கம்.** 4 ஒன்றுகளிலிருந்து 6 ஐக் கழிக்க முடியாதாகையால் 10 ஒன்றுகளை மேலுக்கும், ஒரு பத்தைக் கீழுக்குங் கூட்டுக. 14 லிருந்து 6 ஐ எடுத்தால் மீதி எட்டாகும். 3 பத்துக்களிலிருந்து 9 பத்துக்களை எடுக்க முடியாதாகையால் மேலுக்கு 10 பத்துக்களையும் கீழுக்கு 100 ஐயுங் கூட்டுக. இப்போது 13 பத்துக்களிலிருந்து 9 பத்துக்களை எடுக்க எஞ்சுவது 4 பத்துக்கள். இவ்வாறே 4 நூறுகளிலிருந்து 2 நூறுகளைக் கழிக்க மிகுதி 2 நூறுகள் ஆகும்.

**3.** பூரணமுறைக் கழித்தல் (Complementary Method)

$$434 = 400 + 30 + 4$$

$$186 = 100 + 80 + 6$$

$$248 \quad 200 + 40 + 8$$

$$11 \quad 100 \quad 10$$

**விளக்கம்.** விடையாக உள்ள எண்கள் கீழ்வரிசை எண்களுடன் கூட்டப்படும்பொழுது மேல்வரிசையிலுள்ள எண்கள் வரும் என்பது பிள்ளைக்கு நன்றாகத் தெரியும். எனவே பிள்ளையின் வேலை காணாத தொகையைக் கண்டுபிடித்தலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது,

**6 + (?) = 14 ;** ஒரு பத்துக் கடன் எடுக்கப்பட்டால்;

**9 + (?) = 13 ;** ஒரு நூறு கடன் எடுக்கப்பட்டால்;

இவ்வித படிமுறை விளக்கங்கொண்டு ஏனையவற்றையும் விளக்குதல்வேண்டும்.

## பெருக்கல் வாய்பாடு

வாய்பாடுகளைப் பிள்ளைகள், வெற்று மனனஞ் செய்யவிடப்படுதல் முறையாகமாட்டாது. ஏனெனில் விளக்கமின்றிப் பயிலவிடுவதால் அவர்கள் கற்பதெல்லாம் கிளிப்பிள்ளைப் பாடங்களாகவே மாறிவிடுகின்றன. விளக்கத்தோடு கற்றுக்கொள்ளவேண்டின் பொருட்களை உபயோகித்தும், மணிச்சட்டம், துளைச்சட்டம் முதலியவற்றை உதவியாகக்கொண்டும் மாணவர் தாமாகவே வாய்பாடுகளை ஆக்கிக்கொள்ளச் செய்ய வேண்டும். இதன் பின்னரே ஆக்கப்பட்டுள்ள வாய்பாடுகளை மனனஞ்செய்ய விடப்படுதல் முறையாகும். உதாரணமாக 3-ம் வாய்பாட்டை எடுத்துக்கொள்வோம்.


| | | | | |
|---|---|---|---|---|
| * * * | 1 | தரம் | 3 = | 3 |
| * * *<br>* * * | 2 | தர | 3 = | 6 |
| * * *<br>* * *<br>* * * | 3 | × | 3 = | 9 |
| * * *<br>* * *<br>* * *<br>* * * | 4 | × | 3 = | 12 |

இவ்வாறு எல்லா வாய்பாடுகளையும் விளக்கியபின்னர் மூவொன்று மூன்று, மூவிரண்டாறு, மும்மூன்றொன்பது, மூந்நான்கு பன்னிரண்டென முறைப்படி மனனஞ் செய்யும்படியாக விட்டுவிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலவிகற்ப வேலை

எண்ணோடு சம்பந்தப்பட்ட மூலாதார விதிகள் நான்கும், முறையே கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் என்ற முறைப்படியே கற்பிக்கப்படவேண்டிய நியதியில்லை. ஏககாலத்தில் இந்நான்கு விதிகளும் படிப்பிக்கப்படுதலே முறையாகும். இவ்வாறு கற்பிக்கப்படின் மாத்திரமே எண்களைப்பற்றிய தொடர்பான எண்ணம் பாலருக்கு உண்டாகும். பாலர் தங்களுக்குள்ள தொடர்பான எண்ணத்தைக் குச்சு, மூளைக்கட்டை முதலியனகொண்டு ஆக்கிக்காட்ட விடப்படுதலும் வேண்டும். உதாரணமாகப் பின்வரும் அப்பியாச வேலையைக் கவனிக்குக.



| கரும்பலகைக் கணிதம் | மாணவரது வேலை |
|---|---|
| 7 − 3 | 7 − 3 = 4 |
| 5 + 2 | 5 + 2 = 7 |
| 3 × 4 | 3 × 4 = 12 |
| 4 − 3 | 4 − 3 = 1 |
| 8 ÷ 2 | 8 ÷ 2 = 4 |

மேற்காட்டிய உதாரண வேலைப்படி, கரும்பலகையில் எழுதப்படுங் கணிதங்களைக் குச்சுகள் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்படி வகுத்து அமைத்தலும் இதன் பின்னர் குறித்த கணிதங்களை எழுதி வரவேண்டிய விடைகளை எழுதிக்காட்டுதலும் முறையாம்.


## எண் விளையாட்டுகள்

எதனையும் விளையாட்டுகள்மூலங் கற்றல் பிள்ளைகட்கு ஆர்வத்தையும் இன்பத்தையும் கொடுக்கக்கூடிய தென்பது முன் பன்முறையும் சுட்டப்பட்டதோர் விஷயம். எனவே தெரிந்து கொடுக்கப்படும் விளையாட்டுகளும் ஆர்வத்தையும் இன்பத்தையுங் கொடுக்கக்கூடியனவாகவும், ஆசிரியர் சொற்ப ஆயத்தத்தோடு நடத்தக்கூடியவைகளாகவும் இருத்தல்வேண்டும். இவ்வாறு செய்யப்படின் அவர்களது வேலையில் விரைவும் நுட்பமுங் காணப்படுதலோடு நினைத்தலும், நிச்சயித்தலும் சுயநம்பிக்கையும் ஏற்படும். மேலும் மானதப் பயிற்சியோடு தேகப்பயிற்சியும் ஒருங்கு நடைபெறும். எண்ணோடு சம்பந்தப்பட்ட சில விளையாட்டுகள் ஈண்டு குறிப்பிடப்படுகின்றன.

### 1. மீன்குளம்

**உபகரணம்.** தடித்த அட்டைகளில் அல்லது மெல்லிய தகரங்களில் வெட்டப்பட்ட மீன்கள் உபயோகிக்கப்படலாம். மீன்களின் வாயில் வளையங்கள் கட்டப்படவேண்டும். தூண்டில்போன்ற கொழுக்கிகள், கம்புகளிற் கட்டப்பட்ட நாண்களின் நுனியில் தொங்கவிடப்படவேண்டும். பாலர் கீழ்ப்பிரிவிற்கு 10 மீன்களும் மேற்பிரிவிற்குப் பத்தின் மேற்பட்ட மீன்களும் உபயோகிக்கப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஆசிரியர் :**— செய்கைக் குளங்களை அன்றேல் மூன்று அல்லது நான்கு குளவடிவங்களைத் தளத்தில் வரைந்துவிட்டு அவற்றுள் செய்கை மீன்களைப் போட்டுவிடலாம். சில அகன்ற வாய்ப் பாத்திரங்களை நீரால் நிரப்பிக் கிடேச்சியாற் செய்யப்பட்ட மீன்களை மிதக்கும்படி விடலாம்.


**பாலர் :**—பாலர் மூன்று அல்லது நான்கு கூட்டங்களாகப் பிரிந்து நின்று மீன்களைப் பிடிக்கின்றார்கள். பாலர் கீழ்ப்பிரிவிற் பிடிக்கப்படும் மீன்கள் தனித் தனியே எண்ணப்படுகின்றன. மேற்பிரிவிற் பிடிக்கப்படும் மீன்கள் அவற்றிற் குறிக்கப்பட்டிருக்கும் எத்தொகையையுந் தெரிவிக்கும். குறித்த நேரத்துள் எக்கட்சியினர் அதிக தொகை மீன்களைப் பிடிக்கிறார்களோ அவர்களுக்கே வெற்றியுரியதாகும்.

## 2. விதை முடிப்பு

பிள்ளைகள் வட்டமாக நிறுத்தப்படுகின்றார்கள். பல கூட்டங்களாகப் பிரிக்கப்படுகின்றார்கள். அவர்களது மத்தியில், தளத்தின்மேலே பின்வரும் முதலாம் வடிவத்தைக் கீழ்ப்பிரிவிற்கும், இரண்டாம் வடிவத்தை மேற்பிரிவுக்குமாக ஆக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விதைமுடிப்பைக் குறித்த வடிவத்துள் எறிந்து அம்முடிப்பு விழுமிடத்துள்ள சதுரத்துள் அமைந் திருக்குந் தொகையை விரைவிற் கவனித்துக் கூறுதல் வேண்டும். சரியான விடைகள் கரும்பலகையிற் குறிப் பிடப்படும். கூடிய புள்ளி பெற்ற பகுதியினர் வெற்றி யாளராவர்.

## 3. டொமினோ விளையாட்டு

டொமினோக் கட்டைகள் ஒவ்வொன்றும் இரு பங் குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வோர் பங்கிலும் ஒன்று தொடக்கம் 6 முடியவுள்ள எண்களைக் குறிக்




கும் புள்ளிகள் இடப்பட்டிருக்கும். அவற்றுட் சில கட்டைகள் ஓர் பங்கிற் புள்ளிகளும் மறு பங்கில் வெற் றிடமுமாக விடப்பட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரும் இருபக்கமுஞ் சமபுள்ளிகளைக் கொண்ட கட்டைகளுடன் விளையாட்டை ஆரம்பிக்க வேண்டும். அப்பால் நாலின் அயலின் நாலையும், வெற்றுப் பங்காயின் அதன் அயலில் வெற்றுப்பங்கையுமாக மேற்படி படத்திற் காட்டப்பட்டுள்ளபடி அமைத்து விடுதல்வேண்டும். விரைவிற் படத்திற் காட்டப்பட்ட படி ஒழுங்குபடுத்தித் தத்தம் கட்டைகளையெல்லாம் இல்லாமற் செய்பவரே வெற்றியாளராவார்.

## 4. வாத்து வெடிவைத்தல்

தடித்த அட்டைகளில் வெட்டப்பட்ட 10 வாத்துக்கள் ஒரே வரிசையில் நிற்பாட்டப்படக்கூடிய முறையில் அமைக்கப்படுதல் வேண்டும். ஒவ்வோர் வாத்திலும் முறையே 1, 2, 3 முதலிய இலக்கங்கள் இடப்பட்டிருத்தல்வேண்டும். ஆசிரியர் நிலத்தில் ஓர் பெரிய குளம் வரைந்து மேற்படி வாத்துக்களை அதற்குள்ளே நிறுத்தலாம்.




பிள்ளைகள் ஓர் மரப்பந்தினால் அல்லது சாதாரண பந்தினால் வாத்துக்களைத் தட்டி வீழ்த்துதல் மூலம் அவற்றை வெடிவைத்தலாக விளையாடலாம். ஒவ்வொருவருந் தாந்தாம் சுட்டுவீழ்த்திய வாத்துக்களை வைத்துக்கொண்டு அவற்றிலுள்ள எண்ணின் பெயரை ஏனைய பிள்ளைகட்குத் தெரிவிக்கலாம். பிள்ளை அவ் விஷயத்தை அல்லது அத்தாற் குறிக்கப்படும் தொகையைத் தனது பலகையில் அல்லது காகிதத்தில் எழுதுதலுஞ் செய்யத்தக்கது. வாத்துக்கள் யாவுஞ் சுடப்படும்வரையும் விளையாட்டு நீடிக்கப்படலாம். எந்தப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை கூடியதொகையான வாத்துக்களை வீழ்த்தியுள்ளதோ அந்தப்பிள்ளைக்கே வெற்றி உரியதாகும்.

## 5. வீடுசெல்லல்

இலகுவான சிறு கணிதங்கள் எழுதப்பட்ட காகித அட்டைகள் தயாரிக்கப்படவேண்டும். வகுப்பறை நிலத்தில் ஏலவே தயாரிக்கப்பட்டுள்ள "வீட்டுக்கு வழி" எனப்படும் சித்திரத்தின் அயலிலே அவை ஆங்காங்கு வைக்கப்படும். அதில் 5 படிக்கற்கள், ஓர் நதி, ஓர் பாலம், ஓர் படலை, வீடு என்பன அடையாளம் பண்ணப்பட்டிருக்கும்.

தனித்தனி கல் ஆறு முதலானவற்றின் பக்கத்திலும் மேற்கூறிய கணித அட்டைகளை வைத்தல் வேண்டும்.





ஒவ்வோர் பிள்ளையும் அம்புக்குறியாற் காட்டப்பட்ட இடத்திலிருந்து வீடு செல்லத் தொடங்கி அவ்வவ் விடங்களைச் சேரும்போது குறிக்கப்பட்ட கணிதங்களுக்குரிய விடைகளை உரத்துக் கூறுதல்வேண்டும். எல்லாவிடைகளுஞ் சரியாக இருந்தால் அப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டைச்சேரும். தவறிய பிள்ளை திரும்பவும் தொடங்கி விளையாடவேண்டும். பிள்ளைகளின் தொகை அதிகமாயின் சோடி சோடியாக வீடுசெல்ல விடப்படலாம்.

## 6. மணிக்கூட்டுத் தம்பம்

இவ்விளையாட்டிற் பங்குபெறவேண்டிய மாணவர் தொகை 25 ஆகும். வேண்டிய எண்மட்டைகளின் தொகை 24. அம்மட்டைகளில் ஒன்று தொடக்கம் 12 ஈறாகவுள்ள இலக்கங்களைக்கொண்ட இனத்திற் கிருமட்டைகள் தேவையாகும். மத்தியில் நிற்கும் 2-ம் பிள்ளை தவிர்ந்த ஏனையோர் இலக்கமட்டைகள் தொங்கவிடப்படுவர்.




விளையாட்டிற்கு நேரமாயதும், ஆசிரியர் மணிச் சத்தங்காட்ட மாணவர் அம்மணி அடிக்கின்ற அடிகளின் தொகையை மௌனமாக எண்ணிக்கையிடுதல் வேண்டும். உதாரணமாக 4 அடிகள் மாத்திரம் அடிக்கப்பட்டிருப்பின் 4-ம் இலக்கமுள்ள இருவரும் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களை மாற்றிக்கொள்ளவேண்டியது. வட்ட மத்தியில் நிற்பவர் அவ்விடங்களிலொன்றைத் தாம் பெற முயற்சித்தலும் வேண்டும். இடம்பெறாது காலியாய் நிற்பவர் தோற்றவராவார்.

## 7. பெருக்கல் விளையாட்டு

ஒன்று தொடக்கம் 12 ஈறாகவுள்ள எண்மட்டைகள் தயாரிக்கப்பட்டிருத்தல்வேண்டும். கீழ்வரும் படத்திற் காட்டப்பட்டுள்ளபடி ஓர் வெளி வட்டமும், ஓர் சிறிய உள்வட்டமும் வரையப்படவேண்டும்.




12 பிள்ளைகள் முறையே 12 இலக்க மட்டைகளையும் தங்கள் கழுத்திலே தொங்கவிட்டுக்கொண்டு, மணிச்சத்தங் கேட்டவுடன் வட்டத்தைச் சுற்றி ஓட வேண்டும். மணிச்சத்தம் நின்றவுடன் வெளிவட்டத்திலுள்ள ஒவ்வோர் அறையிலும் நின்று மையத்திலுள்ளவரை நோக்கவேண்டும். எந்த வாய்பாடு கற்கப்பட வேண்டியதோ அவ்வாய்பாட்டின் பெயரைக் குறிக்கும் இலக்க மட்டை, மத்தியிலிருப்பவர் கழுத்தில் தொங்க விடப்படும். உதாரணமாக, 2-ம் வாய்பாடு மட்டை தொங்கவிடப்பட்டவர் 8-ம் இலக்கப் பிள்ளையை நோக்கினால், $2 \times 8 = 16$ எனக் கூறவேண்டும். இவ்வாறே எந்த இலக்கத்தை நோக்கினாலும் அவ்விலக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தையுடையவர் பெருக்கிச் சரியான விடையைக் கூற வேண்டும். பிழைவிடுவோர் நீக்கப்பட, புதிய பிள்ளைகள் விளையாட்டிற் பங்குபற்றுவர்.

## 8. சங்கீத வட்டம்

ஒன்று தொடக்கம் 9 வரைகளுள்ள இலக்கங்களைக் கொண்ட எண் மட்டைகள் தயாரிக்கப்படவேண்டும். ஒவ்வோரினத்திலும் பலமட்டைகள் இருத்தல் நல்லது. கீழ்க்காணும் படத்திற் காட்டப்பட்டுள்ளபடி இரு வட்டங்கள் தளத்தில் வரையப்படவேண்டும். குறித்த இலக்க மட்டைகள் தொங்கவிடப்பட்ட சமகொகைப் பிள்ளைகள் பாடிப்பாடி இரு வட்டங்களையுஞ் சுற்றி ஓடவேண்டும்.




மணிச்சத்தங் கேட்டவுடன் ஒருவட்டத்தி லுள்ளோர் மறு வட்டத்திலுள்ளவரை நோக்கினபடி சோடு சோடாக நிற்றல்வேண்டும். ஒரே இலக்கங்கொண்ட ஒவ்வொரு கூட்டத்தினருந் தத்தம் எண்களைக் கூட்டித் தொகை கூறல்வேண்டும். உதாரணமாக, 4 + 4 = 8, 5 + 5 = 10, 6 + 6 = 12 என்று இவ்வாறு சரியான விடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கூறவேண்டும். தவறுவோர் விளையாட்டில் நின்று நீக்கப்படுவர்.

## 9. பழம் பொறுக்குதல்

காகித அட்டைகளில் மாம்பழம், அப்பிள்பழம் முதலிய விரும்பிய பழங்களின் படங்கள் தயாரிக்கப் படல்வேண்டும். அப்பழங்களின் மத்தியிற் கீழ்க் காணும் படங்களிற் காட்டப்பட்டுள்ளபடி, பலவித கணி தங்கள் எழுதப்படவேண்டும். ஆசிரியர் இரு மரங்க ளின் புறவடிவத்தைக் கரும்பலகையில் வரைதலும் அவற்றின் கொப்புகளிற் செய்யப்பட்ட பழ அட்டை களைத் தொங்கவிடுதலும் வேண்டும்.




மாணவர் இரு பிரிவாக வகுக்கப்படுதலும் ஒன்றை விட் டொருமுறையாக முறைப்படி பழம் பொறுக்க விடப்படுதலும் வேண்டும். பொறுக்கும் படத்திலுள்ள கணிதத்தைக் கூட்டலாயின் கூட்டியும், பெருக்கலாயின் பெருக்கியும் சரியான விடைகளைக் கூறவேண்டும். சரியான விடை கூறப்படின் அப்பழம் அப்பிள்ளைக்கே உரியதாகும். குறித்த நேரத்திற் கூடிய தொகைப் பழத்தைப் பறிக்குங் கட்சியினர் வெற்றியாளராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. கைவேலைப் பாடம்

இப்பாடத்தின்கண் பலவகைப்பட்ட சிறு பாடங்கள் அமைந்துள்ளன. இவ்வித பாடங்களை வெற்று விளையாட்டு வேலைகளென எண்ணுதல் இழுக்கு. ஒவ்வோர் வேலையும் பாலரது மனோதத்துவங்களை விருத்தி செய்தலோடு நில்லாது எண், எழுத்து, வாசிப்பு, பேச்சு முதலிய பாடங்களையும் சமவாயக் கல்விமுறையாகப் பாலர் பயின்றுகொள்வதற்கு மிகவும் உதவியாக உள்ளது என்பதை மறத்தல்வேண்டா. தொழில் சம்பந்தமான சில பாடங்கள் பின்வருவன. அவை :—

i. காகிதம் மடித்தலுங் கத்தரித்தலும்.

ii. களிமண்ணினால் உருவம் அமைத்தலும் நிற மூட்டலும்.

iii. குச்சுகள் ஆக்கலும் அடுக்கலும்.

iv. விதைகள் சேகரித்தலும் வைத்தலும்.

v. பலவகைப்பட்ட பன்னவேலைகள்.

## 1. காகிதம் மடித்தலுங் கத்தரித்தலும்.

கத்தரிக்கோலை எடுத்தலும் பிடித்தலும் ஆரம்பத்திற் பயிற்றப்படவேண்டியன. பின்னர் கிடைக்கும் எந்தக் காகிதத்திலிருந்தும் உருவங்களை அல்லது பொருட்களைக் கத்தரித்தெடுப்பதும் பாலரின் இன்ப விளையாட்டுகளாகும். இவ்வாறு செய்தல் அவர்களின் கண்களையும், கரங்களையும் ஒருங்கு வேலைகொள்ளச் செய்வதுமன்றி அவர்களது சிறு விரல்களுக்கேற்ற அப்பியாசங்களைக் கொடுப்பதுமாகும். பிரோபல் என்னும் பேராசிரியர் கத்தரிக்கோலை உபயோகிக்கும்படியாகச் சிறுவர்களை வேலைகொண்டபோதெல்லாம், குழந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையின் சுபாவங்களை உண்மையாகவே கண்டுகொண்டார் எனச் சொல்லப்படுகின்றது.

i. கத்தரிக்கோலைச் சரியாகப் பிடித்தல்.

ii. காகிதங்களை உருவமமையக் கத்தரித்தல்.

iii. சரித்திரங்களாக அவற்றை நிரல்படக் கட்டியமைத்தல்.

ஆகிய இவைகளிலிருந்து தங்கள் மனத்துள்ள உறுதியான அபிலாஷையை அவர்கள் காண்பிக்கின்றார்கள். இவ்வித அபிலாஷையைத் தகுந்தமுறையில் விருத்திசெய்தால், சாஸ்திரீகமான மனோபாவனைக்கு வழி நடத்துவதாகும். அதே தருணத்தில் அநேக பாலரிடம் மிகக் குறைவாகக் காணப்படுங் கர சாமர்த்தியத்தையும் அதிகரிக்கச் செய்தல்கூடும்.

காகிதங் கத்தரித்தலைச் சித்திரந் தீட்டல், களிமண்ணினால் உருவமமைத்தல் ஆதியவற்றோடு சம்பந்தப்படுத்திக் கற்பித்தல் நன்று. ஏனெனிற் குழந்தைகள் உருவங்களைக் கத்தரித்த பின்னர் அவற்றினை உற்றுநோக்கி ஒவ்வொரு பாகங்களினதும் பிரமாண விகிதத்தை அவதானித்துச் சித்திரமோ உருவமமைத்தலோ இவற்றினைச் சிறிது நுட்பமாகச் செய்தற்கு உதவியாகின்றது. மேலும் மனத்தின்கண் தெளிவான மனோபாவனையை உண்டுபண்ணவும், தசைநார்கள் சுயாதீனமடையவும், சுயேச்சையாக இயங்கவும் பிரயோசனமான வகையில் வேண்டிய பயிற்சியைக் கொடுக்கின்றது. அன்றியும் இஃது குழந்தையானது தானாகவே மனோபாவனைப் பிரகாரஞ் செய்தற்கு மேலான வழிவகையாகக் கொள்ளக்கூடியதுமாகும். காகிதம் வெட்டுதல் பின்வரும் மூன்றுவகைகளிற் செய்யப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகள் பின்வருவன :—

i. ஒரு பொருளைக் குறித்த காகிதத்தின் மேல் வைத்து வெட்டச் செய்தல்.

ii. தனிக் காகிதத்தைக் கொடுத்துச் சுயேச்சையாக வெட்டச்செய்தல்.

iii. குறித்த காகிதங்களில் அமைந்துள்ள சித்திரங்களை வெட்டியெடுக்கச்செய்தல்.

இது விஷயமாக, "பிரோபல்" என்பவர் கூறுவது யாதெனில், "குறித்த மூவித வேலைப்பாடுகளினும் அதி சிறந்தது, குழந்தையானது தானாகவே மனோபாவனைப்பிரகாரஞ் செய்வதற்கு மேலான வழிவகையாகக் கொள்ளக்கூடியதாகிய, தனிக் காகிதத்தைக் கொடுத்துச் சுயேச்சையாக வெட்டச்செய்தல்" என்பது. ஏனெனில், மடித்த காகிதங்களில் வெட்டுவதிலும் பார்க்கத் தனிக் காகிதங்களில் உருவங்களைக் கத்தரிப்பதிற் பாலர் ஆசிரியரது உதவியின்றித் தாமாகவே தொழில்புரியும் ஆற்றலை அடைகின்றனர்.

மனக்கருத்தை வெளியாகக் காட்டுதற்குரிய தொழில் காகிதம் வெட்டலாகும். பாலர் தம் தசைநார்களை வேண்டியவிதம் உபயோகித்தற்கு மாத்திரமன்றி இயற்ற விரும்பும் எதனையும் திட்டமாகச் செய்தற்கும் உதவுகின்றது. கீழ்ப்பிரிவுப்பாலர் பல பிராணிகளின் வெற்றுருவங்களை மாத்திரம் வெட்டப்பயின்றுகொள்ளலாம். ஆரம்பத்தில் நேர் வரையுள்ள காகிதங்களைக் கொடுத்து நெறிதவறாது அவைகளை வெட்டச்செய்தல் வேண்டும். கத்தரிக்கோலைத் தக்கவாறு உபயோகித்தலினும், உருவங்களை வெட்டுதலினும் போதிய திறமை ஏற்பட்ட பின்னர் மேற்பிரிவிலே சம்பாஷணைப் பாடத்திற்கு உதவியாகவுள்ள "நரியுந் திராட்சக்கொடியும்" "ஆமையும் முயலும்" என்பனபோன்ற கற்பனை கதைகளின் சாராம்சத்தோடு சம்பந்தப்பட்ட வடிவங்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகிதங்களில் வெட்டப்பழக்கலாம். வெட்டிய கதா வடிவங்களைத் தடித்த அட்டையில், முன்னர் கூறியுள்ளவாறு ஒட்டிக்கொள்ளச் செய்யலாம். தனி உருவங்களை மணல்மீது நிறுத்தியுங் கதையின் கருத்தை வெளிவிடச் செய்யலாம்.

## 2. களிமண்ணினால் உருவமமைத்தலும் நிறமூட்டலும்.

தொழில்புரிவதற்காக எடுத்துக்கொள்ளப்படுங் களிமண்ணனைது ஒன்றுசேர்த்துப் பிசையப்பட்டுப் பின்னர் நீர் தெளிக்கப்பட்டு ஈரத்துணியால் மூடிவைக்கப்படல்வேண்டும். களிமண் ஒருபோதும் அதிக ஈரலிப்பாக இருக்கக்கூடாது. உலர்ந்த களிமண், உபயோகித்தற்குப் பக்குவமாயுள்ள மண்ணுடன் கலக்கப்படல் நல்லதல்ல. ஏனெனில், பக்குவமற்ற மண்ணில் வேலை செய்வதால் செய்யப்படும் உருவங்கள் நன்கு அமைதலும், நிலைத்தலும் இல்லையாகும். இதனாலே பாலர் ஆரம்பத்திலேதானே மனமுடைந்துபோக நேரிடும். இதுவிஷயத்திற் பாலரின் சுத்தம் மிகவும் முக்கியம் என்பதை ஆசிரியர் கவனித்தல் வேண்டும். உபயோகிக்கப்படுங் களிமண்ணுங் கூடியளவு சுத்தமாக இருக்கச்செய்தலும் வேண்டும்.

களிமண்ணினால் உருவமமைக்கப்படும் ஒவ்வொரு பாடத்திலும், குழந்தைகள் தமக்கு இஷ்டமானவற்றையே இயற்றுதற்கு விடப்படுதல்வேண்டும். ஏனெனில் இஷ்ட விருப்பு அவர்களுக்கு இயற்கையாக உள்ளது. இதற்கேற்ற தருணங்களை அவர்கள் எப்போதுங் காத்திருக்கின்றார்கள். இஷ்டப்படி செய்வதால் எதனை எவ்வாறுசெய்தல் என்பதைத் தாமாகவே கற்றுக்கொள்ளுகின்றனர். ஆரம்ப பாடங்கள் பெரும்பாலும் இலகுவானவையும் பிள்ளையின் முன்னறிவோடு நெருங்கிய சம்பந்தப்பட்டவைகளாகவும் இருத்தல் வேண்டும். மேலும் இவைகள் எப்பொழுதும் பாஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்களுடன் ஒற்றுமைப்பட்டு இருக்கவேண்டும் என்பதே வித்தியாபகுதியாரின் உளக்கிடக்கையாகும் என்பதையும் ஆசிரியர் மறந்துபோகக்கூடாது. இப்பாடத்தாற் பாலர் அடைந்துகொள்ளக்கூடிய நலன்கள் பல. அவற்றுட் சில பின்வருவன :—

i. ஒரே தருணத்திற் கைகளையுங் கண்களையும் வேலைகொள்ளப் பயிலல்.

ii. உருவங்களைப் பார்த்தறிவதால் ஆழ்ந்த உணர்வினையும் ஆனந்தத்தையும் பெறுதல்.

iii. வேலையின் பிரீதியால் வேலைசெய்யுஞ் சக்தி நாளுக்கு நாள் ஏற்றமுறுதல்.

iv. கற்பனாசக்தி அதிகரிக்கத் தங்கள் பிற்காலத்தில் நாட்டின் நயன் கருதிய பல தொழில்களில் ஈடுபடுதல்.

மேலும் இப்பாடத்திற் சிறப்பாகப் பாலரடையும் வேறு படிப்புமுறையான பயன்களுமுள்ளன. எண் பாடசம்பந்தமாகப் பொருட்களின்தொகையை மொத்தமாகக் கவனித்து அறியவும், அதாவது எண்களைப் பற்றிய குலக்கான எண்ணத்தை அடையவும், பேச்சுப்பாடசம்பந்தமாக முக்கியமான சில அம்சங்களை நாவிட்டுக்கூறவும் பாலர் தூண்டப்படுவர். குழந்தைகள் தங்கள் விரல் நுனிகளை உபயோகித்துக் களிமண்ணைக்கொண்டு உருவம் அமைக்கப் பயிற்றப்படின் காலாந்தரத்தில் உயரிய கருத்துக்களை வெளியிடும் ஞாபகச்சிலைபோன்ற உருவங்களை அமைத்தலுக்கு வழி நடத்தப்படுவர். உருவம் ஆக்கும்போது மெய்யான பிராணி அல்லது இயற்கைப்பொருட்கள் அவர்களது கண் முன் வைக்கப்படவேண்டும். ஆசிரியர்தாமும் இவ்வித தொழில்களில் ஈடுபட்டு உருவமமைத்தலில் ஒத்துழைத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. வரைதற் பாடம்

வரைதற் பாடமெனப்படும் சித்திரபாடம், பாலர் கீழ்ப்பிரிவிற் படிப்பிக்கப்பட வேண்டியதோர் பிரத்தியேகபாடமாகப் பாடத்திட்டத்திற் கூறப்பட்டில்லை. இப்பாடம் பாலர் மேற்பிரிவிற்கே உரியதாகக் காட்டப்பட்டுள்ளது. எனினும் இப்பாடத்தில் மூலாதாரமான அறிவு பாலர் கீழ்ப்பிரிவிலேயே ஆரம்பிக்கப்படுகிறது. கைவேலைப் பாடத்தோடும், எழுத்துப் பாடத்தோடும் தொடர்புறுபாட முறையில் வரைதற் பாடங் கற்பிக்கப்பட்டு வருகிறது. இப்பாடத்தின் பயனை நன்குணர்வார் குறித்த பயனைப் பாலருக்கு எப்பாடத்தோடுஞ் சம்பந்தப்படுத்திப் படிப்பிக்க முன்வருவர் என்பது திண்ணம். வரைதற் பாடப் பயனாக மாணவர் அடையும் நலன்கள் பின்வருவன.

i. பிள்ளையின் தினசரி வாழ்க்கைக்கு அதிக பயனைக் கொடுக்கின்றது.

ii. புத்தி விருத்தி அதிவிரைவாக ஏற்படுகின்றது.

iii. பலவகைத்தான உருவங்களையும் அவதானிப்பதாற் கண்கள் அதிக பயிற்சியைப் பெறுகின்றன.

iv. அவதானித்த உருவங்களை வரைதல் செய்யும்போது பிள்ளையின் கரங்கள் மிக்க திறனைப் பெறுகின்றன.

v. பிள்ளையின் கற்பனைவன்மையும், ஆக்குஞ் சக்தியும் வலிமையுறுகின்றன.

vi. மனக்கருத்துக்களையுந் தோற்றங்களையுந் தக்கவாறு வெளிவிடுதற்கு ஏற்ற சாதனமாகின்றது.


இவற்றைவிட மேலும், இயற்கையையும், உருவங்களையும், நிறபேதங்களையும் ஆராய்ந்தறியுஞ் சக்தியைப் பாலர் பெற்றுக்கொள்ளுகின்றனர். தமது சுற்றாடலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


லுள்ள பொருட்களில் ஒருவித பிரீதியைப் பெற்றுக் கொள்வதோடு வாழ்க்கையின்கண் சன்மார்க்க வளர்ச்சியையும் அடைதற் கிடமாகின்றது.

ஆரம்பத்தில், குச்சுகள் அடுக்குதல்மூலமும், பின் படிப்படியாக நேர்ரேகைகள் சம்பந்தமானவையும் இதனைத் தொடர்ந்து வளைவுரேகை சம்பந்தமானவையுமான விசிறி, சீப்பு, மேசை, கத்தி, துடைப்பம் முதலியனவற்றை வரையப்பழகிக்கொள்ளுதல் நல்லது. பின்வரும் நான்கு படங்களும், வரையப்படவேண்டிய படங்களின் படிமுறையை விளக்குவனவாக அமைக்கப்பட்டுள்ளன.

1




2




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3



4



திரட்சியான உருவம் வரைதல் நிறச்சுண்ணக் கட்டிகள்கொண்டு செய்யப்பட வேண்டியது. இத்தகைய பட்டை உருவம் வரைதல் செய்யப்படும்போது ஏதாவதோர் புள்ளியிலிருந்து ஆரம்பிக்கப்படுவதே முறையாகும். இதனைச் சற்றே பெரிதாக்கப் பந்து, பழம், நாணயம், மணி முதலிய உருவங்கள் தோன்றும். பின்னர் இவற்றினைத் தொடர்ந்து இலைகள், பாத்திரங்கள், பழங்கள், பம்பரங்கள் முதலிய உருவங்களை வரைதல் பிள்ளைகட்கு இலகுவாகும். பட்டையாக வரையப்பட்ட இவ்வித சித்திரங்கள் தக்க உருவங்களாகத் தோன்றும்படி சற்றே நிழலிடப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. தேகாப்பியாச விளையாட்டுகள்

## 1. பந்தெறிந்தாடல்.

பந்து விளையாட்டிற் பெரும்பாலும் பாலர் மனஞ் செலுத்துவர். சாதாரண பந்துப்போட்டி விளையாட்டாயின் நிரம்பிய ஆர்வங்கொள்வர். ஆரம்பத்தில் இப்பந்தைத் தக்கவாறு பிடிக்கவும், நிதானமாக எறியவும், தப்பாது ஏந்தவும் மாணவர் பழகிக்கொள்ள வேண்டியது.

1. பிள்ளைகள் இருவகுப்பாகப் பிரிக்கப்படுகின்ருர்கள். ஏலவே தயாரிக்கப்பட்ட வட்டங்களில் ஒவ்வோர் வகுப்பினரும் சுற்றிவர நிற்கின்ருர்கள். வட்டத்தின் மத்தியில் ஓர் பையன் நிற்கின்ருன். ஆசிரியர் மணிச்சத்தமோ அன்றேல் ஊது குழற்சத்தமோ செய்து குறிப்புக் காட்டியவுடனே பந்தைத் தனது கட்சியைச் சேர்ந்த ஒருவரிடம் எறிகின்ருன். அவன் திரும்பவும் மத்தியில் நிற்பவனுக்குப் பந்தை எறிகின்ருன். மத்தியில் நிற்பவனுவது அல்லது வட்டத்தில் நிற்பவனுவது பந்தை ஏந்தத் தவறிவிட்டால், தவறியவன் பந்தை எடுத்து யார் எறிந்தானே அவன் கையிற் கொடுக்கவேண்டும். இவ்வாறே தொடர்ந்து விளையாடப்படும். இரு வட்டங்களில் எந்த வட்டத்தில் நிற்பவர்கள் முதலில் ஆட்டத்தை முடிவுசெய்கின்ருர்களோ அவர்களே ஜெயம்பெற்றவர்களாவர்.

2. ஏலவே பெருவட்டமாக வரையப்பட்ட ஒரு வட்டக்கோட்டில் ஆட்டக்காரர் நிற்கின்ருர்கள். ஒருவன் முன்போல மத்தியில் நிற்கின்ருன். அங்கிருந்து ஆட்டக்காரர் ஒவ்வொருவருக்கும் பந்தை எறிகின்ருன். தவருது பிடித்தவன் பந்தைத் திரும்பவும் எறிந்தவனிடம் எறிகின்ருன். எவனொருவன் பந்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கத் தவறுகின்றனோ அவன் ஆட்ட நிறுத்தஞ் செய்யப்படவேண்டும். இவ்வாறே ஓர் குறித்த நேரத்துள் கடைசிவரை நின்றுபிடிக்கின்றவர்கள் எவர்களோ அவர்களுக்கே வெற்றி உரியது.

## 2. காணுதவனைக் கண்டுபிடித்தல்.

இவ்வித ஆட்டம் வகுப்பறையிலேயே நடத்தப் படத்தக்கது. இது குழந்தையின் உற்றுநோக்குஞ் சக்தியை விருத்திசெய்வதாகும். ஓர் பிள்ளையை வகுப்பிற்கு வெளியே போகச்செய்து வகுப்பிலுள்ள மற்றோர் பிள்ளையைச் சௌகரியமானதோர் இடத்தில் மறைந்து நிற்கச்செய்தல். கரும்பலகைக்குப் பின்னாவது ஆசிரியரது மேசைக்குக் கீழாவது மறைந்துகொள்ளச்செய்வது பாலருக்கு ஆர்வத்தைக் கொடுப்பதாகும். இதன்பின் வெளியே அனுப்பப்பட்ட பையனை அழைத்து வகுப்பிலுள்ள எந்தப் பையனைக் காணவில்லையென்று வினவவேண்டும். இதற்கிடையில் மற்றொரு பையன் ஒன்று, இரண்டு, மூன்று என்று பத்துவரையும் உரத்து எண்ணுதல் வேண்டும். எண்ணி முடியமுன் காணுதபிள்ளையின் பெயரைக் குறிப்பிட்டால் வெற்றி ஆகும்.

## 3. காணுத பொருளைக் கூறுதல்

இந்த ஆட்டமும் முந்திய ஆட்டத்தைப்போன்றது. பாலரின் அவதான சக்தியை விருத்திசெய்வதாகும். கூடிய விரைவிலே காணுத பொருளை நிச்சயித்துக்கூறுந் திறனை உண்டுபண்ணல் வேண்டும். ஓர் கட்டில் அல்லது வகுப்பு மேசையிற் சில குறித்த தொகையான பொருட்களை வைக்கவேண்டும். வைக்கப்பட்ட எல்லாப் பொருட்களையும் பிள்ளைகள் யாவரும் அவதானிக்கும்படி செய்யவேண்டும். பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் பிள்ளையை வகுப்புக்கு வெளியே போகச்செய்து யாதாமொரு பொருளை எடுத்து மறைத்துவிடல்வேண்டும். வெளியே நிற்கும் பையன் அழைக்கப்படுகின்ருன். அவன் வந்து வைக்கப்பட்ட பொருட்கள் எல்லாவற்றையும் அவதானித்துவிட்டுக் காணுத பொருள் யாதெனக் கூறவேண்டும். முந்திய விளையாட்டிற் செய்ததுபோலவே ஒன்று, இரண்டு, மூன்றெனமுறையே பத்துவரை உரத்து எண்ணுதல்வேண்டும்.

## 4. கந்த நுகர்ச்சி ஆட்டம்

இவ்வித ஆட்டம் கந்த நுகர்ச்சிப் பழக்கத்தையும் அத்துடன் வெவ்வேறு பொருட்களுக்குரிய வாசனைத் தன்மைகளையும் மாணவர் பயின்றுகொள்ளச் செய்வதாகும். சிறந்த வாசனையுள்ள பலவித பொருட்களை அதாவது கர்ப்பூரம், சவர்க்காரம், கொய்யாப் பழம், மாம்பழம், மலரினம் முதலியவற்றைத் தனித் தனி பெட்டிகளில் அல்லது பைகளிற் பொதிந்து வகுப்பு மேசையில் நிரைத்துப் பரப்பிச் சுத்தமான துணிகளால் மறைத்துவிடுதல் வேண்டும். பின்னர், ஒருவர்பின் ஒருவராய் நுகர்ந்து பார்த்துப் பொருட்களின் பெயரைக் கூறச்செய்யலாம். யார் யார் அதி கூடிய பொருட்களின் பெயர்களைச் சரிவரக் கூறுகின்ருர்களோ அவர்களுக்கே வெற்றியுரியதாகும்.

## 5. பரிசித்துப் பொருள்கூறுதல்

வகுப்பிலுள்ள பாலர்களை இரண்டு அல்லது மூன்று கூட்டங்களாக வகுத்துக் குறித்த ஓர் கூட்டத்தினரது கண்களை மறைத்துக் கட்டிவிடவேண்டும். பின்னர் சில பொருட்களை ஒன்றன்பின் ஒன்ருகக் கொடுத்துத் தடவிப்பார்க்கச் செய்யவேண்டும். தடவிப்பார்த்தபின் பொருளின் பெயரைக் கூறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் கூருதவிடத்து மற்ெருருவரிடங் கொடுத்துக் கேட்கலாம். இவ்விதமே சரியான விடை கூறும்வரை யிற் கண்கள் கட்டப்பட்ட யாவரிடமுங் கொடுக்கவேண் டும். குறித்த பொருட்களிற் கூடின பொருட்களின் தொகை எக்கூட்டத்தினராற் கூறப்பட்டதோ அக் கூட்டத்தினரே வெற்றியாளராவர்.

## 6. ஒலிக்குறிப்பாட்டம்

இதற்கு முந்திய ஆட்டத்திற் செய்ததுபோலவே வகுப்பை இரு பிரிவுகளாகப் பிரித்து ஒரு பிரிவினரை ஓர் நேர் ரேகையில் நிற்கச்செய்து பின்திரும்பும்படி செய்யவேண்டும். மறு பிரிவினரால் ஐந்து அல்லது ஆறு குறித்த தொகையான பொருட்கள் ஒன்றன் பின் ஒன்ருகத் தளத்திற் போடப்படும். அவற்றின் பலவித ஒலி விகற்பங்களைக் கவனித்துப் பொருட்களின் பெயரைக் கூறச்செய்தல்வேண்டும். ஒரு பிரிவினரது முறை முடிந்தபின் மறு பிரிவினர் கூற இடங்கொடு படல்வேண்டும். எப்பிரிவினர் கூடியதொகைப் பொரு ளின் பெயரைக் குறிப்பிடுகின்றனரோ அப்பிரிவி னரே வெற்றியாளராவர்.

## 7. நாற்காலியாட்டம்


பாலரது வகுப்பிலுள்ள நாற்காலிகளை ஓர் வரிசை யில் ஒன்றைவிட்டொன்று வலப்புறமாகவும் இடப்புற மாகவும் திரும்பியிருக்க ஒழுங்கு செய்துகொள்ளவும். நாற்காலிகளின் தொகை எத்தனையோ, ஆட்டம் ஆடும் பிள்ளைகளின் தொகை அதனிலும் ஒன்று கூடுதலாக இருக்கவேண்டும். குறித்ததோர் பாட்டைப்பாட ஆரம் பித்தவுடன் பிள்ளைகள் யாவரும் ஒரே திசை யாக நாற்காலிகளைச் சுற்றி ஓடவேண்டும். பாட்டு முடிந்தவுடன் அல்லது மணி ஓசை நின்றவுடன் நாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலியில் உட்காரவேண்டும். நாற்காலி கிடையாதவர் ஆட்ட நிறுத்தஞ்செய்து நாற்காலி ஒன்றை எடுத்துக் கொண்டு அப்புறப்படவேண்டும். பின்னர் மறுபடியும் விளையாட்டுத் தொடங்கப்படும். இவ்வாறே தொடர்ந்து ஆடியபின்னர் ஈற்றில் எப்பிள்ளை நாற்காலியில் உட்கார்ந்து இருக்கின்றதோ அதற்கே வெற்றியாகும்.

## 8. அணில் விளையாட்டு

பிள்ளைகள் ஒரு பகுதியின் ஓர் பெரிய வட்டத்திற் சமதூரத்திலும், சோடு சோடாகவும், எதிர்முகமாகவும் கைகோத்து நிற்கவேண்டும். (ஆரம்பத்தில் வட்ட மையத்தை நோக்கியவண்ணம் நிற்கலாம்.) இருவர் இருவராகக் கைகோத்து நிற்றல் அணிலின் கூடுகளைக் குறிப்பதாகும். எத்தனை கூடுகளுண்டோ அதனினும் ஒன்று கூடின தொகையினர் அணில்களாக நடித்தல்வேண்டும். வட்ட மையத்தில் ஓர் மரமாகக் குழைக் கொம்புடன் ஒருவர் நிற்பர். மற்றொருவர் பூனையாக நடிப்பர். மணிச்சத்தங் கேட்டவுடன் அணில்கள் யாவும் மரத்தைச் சுற்றி வட்டமாகப் பாடிப்பாடி ஓடவேண்டும். பாட்டும் முடிய "மாயோ மாயோ" என்று பூனை சத்தமிடும். உடனே அணில்கள் யாவும் கூட்டைத் தேடி ஓடவேண்டும். ஓர் கூட்டினுள் ஒரு அணில் மாத்திரம் நிற்கலாம். எஞ்சிய அணில் பூனையாற் பிடிக்கப்படும். பிடிக்கப்பட்ட அணில் வெட்கி மத்தியில் மரமாக நிற்கும். மரமாக நின்றவர் அணிலாக ஆட்டத்திற் சேர்ந்துகொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. சங்கீத பாடம்

## அபிநயப்பாக்கள்

பாலருக்கு ஆதி முதற் பரம ஆனந்தத்தைக் கொடுப்பது சங்கீதமே. அவர்களது சிசுப்பருவத்தில் அவர்களைச் சிரிக்கச் செய்தனவும், தூங்கச்செய்தனவும், தாலாட்டு, ஓராட்டுப் பாக்களே. நோயால் வருந்துங் குழந்தையும் சற்றே சங்கீத இசை செவிப்படத் தன் நோயை மறந்து மகிழுமன்றோ? பிடிவாதமாக அழுதுகொண்டிருக்குங் குழந்தை இனிய பாடலைக் கேட்கும்போது, அதன் கவனம் முழுவதும் பாடலிற் சென்று, பிடிவாத குணத்தை மறந்து இன்முகங்காட்டுகின்றதன்றோ?

பாலப் பருவத்தும், வாலப் பருவத்தும், வயோதிப காலத்தும், எவர்க்கும் இசைகளில் இயற்கையாகவே இச்சைதோன்றி இன்பம் உண்டாகின்றது. வயது முதிர்ந்த காலத்தில் ஆன்ம விசாரந் தோன்ற, வீட்டுப் பேற்றைவேண்டிக் கடவுளைத் தியானஞ்செய்யச் சங்கீதம் பெரிதும் உதவுகின்றது. நமது உளத்திடை தோன்றும் அன்பு, அருள், பக்தி முதலிய சிறந்த குணவிசேடங்கட்கும் சங்கீதத்திற்கும் நெருக்கிய சம்பந்தம் உண்டென்பது அநுபவச் சான்றாகுமன்றோ? பண் கலந்த பக்திரசம் பொருந்திய தேவாரம், திருவாசகம் முதலியவற்றைக் கேட்டும் மனமுருகாதார் யார்தாமுளர்? இப்படிப்பட்ட சங்கீத ரசத்திற் பற்றுள்ளவர்களது ஒழுக்கமும் விழுப்பமுடையதே. எனவே இச்சிறந்த இரசஞான உணர்ச்சியைப் பாலரிடையே கொண்டுவருதல் கற்பித்தற்கேற்ற சிறந்த சாதனமேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்குக் கற்பிக்கப்படும் பாடல்கள், பெரும்பாலும் அதிக சிரமமின்றிப் பாடத்தகுந்த பிள்ளைத் தமிழ்ப் பாடல்களாகவே இருத்தல் நன்றாகும். சிறாரின் சக்திக்கு அடங்காது, சுவாசத்தை நெடுநேரம் அடக்கிப் பாடவேண்டிய பாடல்களைப் பாடும்படி அவர்களை நிர்ப்பந்தித்தல் நல்லதல்ல. இவ்வாறு செய்விப்பதால் அவர்களது குரல் இயற்கையின்பங் கெட்டுப்போக நேரிடும். பாடக்கூடிய ஆற்றலையுடைய பல பாலர் மனமடிவுகொண்டு சிறுபராயத்திற்றனே சங்கீதத்தில் ஈடுபடாது போகவும் நேரும்.

பாடும்போது பாக்களின் அரிய கருத்துக்களை மனதின்கண் இருத்தியே பாடுகின்றார்களோவெனக் கவனித்தலும் வேண்டும். வீரம், கருணை, சோகம், ஆனந்தம், பக்தி முதலிய இரசங்கள் அமைந்த செய்யுட்களையே பாடச் செய்தலால் அவர்களது ஒழுக்கமுஞ் சீர்ப்படுவதாகும். பதங்களைச் செம்மையாக உச்சாரணஞ்செய்யாதும், சொற்களின் பொருளையும் பாடல்களின் இசையையும் உணராதும் பாடும் பாடல்களால் எவ்வித நன்மையும் உண்டாகவே மாட்டாது. ஏனெனில் உள்ளங்கனியாது பாடும் பாட்டு மனதைத் திருத்தி அதனை நல்வழிப்படுத்தச் சிறிதும் வன்மையற்றதேயாகும்.

பாடல்களால் உருகாத மனமுடையவர் இவ்வுலகில் எவரும் இலர் என்பது பெருங் கீர்த்திபடைத்த சங்கீத வித்வான்னர்களின் அபிப்பிராயமாகும். மன மகிழ்ச்சியையும் அறிவு வளர்ச்சியையும் எவை எளிதில் ஒருங்குதரற்பாலனவையோ அவையே இளைஞர்களுக்குக் கற்பித்தற்கேற்ற பாக்களாகும் எனக் கொள்ளுதல் வேண்டும். குறித்த பாக்கள் யாவும் பாலருக்குப் பயிற்றப்படுங்கால் அபிநய முறையாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்றப்படுதல் அதிக பயன் தரு முறையாகும். ஏனெனில் இவ்வித முறைகொண்டு பயிற்றப்படும் பாலர் அநேக நன்மைகளை அடைகின்றனர். அவை எவையெனில் :—

i. இராக தாளங்களோடு கற்பிக்கப்படுவதாற் சிறுவர் மிகுதியும் மனமகிழ்வுடன் கற்றுக் கொள்ளுகின்றனர்.

ii. பாக்களின் பொருளையும், சொற்களின் அர்த்தத்தையும் செய்யும் அபிநயங்கள் மூலம் இலகுவில் அறிந்துகொள்ளுகின்றனர்.

iii. மிகவுஞ் சுருங்கிய காலத்திலும், வெகு சுலபமாகவும் பெருந்தொகைச் செய்யுட்களை மனனம்பண்ணிக்கொள்ளுகின்றனர்.

இசை, அபிநயமென்னும் இரண்டும் ஒன்றுசேருதலாலேயே முற்குறிப்பிடப்பட்ட பயன்கள் யாவும் ஏற்படுகின்றன. இவற்றில் ஒன்றிருந்தும் மற்றையது இல்லாவிடின் பயன் பெறுதலும் இல்லாதொழியும். (1) இசையும் இன்பமும் (2) அபிநய ஆசையும் சிறார் மனதை இயல்பாகவே தூண்டிவிடுகின்றன. இவ்வகை அபிநயங்கள் ஆண்பாலாரினும் பெண்பாலாரிடத்தே இயற்கையாக அமைந்துள்ளன. இதனாலும் பெண்பாலாரே பாலரைப் பயிற்றுவதற்குக் கூடிய தகுதியுடையவராவர்.

**கவனிப்பு** :—அபிநயங்கள் அதிகப்பட்டவிடத்துப் பாக்களின் பொருள் அவ்வளவு தொனிக்கமாட்டாது. ஆர்வமுங் குறைந்துபோகும். பொருளைக் கிரகித்தலில் மலைவும் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. பாலர் கழக நிருவாகம்

பாலர் கழக நிருவாகமென்பதில் (1) பாலர் வகுப்புகளுக்கேற்றதோர் நேரசூசி தயாரித்தலும் (2) பாடசாலைத் தளபாடங்களை ஒழுங்குபட நிரைத்தலும் (3) படிப்பித்தற்குவேண்டிய உபகரணங்களைச் சேகரித்து வைத்தலும் (4) பாடவிதான மொன்று அமைத்தலும் ஆதிய இவற்றினோடு வரைதற்பாடம், கைவேலைப்பாடம் முதலிய தொழிற் பாடங்களுக்கேற்ற ஆயுதங்களைச் சம்பாதித்தலுமாகிய இவைகள் அடங்குவன.

**1. நேரசூசி.** இப்பாடசாற்றில் அணைக்கப்பட்டிருக்கும் நேரசூசி ஓர் மாதிரிச் சூசியாக அமைக்கப்பட்டுள்ளது. தத்தம் வசதிக்கேற்பப் பாலர் கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு எனும் இரு பிரிவுகட்கும் பொதுவாயதோர் நேரசூசியை அமைத்துக்கொள்ளுதல் நன்று.

**2. தளபாடங்கள்.** ஓர் வகுப்பறையில் இருபது (20) முதல் முப்பது (30) பாலர் வரையிற் கற்கவைக்கப்படலாம். மேற்பட்ட தொகையினரை ஒரே அறையில் வேலைகொள்வது பாலரது ஆரோக்கிய வாழ்விற்குத் தடையாகும். எழுத்துப் பீடங்கள் தகுந்த பலகைகளிற் செய்யப்பட்டு அழுத்தமுற்றிருத்தலும், என்றும் புனிதமாகப் பாதுகாக்கப்படுதலும் வேண்டும். பின்வரும் பிரமாணப்படி இவைகள் செய்யப்படலாம். நீள அகல உயரம் முறையே 20 அங்குலத்திற்குக் குறையாதிருத்தல்வேண்டும். ஆசனங்கள் 12 அங்குல முதல் 14 அங்குல உயரமுள்ளனவாகச் செய்யப்படலாம். இக் கதிரைகள் பிரம்பினல் வரியப்பட்டிருத்தல் சௌகரியத்திற்கு நன்றாகும். குறித்த தளபாடங்கள் பாலர் தாமாக இடம்விட்டுப் பெயர்க்கக்கூடியனவாயிருத்தல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. உபகரணங்கள்.** தேவைக்கேற்ப உயர்த்தியும் பதித்தும் வைக்கப்படக்கூடியனவும், இடம்விட்டுப் பெயர்க்கக்கூடியனவுமான கரும்பலகைகளே அதிக உபயோகமுடையன. புத்தகங்கள், படங்கள் என்பன வைப்பதற்கு அலுமாரிகளும் தேவையாகும். எண்பாடம் முதலியவற்றோடு சம்பந்தப்பட்ட துளைச் சட்டம், மணிச்சட்டம், 6 அங்குலத்திற்குக் குறையாத குச்சுக்கள் என்பனவும் சேகரிக்கப்படுதல் வேண்டும்.

**4. பாடவிதானம்.** வித்தியாபகுதியாராற் கொடுக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தை உதவியாகக்கொண்டு தத்தம் இட்டத்திற்கேற்ற பாடவிதான மொன்றை ஆக்கிக்கொள்ளுதலும் அவசியமாகும்.

---

# பாடத்திட்டம்

## கீழ்ப்பிரிவு

| விஷயவிரி | செய்கைமுறை |
|---|---|
| | **A. பேச்சு** |
| 1. கதைகள் <br> 2. பாலருக் கேற்ற பாக்கள். <br> 3. தின சரி வாழ்க்கையோடு தொடர் புடைய சம்பாஷணை. | 1. கதைகளைத் தழுவியுள்ள மனக்கருத்துக்களை வெளிப்படுத்துங் கிருத்தியங்கள். உதாரணமாக, நிறச்சுண்ணக்கட்டி கொண்டு கரும்பலகையில் வரைதல். மிருகங்களின் உருவங்களைக் காகிதங்களில் வெட்டுதல். கதை நிகழ்ச்சியைக்காட்டும் சித்திரங்களைக் கூட்டியமைத்தல். கதையை விளக்கக் களிமண்ணால் உருவங்கள்செய்தல். கருத்து வெளிப்பாட்டுக் கிருத்தியங்களைச் சேர்ந்த சம்பாஷணைகள் கதைகளைத் திரும்பக் கூறுதலும் நடித்துக்காட்டலும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயவிரி — செய்கைமுறை

2. பாலருக்கேற்ற பாடல்களிலிருந்து சிறுபாகங்களை மனனம்பண்ணிக் கூறுதல்.
3. தேகசுகம், பழக்கம், நடத்தை என்பவற்றைப்பற்றிய சம்பாஷணைகள்.

## B. வாசிப்பு

ஒரு பிரதமபாலசிக்ஷையி லடங்கியுள்ள அரிவரி எழுத்துக்களின் உச்சாரணம்.

1. பாடசாலையிலுள்ள பலவறு பொருட்களோடு அவற்றின் பெயர் எழுதியுள்ள காகித மட்டையைச் சேர்த்துவைத்து அப்பெயர்களை வாசிப்பித்தல்.
2. கரும்பலகையில் எழுதப்பட்டுள்ள சொற்களையும் வசனங்களையும் வாசித்தல்.
3. சொற்களைச் சேர்த்து வசனமாக்கல்.
4. வில்லைகள் கொண்டு அடுக்கப்பட்ட எழுத்துக்களை அல்லது காகித மட்டையில் வெட்டப்பட்ட எழுத்துக்களைக்கொண்டு சொற்களை ஆக்கல்.
5. மிக இலகுவான ஏவல்வினைச்சொற்களை எழுதிவிடப் பார்த்து அவ்வேவல்களை நிறைவேற்றுதல்.
6. முதற் பாலபாடத்தின் முன்னுரைவாசியை வாசித்தல்.

## C. எழுத்து

நெடுங் கணக்கில் (அரிவரியில்) உள்ள எழுத்துக்கள்.

1. கரும்பலகை, காகிதமட்டை, மணல், கற்பலகை என்பவற்றுள் ஒன்றின்கண் எழுதப்பட்ட எழுத்துக்கள், சொற்கள் என்பவற்றின் சுவடுபற்றி மேலெழுதுதல்.
2. எழுத்துக்களையும் சொற்களையும் ஆசிரியர் எழுதப் பார்த்தெழுதுதல்.
3. படித்த சொற்களைச் சேர்த்துப் பாலர் பாடமாக அமைத்தலும் வாசித்தலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விஷயவிரி | செய்கைமுறை |
| --- | --- |
| | **எண்** |
| 1. பிள்ளைகள் விரும்பியவரைக்கும் வரிசையாக எண்ணுதல். | 1. ஒன்றிரண்டெனக் கணக்கிடுதலமைந்த எண்ணல் விளையாட்டுகள். உதாரணமாக, டொமினோ, மீன்குளம், பம்பரம், விதைமுடிப்பு, காகிதங் கிழித்தல் என்பன. (இவைபோன்ற சுதேச விளையாட்டுகள்.) |
| 2. பத்துவரையும் எண்களின் குறியீடும் பாகுபாடும். | 2. விதைகள், மணிகள் என்பவைகொண்டு பத்துவரையுமுள்ள எண்களின் பெயர்களையும், குறியீடுகளையும் சேரவைத்து அறிதல். |
| 3. பருப்பொருட்கள் மூலமாகக் கூட்டலும் கழித்தலும். (தொகை 10 க்கு மேற்படாமல்) | 3. பத்துவரையுமுள்ள எண்களின் தொகையை மதித்தறிதல். பருப்பொருட்கள் மூலமாகவும் ஆட்டங்கள் மூலமாகவும் பத்துவரையும் எண்களின் பாகுபாடு செய்தல். |
| | **சரீர அப்பியாசம்** |
| ஆட்டங்களும் பயிற்சியும். (சிரமப்பயிற்சி) | (1) கோலாட்டமுதலிய தாளத்திற்கிசைந்த ஆட்டங்கள். (2) சுவை, நிறம், ஊறு, ஓசை, நாற்றம் என்ற புலன்களைப் பயிற்றற்கேற்ற ஆட்டங்கள். பிள்ளைகள் தங்கள் விருப்பம்போல ஆடுதல். (3) அணிநடை, பாத வரிசை முதலியன. |
| | **சங்கீதம்** |
| 1. சங்கராபரணம். (சுரங்களின் வேறுபாடறியமுன் இராகத்தைத் தொடங்கலாகாது) | 1. ஆசிரியர், வாயாற் பாடின அல்லது ஒரு வாத்தியத்தில் வாசித்த சுரங்களைக் கேட்டலும், மேல் ஸ்தாயி கீழ் ஸ்தாயிகளின் வேறுபாடுகளை உணர்தலும், சரளி சுரங்களைத் தெளிவாகப் பாடுதலும், சுரஸ்தானங்களை நன்கு அவதானித்தலும். இவ்விராகத்திற்குரிய இலகுவான பாடங்கள். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விஷயவிரி | செய்கைமுறை |
|---|---|
| 2. ஆதிதாளம் | 2. தாள வரிசையை உற்றுக் கேட்டுக் கையினால் தாளம்போடுதல். அபிநயப் பாக்களைப் பாடுதல். |

## பாலர் பகுதி மேற் பிரிவு

### A. பேச்சு

| | |
|---|---|
| 1. கதைகள். | 1. கதைகளைப்பற்றிக் கலந்துபேசுதல் பிள்ளைகள் தாமே கதைகூறுதல். |
| 2. விலங்கு, பறவை, மலர்கள் சித்திரப் படங்கள் என்பனபற்றியசம்பாஷணை. | 2. விவரணப் பேச்சுகள் நடத்தல், கதைகளையும், பேச்சுகளையும் விளக்குவனவாய கருத்து வெளிப்பாட்டுக் கிருத்தியங்கள் (கீழ்ப்பிரிவைப்போல) கதைகளை நடித்துங் காட்டுதல். |
| 3. பாலர்க்கேற்ற பாக்கள். | 3. பாலர்களுக்கேற்ற பாடல்களிலிருந்து சிறு பாகங்களை மனனம்பண்ணிக் கூறுதல். |
| 4. தேகசுகம், பழக்கம், நடத்தை என்பனபற்றிய பேச்சுக்கள். | 4. பாடசாலையில் நிகழுகின்ற உள்ளபடியான நிலைபரங்களை யொட்டிய தேகசுகம், பழக்கம், நடத்தை என்பனபற்றிய பேச்சுக்கள், சம்பாஷணைகள் என்பன. |

### B. வாசிப்புப் பாடம்

| | |
|---|---|
| முதலாம் புத்தகம். (பால பாடம்) | 1. ஒரு முதலாம் புத்தகத்திலிருந்து சில பகுதிகளை உரத்து வாசித்தல். அப்புத்தகத்திலுள்ள கதையைத் திரும்பச் சொல்லுதல். |
| | 2. சொற்பயிற்சி :— சொற்பயிற்சியில் பலவித உபாயங்கள் கைக்கொள்ளப்படலாம். உதாரணமாகக் காகித மட்டையில் சொற்களை எழுதிக்கொள்ளுதல். அச்சொற்களைக்கொண்டு வசனங்களை ஆக்குதல். சொற்களைப் பற்றிய ஆட்டம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விஷயவிரி | செய்கைமுறை |
|---|---|
| | **C. எழுத்துப் பாடம்** |
| முதலாம் புத்தகத்திலிருந்து சில பகுதிகளை எழுதுதல். | பென்சிலால் எழுத்துக்கள், சொற்கள் என்பவற்றை எழுதுதல். இலகுவான பாகங்களைப் பிரதிபண்ணுதல். இலகுவான சொற்களைச் சொல்ல எழுதுதல். படித்துக்கொண்ட சொற்களைப் பாலபாடமாக அமைத்தலும் வாசித்தலும். |
| | **எண்பாடம்** |
| 1. ஒன்றுகளாகவும்பத்துக்களாகவும் 100 வரையும் எண்ணுதல். | 1. காற்றூடிப்பட்டம், பெட்டி, சிற்றில், காகித உறை என்பன செய்தலைத் தழுவி அடிமட்டங்கொண்டு அளத்தல். |
| 2. நூறுவரையுமுள்ள பத்துக்களின் பெயர்களை எழுதுதல். | 2. பிள்ளைகளின் சரீர அளவுகளை அளந்து காணுதல். உயரம், மார்பின் அளவு முதலியன. |
| 3. இலக்கங்கள் எழுதுதல். | 3. ஒருசதம், பத்துச்சத நாணயங்கள் (ஒரு ரூபாவரையும்) கொண்டு கடைவைத்து விளையாடல். |
| 4. இருபது வரையும் எண்களின் பாகுபாடு. | 4. எண்சட்டம், கனவடிவங்கள், தடிகள் முதலியவைகொண்டு எண்கள் அமைத்தல். |
| 5. கூட்டலும் கழித்தலும் (தொகை 20க்கு மேற்படாமல்.) | 5. கூட்டல் கழித்தல்களில் இலகுவான வினாக்கள். எழுத்தில் எழுதிச் செய்யற்பாலன. |
| 6. மணிச்சட்டங்கொண்டு 2-ம், 3-ம் வாய்பாடு ஆக்கல். | 6. சரீர அப்பியாசம், சங்கீதம் } பாலர் கீழ்ப்பிரிவைப்போலும். (மேலதிகமான ஆட்டங்களும் பாட்டுக்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரைதற்பாடம்

உருவம் மதித்தறிதல். சாதனம்:— பென்சிலும் சுண்ணக்கட்டியும்.

1. புற உருவம் வரைதல். நேர்கோடு வளைவு கோடுகள் அமைந்த இலகுவான பொருட்கள்.
2. நிறச்சுண்ணக்கட்டி கொண்டு திரட்சியான உருவங்கள் வரைதல்.
3. மாதிரி உருவம் வரைதல் (Patterns) அடிமட்டங்கொண்டு நேர் ரேகையாலமைந்த மாதிரி உருவம் வரைதல். தமிழ் எழுத்தைத் தழுவிய கரைமாதிரிகள்.
4. ஞாபகத்திருந்து வரைதல்.

# 21. பாலருக்கேற்ற பாக்கள்

## 1. தினந்த கடமைகள்

மெட்டு (வெளிச்சமாக்கி இரவு பகலை)

1. சின்னஞ்சிறு பாலகர் நாம்
பின்னமின்றிப் பண் பாடி
நன்னயமாக நடித்திடுவோம்
நண்பரே நாமே யொன்று கூடி

2. வைகறையில் துயில் நின்றெழுந்து
விரைவுடன் முகங்கை கால் கழுவி
வணங்கி ஆண்டவன் அடிதொழுது
வந்தனை செய்வோம் நாம் மிகவே.

3. பசியாயிருக்கிற தம்மா வென்போம்
கசிந்து மனந் தானுருகி
சுசியாய் அப்பந் தந்திடுவார்
பசியாறிப் போவோம் பள்ளிக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தலைக் கெண்ணெய் வைத்து வார்த்திடுவார்
தயவாய்ப் பொட்டும் இட்டிடுவார்
தங்காது ஏடுகை தாமெடுத்து
சங்கையாய்ப் பள்ளிக்கு ஏகுவமே.

5. போகும் போது தானெதிராய்ப்
பொல்லா மோட்டோர் குதிரை வண்டி
கொல்லும் யமன் போலே வரும்
மெல்லக் கான் வழி ஏகுவமே.

6. கைகளை வீசிக் கடு நடையாய்
காலைப் பொழுது போகுமுன்னே
கல்விச் சாலை சென்று சாற்குக்
கனிவொடு வந்தனஞ் சொல்வோமே.

## 2. சிரமப் பயிற்சி

ஒன்றிரண்டு எண்ணினோர்கள்
முன் பின் ஓரடிவாங்கியே
நின்று நிரை நேரேயாக்கி
இன்று விளையாடுவோம் (1)

கரம்மடித்து இடுப்பிணைத்து
சிரம் நிமிர்த்தித் தாழ்த்தியே
சரித்துவலம் நிமிர்த்திச்சிரம்
சரித்து இடம் வாங்குவோம் (2)

பாத மிரண்டும் ஒருங்கிணைத்துப்
பக்கம் விடுத்து வாங்குவோம்
பங்கமின்றி அவ்விதமே
பாலர் சுற்றி ஆடுவோம். (3)

கைகள் இரண்டும் பக்கம் நீட்டி
கருத்துடன் அவை மடித்துமே
காட்டுவோம் மேல்நீட்டிக் கோத்து
குனிந்து பாதந் தொட்டெழுந்து (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. பாட்டிவீட்டு ஓட்டைப்பானை

பண் (கைராட்டினமே கதர்...)

பாட்டி பார்வதி வீட்டுப்பானை யோர்புறம்
ஓட்டைசிறு ஓட்டைவழிச் சென்ற தெலியொன்று
ஓட்டைசிறு ஓட்டைவழிப் பட்ட தெலியொன்று (1)

கொண்டற் கடலைமிகக் கொண்ட தப்பானை
கண்டதெலி உந்திவீங்க உண்டதே கேளீர்
உண்டதெலி உந்திவீங்கிக் கொண்டதே ஐயா (2)

உந்திபெருத்து உடல் கொண்டு வெளியே
வந்திட விரைந் தெலிதான் நொந்து வாய்விட்டே
வந்திட நினைந்தெலிதான் "கீக்கி" என்றதே (3)

பாக்கிய மென்றோர் பேரப்பிள்ளை யிருந்தாள்
பாக்கியத்தின் வீட்டினிலே பூனை யொன்றுண்டு
பாக்கியத்தின் வீட்டினிலே பானையுமுண்டு (4)

பானையுள் எலிபடும் பாட்டினைக் கண்டாள்
"பூனை எலியைப்பிடிக்கும்" என்பதறிந்தாள்
பூனை எலியைக் கடிக்கும் என்றேநினைந்தாள் (5)

"பூஸ், பூஸ்" எனவே பூனை "மியா, மியா" வென்று
பாச்சலிலே பாக்கியத்தின் பின்னே போயிற்று
பாச்சலிலே பாக்கியத்தின் முன்னே ஏகிற்று (6)

பானைமீதுள்ள மூடி தன்னையெடுத்தாள்
ஏனோ எலி தானோவென்று ஓடியதையா
பூனை "தக்" எனவே பாய்ந்து கொன்று தின்றதே ()

கள்ள வழியிற் செல்லக்கூடாதே வேண்டாம்
உள்ளபடி ஈசன் தந்த கற்பனைப்படி
எள்ளவும் பிசகாமல் என்றும் வாழ்வோமே (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. கோழிக்குஞ்சும் ஆலம் பழமும்

1. குஞ்சுக் கோழி நானல்லோ
அஞ்சமாட்டேன் தானல்லோ
கொஞ்சந் தீனி தேடவே
செல்வேன் ஆலமரத்தண்டை.

2. ஐயோ ஐயோ இடியொன்று
என் தலைமேல் விழுந்ததே.
பொய்யோ இது மெய்யன்றோ ?
அரச சமுகஞ் செல்வேனே.

3. கோழி கோழி எங்கு நீ
கேரிக் கேரிச் செல்கின்றாய் ?
ஆகாதே நீ போகாதே
அந்தோ ! இடி விழுந்ததே.

4. வாத்தே வாத்தே எங்கு நீ
தத்தித் தத்திச் செல்கிறாய் ? (ஆகாதே)

5. நாராய் நாராய் எங்கு நீ
நடுங்கி நடுங்கிச் செல்கிறாய் ? (ஆகாதே)

6. மயிலே மயிலே எங்கு நீ
மன்னி மன்னிப் போகின்றாய் ? (ஆகாதே)

7. பட்சிகாள் நீர் வந்தது
பகர்வீர் நானுங் கேட்கவே.
காடு சென்ற குஞ்சுக்குக்
கேடாய் இடி விழுந்ததே.

8. எழுந்து ஓடும் பட்சிகாள்
ஏனோ புத்தி கெட்டனை ?
விழுந்த தாலம் பழமன்றோ ?
வீணே கலங்கி வாடாதீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. யுக்தியுள்ள அடிமை

பண் (பச்சைமலே பவளமலே)

1. அடிமை ஒருவன் களவுசெய்து
மறியலாகப் பிடிபட்டான் (2)
நெடுமை மிக்க கோபுரத்தின்
நுனியிலே அடைபட்டான்.

2. அவனின் மனைவி அழுது அழுது
அந்தோ பாவம் முறையிட்டாள் (2)
தவமேகிடந்து சாவதென்றாள்
தப்பியோடி வராவிட்டால்.

3. வந்து வந்து எந்தநாளும்
தேம்பித் தேம்பி அழுவளே (2)
குந்தியிருந்து கோபுரத்தின்
கீழே விழுந்து தொழுவளே.

4. வண்டு ஒன்று கொண்டுவந்து
நெய்தடவி நெற்றியில் (2)
மூன்று சிறிய பெரிய கயிறு
கட்டிக் காலில் விடு என்றான்.

5. மனைவி சொற்படி செய்ததாலே
மகிழ்ந்து கயிற்றைக் கம்பியில் (2)
அணையக் கட்டி அதன்வழியே
வந்து சேர்ந்தான் அடிமையே.

6. அரசன் அறிந்து முரசறைந்து
அடிமையைப் பிடிப்பித்தான் (2)
வீரனென்று மெச்சி அவனை
விடுதலையே செய்வித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. சுகாதாரக் கும்மி

சீர் பெறு நாட்டைச் சிதைத்து வருத்திடும்
சீர் கெட்ட மலேரியா என்ெருரு நோய்
பாரிற் பரந்தது பண்ணுங் கொடுமைகள்
பன்ன முடியாதே தோழிப் பெண்காள். (1)

துட்ட நுளம்பது கெட்டது கொட்டிறைற்
பட்டது எங்குடி கெட்டதுவே
முட்டினு மாகாதே மூஞ்சி வெளுத்திடும்
வாட்டியெம் ரத்தத்தை யோட்டிடுமே. (2)

மஞ்சள் நிறத்தினிற் கஞ்சுமடி யென்றும்
விஞ்சு புகைக்கது கெஞ்சுமடி
கொஞ்சங் கவனமெடுத்திடில் நாமதைக்
கெஞ்ச வைப்போமன்ேற தோழிப் பெண்காள். (3)

காட்டையழித்து நல் நாடுகளாக்கிடின்
காட்டுச் சுரங் கடி தோட்டெடுக்கும்
வீட்டில் நல் நீரை யாம் காச்சிப் பருகிடில்
வாட்டமின்றி வாழ்வோம் தோழிப் பெண்காள். (4)

மேலைத்தேய முறை வைத்தியர் தந்திடும்
கால மருந்தினை உண்டிடில் நாம்
சீலமாய் வாழ்விற் சிறந்திடலாமன்ேற
செப்பினேம் கேளுங்கள் தோழிப் பெண்காள். (5)

## 7. விதைப்புக் காலம்

1. விதைப்புக்காலம் வந்ததே
விதை விதைக்க வேண்டுமே
விதைப்போம் வாரும் விதைப்போமே
விதைப் போம் விதையை விதைப்போமே.

2. கலப்பை கரத்தில் எடுப்போமே
கவனமுடனே உழுவோமே
உழுவோம் வாரும் உழுவோமே
உழுவோம் நிலத்தை உழுவோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. விதையைக் கரத்தில் எடுப்போமே
விரைவாய் வீசி விதைப்போமே
விதைப்போம் வாரும் விதைப்போமே
விதைப்போம் விதையை விதைப்போமே.

4. இறைப்புக் காலம் வந்ததே
இன்பமுடனே இறைப்போமே
இறைப்போம் வாரும் இறைப்போமே
இறைப்போம் நீரை இறைப்போமே.

5. அறுப்புக்காலம் வந்ததே
அரிவாள் கொண்டு அறுப்போமே
அறுப்போம் வாரும் அறுப்போமே
அறுப்போம் கதிரை அறுப்போமே.

## 8. ஐந்து சிறு சிட்டுக்குருவி

1. ஐந்து சிட்டுக்குருவி வாசலிலேபார்
ஒன்று பறந்திட்டால் மிகுதி நான்குதான்

**பல்லவம்**

குருவி, குருவி—கீ, கீ, கீ
குருவி, குருவி—பறந்தோடு

2. நான்கு சிட்டுக்குருவி வாசலிலேபார்
ஒன்று பறந்திட்டால் மிகுதி மூன்றுதான் (குருவி)

3. மூன்று சிட்டுக்குருவி வாசலிலேபார்
ஒன்று பறந்திட்டால் மிகுதி இரண்டுதான் (குரு)

4. இரண்டு சிட்டுக்குருவி வாசலிலேபார்
ஒன்று பறந்திட்டால் மிகுதி ஒன்றுதான் (குருவி)

5. ஒரு சிட்டுக்குருவி வாசலிலேபார்
அது பறந்திட்டால் மிகுதி இல்லையே. (குருவி)

PUBLIC LIBRARY
27 SEP 1969
COLOMBO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org